# தென்மொழி

## பன்னாடைப் புலவர் !

16 JUN 1965

இலக்கணத்துப் புலியென்பார்; இலக்கியத்துத்
தூணென்பார்; இறுமாப் புற்றுத்
துலக்கமிலா வெற்றறிவால் பிறர்தம்முன்
துகளென்பார்; தொண்டு பேணார்!
விலக்கவிலாச் சூழ்நிலையால் ஓரோவொருகால்
வினைமுடிப்பின் வியப்பார் தம்மை!
கலக்கலுறும் பன்னாடைப் புலவரிவர்;
உண்மையர்க்குக் காற்கீழ்ப் புல்லே!

இரட்டை ( ஆனி )
தி. பி. 1996

ரூ 0 50 காசு

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

# தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால் அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே

சுவடி 3 | ஆனி தி. பி. 1996 ( 1965 சூன் ) | ஓலை 5

## அந்த நல்ல நாள் . . . !

'தலைவலி போய்த் திருகுவலி வந்தது' போல இந்தியைத் தென்னாட்டு மக்கள் எதிர்க்கின்றனர் என்பதற்காக, இந்தியப் பேராயக்கட்சி உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு உடனடியாகக் கூடி, 'விரும்பியோ விரும்பாமலோ காலப்போக்கில் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று கூறப்பெற்று வந்த இந்தி மொழியைக் கல்லூரிப் படிப்பு வரை 'கட்டாயமாகப் படிக்க வேண்டும்' என்ற நிலையை ஏற்படுத்தி விட்டது. இந்தியப் பேராயக்கட்சி அமைத்த அக்குழுவில் தென்னாட்டைச் சார்ந்தவர் ஒருவரும் இலர் என்பதும், அனைத்திந்தியப் பேராயக் கட்சித் தலைவருக்குக் கூட அதில் இடம் ஒதுக்கப் பெறவில்லை என்பதுமே, இக்குழு என்ன தீர்மானத்தைக் கொண்டுவரப் போகின்றது என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ள உதவின. இப்படிப்பட்ட நடுநிலையற்ற ஒரு குழுவின் அமைப்பும், அக்குழு வழங்கிய தீர்ப்பின் முடிவும் இந்திய வரலாற்றையே கறை படிந்ததாகச் செய்து விட்டதை எதிர்காலம் உணர்த்தும்.

---

சிறப்பாசிரியர்: புலவ, பண்டிக ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.

முடிவைப் பொறுத்தமட்டில் இக்குழுவால் தீர்மானிக்கப் பெற்ற கொள்கைகளுள் இன்றியமையாதது இந்திய நாட்டினர் ஒவ்வொருவரும் மும்மொழிகளைக் கட்டாயமாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதே! இப்படிச்சொன்ன அளவிலேயே, அம்மொழிகள் தாய்மொழி, ஆங்கிலம், பிறிதோர் இந்தியமொழி என்பவாகத்தாம் இருக்கும் என்று நாம் கருதிக் கொண்டிருந் தோம். ஆனால் குழு இந்தச் சலுகையை இந்தி பேசுவாருக்கு மட்டும் அளித்துவிட்டு, இந்தி பேசாத பிறரின் வகையில் பிறிதோர் இந்திய மொழி என்பதற்கு இந்திமொழி என்று அழுத்தந் திருத்தமாக வரம்பிட்டுள்ளது. மும்மொழித் திட்டந் தான் இந்திய நாட்டிற்குத் தேவை என்று கருதப்பெறுமானால், அத் திட்டத்தில் தாய்மொழி, ஆங்கிலம் அரசியல் சட்டத்தில் கூறப்படும்பிற பதினான்கு மொழிகளுள் ஏதாவதொன்று என்று வகுப்பதே சரியான—நேர்மையான முடிவாக இருக்க முடியும். அப்படி இருக்க, தென்னிந்தியர் மட்டும் இந்தியையும், வட இந்தியர் ஏதாமோர் இந்திய மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டுமென்த் திட்டம் அமைப்பானேன்? குறிப்பாக வடவன் ஒருவன் இந்தி, ஆங்கிலத்துடன், வடநாட்டு மொழிக ளுள் ஒன்றுகவும் இந்தியொடு ஏதோ ஒருவகையில் தொடர்பு கொண்டதாகவும் இருக்கும் உருது, குசராத்தி, மராட்டி முதலிய மொழிகளுள் ஒன்றை மிக எளிதாகப் படித்துக்கொள்ள லாம். ஆனால் தென்னிந்தியர் மட்டும் இந்தியைக் கல்லூரி வரை கட்டாயம் படித்தே தீரவேண்டும் இஃது எப்படி நடுநிலையான முடிவாகும் என்று நமக்குப் புரியவில்லை. இந்த முடிபால் 'இந்தியை எல்லாரும் கட்டாயமாகப் படித்தே தீரவேண்டும்' என்ற முன்னைய கொள்கையில் எவ்வகையான மாற்றமும் ஏற்படவில்லை என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஆம்! தென்னிந்தியர் வட இந்தியரால் ஆளப் பெறும் வரை இதில் எவ்வகை மாற்றமும் ஏற்பட வழியில்லை என்பதே முடிந்த முடிபாகும்!

பேராயக் கட்சிக் குழுத் தீர்மானம் இங்குள்ள தென்னகப் பேராயக் கட்சியினருக்கும், ஏன் பேராயக் கட்சித் தலைவராக உள்ள திரு. காமராசர்க்கும் மகிழ்ச்சி யளிப்பதாகவே கூறப்படு கின்றது. 'இந்திய ஆட்சி அலுவல் தேர்வுகளை அவரவர் தாய் மொழிகளிலும் எழுதலாம் என்று தீர்மானிக்கப் பெறும்வரை தாம் விட்டுக்கொடுக்கப் போவதில்லை' என்று வாய்ப்பறை கொட்டிய திரு. காமராசர் கூட இம்முடிவை மனமார ஏற்றுக் கொண்டார் என்றால், தென்னிந்திய — குறிப்பாகத் தமிழக மக்கட்கு இனி எத்தகைய பாதுகாப்புமில்லை என்பதே பொருளா கும். கல்வி அமைப்புகளையும், அறிவு வளர்ச்சியையும் கூடப் பொருட்படுத்தாமல் இந்தியை எல்லா மக்களிடையேயும் திணிப்பதே இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் ஒரு தலையாய

செயல் என்று அரசினர் கருதிக் கொண்டிருப்பாரானால், இந்த நாட்டில் மக்கள் கருத்துக்கு மதிப்பளிக்கப் பெறுகின்றதா என்பதே நமக்கு ஐயமாக உள்ளது. நாட்டின் ஒற்றுமையே இந்தி படிப்பதில்தான் இருக்கின்றது என்று கருதிக் கொண்டிருக்கும் இவர்தம் அரசியலறிவுதான் என்னே!

வட நாட்டினர்க்கு ஆங்கிலம் புது மொழியன்று. ஆங்கிலத்தையும் மும்மொழித் திட்டத்துள் ஒன்றாக ஆக்கியிருப்பது ஆங்கிலத்தில் மக்களெல்லாரும் பேரறிவெய்த வேண்டுமென்ற நோக்கத்தோடன்று. இஃதுஇந்தியை நுழைப்பதற்காக அரசினர் செய்து கொண்ட ஒரு கண் துடைப்பு வேலையே! இப்பொழுது போட்டுள்ள திட்டப்படி இந்தி தொடர்ந்து கட்டாயமாகப் படிக்கப்பெற்று, எல்லாரும் இந்தியறிவு பெறுவார்களானால், அப்பொழுது இந்தி மொழியே நாட்டின் பெரும்பான்மை மொழி என்று கருதப் பெற்று ஆங்கிலத்தையும் எளிதில் அகற்றி விட முற்படுவர். ஆக இப்பொழுது போட்டுள்ள திட்டம் இந்தியை மக்கள் கற்றுக் கொள்ளும் வரை ஆங்கிலமும் உடனிருக்கும் என்ற முந்தைய திட்டத்திற்குக் கொள்கையளவில் எள்ளின் மூக்கத்துணையும் மாறுபட்டதன்று. இதற்கு இத்திட்டத்திலேயே வழிவகுக்கப் பெற்றுள்ளது. அதாவது, "பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படும் இந்தியின் தன்மை படிப்படியாக உயர்த்தப் பெறும். அது வளர்ச்சியுறவும் அதன் பயனைப் படிப்படியாக விரிவு படுத்தவும் ஒரு திட்டம் வகுக்கப் பெற்றுச் செயல் படுத்தப்பெறும். இதன் விளைவாக ஆட்சிமொழியாகவும் நாட்டின் தொடர்பு மொழியாகவும் இந்தி பயனுள்ள வகையில் கையாளப்பெறும்" என்பதே இத்திட்டத்தில், இந்திக்கு அளிக்கப் பெற்றிருக்கும் அரச வரவேற்பாகும் இதன் உட்பொருள் என்னவென்றால், தாய்மொழியும் ஆங்கிலமும் வெறும் பள்ளிக்கூட மொழிகளாகப் பயன் படுத்தப்பெறும்; படித்துப்பட்டம் பெற்றுவிட்டால் ஆட்சி மொழி என்ற காரணத்தால் இந்திதான் அரசினர் ஆவணங்களிலும் நடைமுறையிலும் பயன் படுத்தப்பெறும் என்பதுதான். இப்பொழுது பாடத்திட்டத்தில் உள்ள 'பல் சுவைப்பகுதி' 'இயற்கையும் தோட்ட வேலையும்' 'எசுக்கிமோ, இலாப்லாந்து இனத்தாரைப்பற்றிய கதைகள்' 'சீல்' மீன்வேட்டை' முதலியன அரசினர் வேலைகளுக்கோ பிற வாழ்க்கைத்துறைகளுக்கோ வந்துவிடின் பயன்படாமற் போய்விடுவதைப் போல், வெறுஞ் சுவைக்காகப் பயின்ற தாய்மொழி ஈடுபாடும் ஆங்கில மோப்பமும் மறக்க வேண்டியனவாகப் போய்விடும்! இந்தி ஒன்றே எங்கும் தலைவிரித்தாடுகின்ற அந்தநிலையில் பள்ளிக்கு மட்டுமே உதவிய அப்புள்ளிக் கணக்குகளைப்பற்றி எவர் கவலைப்படுவார்? இத்தகைய நிலையை உருவாக்குவது என்பதுதான், 'இந்தி பயனுள்ள வகையில் கையாளப் பெறும்' என்பதற்கான

உட்பொருள் இந்தியால் இந்தவகைப் பயனை மக்கள் பெற்ற பின் காலப் போக்கில் பிற பயனில்லா வெறும் படிப்பு மொழி களான தாய் மொழி, ஆங்கிலம் இவற்றைப் பற்றி மக்கள் எவ்வாறு கருத்துக் கொள்ள முடியும்? எனவே இம் மும்மொழித் திட்டம் என்பது பள்ளிக்கூட அளவில் நம்மவர்க்கெல்லாம் உச்சி குளிரும்படியான ஒரு திட்டமே! ஆனல் அது படிப்படி யாக (அத் திட்டத்தில் கூறியவாறு) இந்தியை இந்தியாவின் ஒரே மொழியாகச் செய்து, ஒரே மொழி, ஒரே கொடி, ஒரே கட்சி என்ற ஒருமைப்பாட்டு (!) அமைப்பில் புதிய இந்தியாவை உருவாக்கும் நோக்கம் கொண்டதே! இந்தக் கனவின் அடிப்படையில் வடவர் கட்டியிருக்கும் வானக் கோட்டைதான் இம் மும்மொழித் திட்டமாகும்!

நாமெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தீர்ப்பு வழங்கப் பெற்றுவிட்டது. தமிழர்களின் மொழிக் கிளர்ச்சிக்கு முற்றுப் புள்ளியிட்ட தென்னக் கட்சித் தலைவர்கள்தம் அமைதிப் போக் கிற்குப் பயன் கிடைத்துவிட்டது. காட்டாற்று வெள்ளம்போல் கரை புரண்டெழுந்த தமிழர்தம் ஆட்சியுணர்வுக்கு அணையிட் டடக்கிய அரசியல் வல்லுநர்களுக்கு இத் திட்டம் பொந்திகை தருவதுதானு? இல்லை என்றால் அவர்கள் இத் திட்டத்திற்கு என்ன மாற்றுத் திட்டம் வகுக்கப் போகின்றனர்? ஏமாற்றும், மொழிவெறியும் குருதிவேட்கையும் கொண்டலையும் ஆட்சி ஓநாய்களின் ஊளைகள் அடங்குமாறு அவர்கள் செய்யப் போகும் மாற்றந்தான் என்ன? தமிழர்களையும் அவர்கள் வளர்த்த வாழ்வியல் முறைகளையும், அவர்தம் தனிப்பெருஞ் சொத்தான ஆற்றல்வாய்ந்த மொழியினையும் வடவர்க்குப் படையல்களாக்கி விடப் போகின்றனரா? இல்லை, தொண்டை நீர் வற்ற வற்றக் கத்திப் பார்த்துவிட்டுப் பயன் கிடைக்க வில்லையானல் இந்திக்காரன் தரும் 'தண்டாப் பானி' யில் ஒரு குவளை வாங்கிக் குடித்து நாவறட்சியைத் தணித்துக்கொள்ளப் போகின்றனரா? ஆட்சி மேடையைக் கட்சி மேடையாக்கிக் கொண்டுள்ள பேராயக் கட்சியினரிடம் எதிர்பார்த்துக் கிடப்ப தற்கு இனியும் என்ன உள்ளது? காந்தியார் பெற்றுத்தந்த அரசியல் உரிமையைக் காந்தியார் போலவே இருந்து பெறப் போவதே உண்மையான திட்டமானல், காந்தியார்க்கு இரங்கி- அவரின் தொல்லைதராக் கொள்கையை மதித்து நாட்டுரிமைதந்த வெள்ளையனு இக்கால் ஆள்வது? ஆட்சியமைப்பில் பிறரை யும் பிறர் உள்ளுணர்வுகளையும் மதிக்கின்ற உயர்ந்த மனப் போக்கு அவனுடனேயே கப்பல் ஏறிவிட்டதே! இக்கால் கொள்ளையர்தம் மனப் போக்கமைந்த நொள்ளையர்களன்றே நம்மை ஆள்கின்றனர், இவர்தம் உள்ளத்தின் எந்த ஒரு மூலை யிலும் இரக்கமும் நல்லெண்ணமும் கிடையாவே! இவற்றை

தொடர்ச்சி 16- ஆம் பக்கம்.

# வில(ா)ங்கு

– சிறுபாவியம்.

பொன்னம் மாள்ஒரு புதிய ஆசிரியை!
அன்னம் போலும் அழகு நடையினாள்!
மயிலைப் போலும் பழகு சாயலாள்!
குயிலைப் போலும் கனிந்த குரலினாள்!
மலரைப் போன்ற தூய மனத்தினாள்!
நிலவைப் போன்று நிலவும் முகத்தினாள்!
கொடியைப் போலும் குலுங்கும் இடையினாள்!

மடியிலா நங்கை மனம்போல் தூய்மையும்
இனித்த காதலும்; இளமையும் அழகும்
பனித்த மொழியும்; பழகு சீர்மையும்
வாய்ந்த ஒருவனை மணந்த வாய்மையாள்!
ஏய்ந்த அன்பினால் இருவரும் தம்முள்
ஒத்துப் போகும் உயர்ந்த பண்பொடும்
தொத்திக் கொள்ளும் தூய்மை அன்பொடும்
ஒன்றிப் பழகி உயர்ந்தோர் இல்லறம்
நன்றே நடத்தி வருகையில். அவளை
அண்மையில் உள்ள சிற்றூர் அமைந்த
பெண்கள் பள்ளிக்கு மாற்றிப் பிரித்தனர்!

ஆளன் அரசினர் அலுவல் பார்ப்பதால்
வாள்விழி யாளொடு வராமற் போகவே,
வெட்டப் பட்ட உயிரொடும், கடமையால்
கட்டுப் பட்ட உடலொடும், நெஞ்சொடும்
விட்டுப் பிரிகிலாச் சிட்டுக் குருவிகள்
மட்டிலாத் துயரொடும் வாழ்க்கை நடத்தின!

ஆயிரம் மடல்கள் இடையில் பறந்தன;
சேயிழை நினைவும் சேயோன் நினைவும்
மடலொடு சென்று மடலொடு மீண்டன!
உடலொடு கிடவா உயிர்கள் துவண்டன!

கிழமைக் கொருமுறை கிளிமொழி வருவான்!
அழகியை அனுப்பிய அடுத்த நாளே,
ஆளனும் வண்டியில் அவள்வயின் சேர்வான்!
நாளும் கிழமையும் மாதமும் நகர்ந்தன.
இடையிடைக் கல்வித் துறையினுக் கெழுதிய

துரை மாணிக்கம்

மடல்களோ திரும்பி மறுப்பொடு மீண்டன!
அன்பு நெஞ்சினர் அவலம் உணரா
வன்பு மனத்தினர் அவர்களைக் கூட்டிலர்!

இப்படி இருக்கையில் ஒருநாள் இவளுக்கு
முப்படியாய் அவன் நினைவு மூளவே,
வெள்ளியும் காரியும் விடுமுறை பெற்றுப்
பள்ளி முடித்துப் பறந்து சென்றே
இறுதியாய்ப் போகும் வண்டியில் ஏறி
உறுதியாய் வீடுபோய் உயிர்க்கும் நினைவொடே
உந்து வண்டிக்குக் காத்தாள் ஒண்டொடி!
அந்த வண்டியோ அன்றைக்குப் பழுது!
மொய்த்த நினைவினால் மொய்குழல் குலைந்து
வைத்த காலடி வருந்திடத் திரும்பி
இரவு பத்துக்கு இருப்பிடம் வந்தாள்!
திறவுகோல் எடுத்தே அறையினைத் திறந்தாள்!
பொய்யாய்ப் போன வாழ்க்கையால் புலம்பித்
தொய்ந்த உடலொடு தொப்பெனப் படுக்கையில்
சாய்ந்தாள் அன்பின் சாகா நெஞ்சினள்
ஏய்ந்த அரைமணி ஏகிய பின்றை
பள்ளிக் காவலன் பதறிட வந்தே
அம்மா, அம்மா, என்றே அரற்றி
"இம்மா நேரமா இங்குதான் இருந்தார்;
உங்களைப் பார்க்க வேண்டுமென் றுரைத்தார்!
உங்களைக் காணாது போகவே அவரைப்
பள்ளியில் இருத்தி, வண்டியைப் பார்த்தேன்
இல்லையென் றறிந்தே இங்கே வந்தேன்!
உடனே வருக" என்றவன் உரைக்க,
உடனே எழுந்தவள் "ஒருகால் அவரே
என்னைப் பார்த்திட இங்குவந் தாரோ?
என்னினும் அவர்திறம் இருபடி உயர்ந்ததோ?
இறைவா; அவராக இருந்திடல் வேண்டும்!
நிறைவே றுதோ, எண்ணம் நிலைத்திடின்"
என்றே நினைத்துக் காவலன் ஏக
ஒன்றே யன்றிப் பிறநினை வில்லாள்
பள்ளி யடைந்தாள்! பள்ளியின் தனியறை
உள்ளே மின்விளக் கொளியினில் ஒருவர்
நின்றுகொண் டிருந்தார்! நினைவிலாப் புதுமுகம்!
முன்றிலில் நின்று, மணந்தான் தன்னுடற்
சீரைப் பார்த்திட வந்தவள், இக்கால்
"யாரைப் பார்த்திட வேண்டும்?" என்றாள்.
ஊரே அடங்கி யிருந்ததால் இவ்வொலி
கார்முகில் இடிபோல் கேட்டது! கயல்விழி,

விடையெதும் வராமற் போகவே வெடுக்கென
நடையைத் திருப்பினுள்! அதன்பின் நடந்தவை
ஒன்றும் அறியாள் ஒண்டொடி,
சென்றுகொண் டிருந்தது நிலவிலா இரவே!

## 2

மண்விழிப் புற்றதாய்க் காலை மலர்ந்தது!
கண்விழிக் கையிலே கட்டிலிற் கிடந்தாள்!
புண்போல் மெல்லுடற் பொருத்தெலாம் பெருவலி!
விண்போலும் நெஞ்ச விரிவெலாம் சாவொலி!
முன்னிரா நடந்த நிகழ்ச்சிகள் முன்பின்னுய்ப்
பொன்னம் மாளின் நினைவினில் படரவே
'ஓ'வென் றழுதாள்; 'ஆ'வென் றலறினுள்!
சாவாமல் செத்த துயரை நினைத்தாள்!
நினைத்ததும் நெஞ்சம் நெருப்பாய்ச் சுட்டது!
தனைத்தான் அறைந்தாள்! தலைதரை மோதினுள்!
எழுந்தாள்! புலம்பினுள்! இளமுகம் கீறினுள்!
விழுந்தாள்! புரண்டாள்! வெதும்பினுள்! உருண்டாள்!
சாவொன்று வந்து சாராதோ என்றுள்!
தூவென்று மக்கள் கூட்டத்தைத் துப்பினுள்!
பெண்ணைப் பிழைசெயும் உலகைப் பழித்தழுதாள்!
கண்ணில் கனப்பேற்றிக் குருதிநீர் பிழிந்தாள்!
அறநூல் சாடினுள்! அகநூல் நகைத்தழுதாள்!
புறநூல் தனக்குப் புத்துரை எழுதினுள்!
ஆளனை எண்ணி வாயரற்றி அங்காந்தாள்!
வாள்போல் தமைப்பிரித்த அலுவலைத் தூற்றினுள்!
ஆசிரியை என்றே அரசினர் தந்த
மாசுநிகர் பட்டச் சான்றிதழைத் தூள்செய்தாள்!
கண்முன் கிடந்த பொருள்கள் சிதறடித்தாள்!
பண்மறந்து போன பச்சைக் கிளியாய்,
சொல்மாறிச் சொல்லி உள்ளம் சுண்டினுள்!
அல்வழிக் கவலை ஆளாக்கி யோனைக்
கொல்வழி என்னெனக் குறிக்கொண் டரற்றினுள்!
தன்னைக் கவின்செய் அணிமணி தவிர்த்தாள்!
மின்னிடை முரிய மேனியை வீழ்த்தினுள்!
வளப்பம் கொடுத்த இளமையை ஏசினுள்!
உளப்பாங் கில்லா உலுத்தரை இகழ்ந்தாள்!
கல்வித் துறையைச் சாவித்தாள்! கற்ருேர்
புல்லிய அறிவைப் புழுதியென் றிகழ்ந்தாள்!
இன்ன வாருய் என்ன அரற்றியும்
பொன்னம் மாளின் உள்ளம் பொருததாய்ச்
சாம்பிய உடலொடும் உயிரொடும் துடித்தது!
தேம்பித் தேம்பிச் சிறிய மகவுபோல்

குரல்வற்றி வறல அழுதுயிர் குமைந்து
மருள்வந் தடங்கிய மங்கை கிடந்தாள்!

வேலையை முடித்து நெஞ்சம் விருப்பெழ
மாலைப் பொழுதில் மனைவியைப் பார்க்க
ஊர்வந் திறங்கி உறவோன் வந்தான்!
மூசிக் கிடக்கும் அகல்விழி மூடி
வீசிக் கிடந்த யாழ்போல் கிடந்தாள்
பெறற்கரும் மனைவி! பேதையின் நெஞ்சம்
இறப்பழத் துடிக்க, ஏந்திழை தன்முகம்
தூக்கிப் பார்த்தான்; உயிர்துணுக் குற்றான்!
போகிலை உயிரென உள்ளந் தேறிக்
கொதியுறும் முகத்தில் குளிர்நீர் தெளித்தான்!
பொதியவிழ் மலர்போல் விழிகள் புலர்ந்தன!
ஆளனைக் கண்டதும் அணங்குவாய் அரற்றித்
தோள்தலை சார்த்தித் துயர்பொரு தழுதாள்!
ஒன்றும் விளங்கிலா துள்ளம் வருந்தினான்!
பொன்றளிர் மேனி பொலிவிழந் திருக்கக்
கண்டுளம் வெதும்பிக் கண்ணெனும் மனைவிபால்
கொண்ட துயர்தனைக் கூறுக வென்றான்!
பச்சைக் குழந்தைபோல் பாவை அழுதே
அச்சிலா வண்டிபோல் ஆனதை — தானொரு
நச்சு மனத்தனால் நலிக்கப் பெற்றதைக்
கூறினாள்; ஆளன் குமையும் உளத்தொடும்
ஏறிடும் சாத்துயர் இடும்பொடும் கேட்டான்!
உடற்கொதிப் படங்கி உளக்கொதிப் படங்கிக்
கொடியுடல் தன்னை வாரி நிறுத்தித்
தீயில் விழுந்து புழுப்போல் துடித்த, அவ்
வாயிழை தன்னைத் தேற்றினான்; அதன்பின்
களங்கமில் ஒருத்தியின் கற்பைக் குடித்த அவ்
விலங்கைப் பிடித்துச் சிதைத்திட வேண்டி,
அவ்வூர் காக்கும் ஆணையோர் பாலே
வெவ்விய நிகழ்ச்சியை விளக்கிட நடந்தனர்!

மன்றம் இருந்தது! மக்கள் இருந்தனர்!
முன்றில் நெடுங்கொடி துலாக்கோல் எழுதிப்
பறந்துகொண் டிருந்தது! பயன்பெறு மக்கள்
அறங்கூ றவைய வாயிலில் நின்றனர்!
சிதைக்கப் பட்ட உடலொடும், செத்துப்
புதைக்கப் பட்ட நெஞ்சொடும், தன்னால்
அருந்துயர் உற்ற கணவன் தன்னொடும்
பொருந்துயர் மன்றம் புகுந்தனள் ஆங்கே,
மங்கையின் கற்பை மாய்த்த
வெங்கொடுங் கயவனே வீற்றிருந் தானே! *



# தூங்கும் புலி எழுந்தது!

பாவேந்தர் பாரதிதாசன்.

தூங்கும் புலியைப் பறைகொண் டெழுப்பினோம்;
தூய தமிழரைத் தமிழ் கொண் டெழுப்பினோம்!

[ தூங்கும் புலி ]

தீங்குறு பகைவரை இவணின்று நீக்குவோம்;
செந்தமிழ் உணர்ச்சி வேல்கொண்டு தாக்குவோம்!

[ தூங்கும் புலி ]

பண்டைப் பெரும்புகழ் உடையோமா இல்லையா?
பாருக்கு மறத்தினைச் சொன்னோமா இல்லையா?
எண்டிசை வாய்மையால் ஆண்டோமா இல்லையா?
எங்கட்கும் இங்குற்ற நரிகளால் தொல்லையா?

[ தூங்கும் புலி ]

தமிழ்காப்போம் என்றோம்; எழுந்தாரா இல்லையா?
தமிழுக் குயிர்தர இசைந்தாரா இல்லையா?
தமிழ்வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்கள் என்றோம்!
தமிழர் மார்தட்டி வந்தாரா? இல்லையா?

[ தூங்கும் புலி ]

செந்தமிழ் நெஞ்சம் கொதித்ததா இல்லையா?
தில்லி நரிதான் நடுங்கிற்று இல்லையா?
முந்தாநாள் விட்ட பிஞ்சுகள் தமிழை
முறிக்க எண்ணுதல் மடமையா இல்லையா?

[ தூங்கும் புலி ]

தமிழர் ஒற்றுமை நிறைந்ததா இல்லையா?
தக்கைகள் ஆட்சி சரிந்ததா இல்லையா?
தமக்குத் தமிழகம் அடிமையே என்னும்
சழக்கு மரவேர் அறுந்ததா இல்லையா?

[ தூங்கும் புலி ]

# கலைநலம்

– புலவர் தி. நா. அறிவுஒளி –

பண்டைத் தமிழரின் கலை நலமும், கலை வளமும் இப் புதுமைபொலி நூற்றாண்டும் பொறாமை கொள்ளுமளவு வியத்தகு மாண்பும் விழுப்பமும் சுவையும் பொதிந்து விளங்கிய சீர்மையுடையதாயிருந்தது. தமிழர் கலைப் பண்பாட்டைப் பல நூற்றுக்கணக்கான இலக்கியங்களும், வரலாறுகளும் வளமுறக் காட்டுகின்றன. கணி மேதாவியார் திணைமாலை நூற்றைம்பதில் பண்டைக் கலைவளம் பற்றி அரிய செய்திகளை நல்கியுள்ளார்.

**இசைக்கலை:** தமிழர் உயிரிலும் உணர்விலும் வாழ்விலும் இசை இரண்டற ஊறிக் கலந்து பொலிந்தது. இசையே தமிழர் வாழ்வின் அனைத்துக் கூறுள்ளும் அளாவி நின்றது. வைகறை விடியல் தொட்டுத் துயிலும் நள்ளென் யாமம் மட்டும் இசை கமழாப் பொழுது தமிழர் வாழ்வில் இல்லென்பதுண்மையாம். யாழ் என்னும் இன்னிசைக் கருவி தமிழர் வாழ்வில் இசைமனங் கமழச் செய்த அருங்கலைமலராம். அந்த யாழ் என்னும் நரம் பிசைக் கருவியால் தமிழர் இசைக் கலைவளம் சிறந்து கனிந்தது. இந்த யாழைக் கொண்டு இசை எழுப்பாமலே இசைக்கலை சிறப்புறும் வண்ணம் தேன் வண்டுகள் கடற்கழிக் கானற் சோலைகளில் பாடும்.

> 'பண்ணுது பண்மேற்றே பாடுங் கழிக் கானல்'' (தி. நூ: 47)

இயற்கையோடு பொருந்திய தமிழர் வாழ்வில் இயற்கை இசை மிக்க செல்வாக்குப் பெறுவதியல்பே. புள்ளின் இசையும், வண்டின் பண்ணும் தமிழர் தம், 'கலை மரபு கமழும் இசைக் கலையாகவே' கருதிச் சுவைத்த தன்மை எண்ணுதற்குரியது.

பிண்டி (அசோக) மரக் கூட்டங்கள் நெருப்பின் நிறத்தைப் போன்ற பூங்கொத்துகளைப் பூத்தன. கோங்கம் (கன்னி கார மரம்) என்ற மரச்சோலையில் எங்கும் கோடுகளை உடலில் கொண்ட அழகிய நிறத்தையுடைய வண்டுகள் 'இளி' என்ற பண்ணைப் பாடுமாம். 'இளி' என்ற பண் நீட்டிப் பாடவேண்டியது. அதனால் 'நீள் இளி' எனப் புலவர் இப் பண்ணை விளக்குகிறார்.

> ''எரிகிற நீள் பிண்டி இணர் இனம் எல்லாம்
> வரிகிற நீள் வண்டர் பாடப் – புரிகிற நீள்
> பொன்னணிந்த கோங்கம் . . '' (தி. நூ: 63)

முல்லைநிலத்தில் கார் காலத்தில் வண்டுகள் இசைப்பது வழக்கம். வண்டின் இசை நெட்டெழுத்தின் நெடிலோசை

அமைந்ததாம். நெடிலோசையுடைய பண் 'சாதாரி' யாகும். எனவே வண்டின் இசை சாதாரிப் பண்ணோடு சார்புடையதாக இருந்தது என்கிறார் புலவர்.

" ... ... ... மாறேக்கி!
போதாரி வண்டெலாம் நெட்டெழுத்தின் மேற் புரியச்
சாதாரி நின்று அறையும் சார்ந்து" (தி. நூ: 95)

தமிழில் ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற நெட்டெழுத்துகளின் இசையே ஏழிசையாக அமைந்திருந்தன. வண்டின் இசையும் இந்நெடிலிசைக்குப் பொருந்தியிருந்தமையைப் புலவர் தெளிவிக்கிறார்.

சந்தனச் சோலைகளிலும், தேன்மிக்க பூம் பொழில்களிலும் வளரும் முல்லைக் கொடிகளில் செவிக்கினிய ஒலியை இசைக்கும் தேன் வண்டுகள் சேர்ந்து தங்கியிருக்கும். அவை களிப்பு மிகுந்த பொழுது 'கந்தாரம்' (காந்தாரம்?) பண்ணைப் பாடுமாம்.

" ... ... ... முன்னரே
வந்து ஆரந் தேம் கா வரு முல்லை சேர் தீந்தேன்
கந்தாரம் பாடுங் களித்து" (தி. நூ: 106)

இன்பம் மிகுந்த பொழுது பாடும் பண் காந்தாரம் என்பதைப் புலவர் நுண்மையாக இப்பாடலால் இசைக்கிறார். மேலும், பலர் கூடிப் பாடும் 'குழுமப் பாடலுக்கு' உரிய இசை காந்தாரம் என்பது இதனால் தெளிவாகும்.

கதிரவன் மலைகட்கு இடையே மறையும் மாலைப் பொழுதில் ஆயர்கள் இனிய குழலிசை ஊதியவாறு தம் ஆநிரைகளோடு ஊர் நோக்கி வருவது பண்டைக் கால வழக்கம். அக்குழலிசை காதலரைப் பிரிந்த காதலியர்க்குக் கொடியதாக அமையும்.

"தேரோன் மலைமறையத் தீங்குழல் வெய்தாக ..." (தி. நூ. 112)

குழலைச் சுட்டுத் தொலை செய்வதைக் கற்பனை நயத்தோடு ஒரு பாவில் குறிக்கிறார் கணிமேதாவியார்;

"இம்மையாற் செய்ததை யிம்மையே யாம் போலும்
உம்மையே ஆம் என்பார் ஓரார் காண் - நம்மை
எளியர் எனநலிந்த ஈர்ங்குழலார் ஏடி!
தெளியச் சுடப்பட்ட வாறு" (தி. நூ: 123)

குழலிசை பற்றித் திணைமாலை நூற்றைம்பது 122 ஆம் பாவிலும், "கானந் தலைசெயக் காப்பார் குழல் தோன்ற" என்ற விடத்திலும் குறிப்பு தந்துள்ளார்.

கதிரவன் வெப்பமிக்க கதிர்களோடு மேற்கு மலையில் மறைவதற்கு முன், கொழுமை வாய்ந்த கொன்றை (கடுக்கை)

மரங்களின் கிளைகளின் கொம்புகளிலெல்லாம் பொன் போன்ற பூக்கள் நிறையப் பூத்தன. அதனால் முல்லை நிலக் காடுகளின் அனைத்துப் பகுதியிலும் வண்டுகளும், தேனீக்களும் சேர்ந்து 'துத்தம்' என்ற பண்ணை ஒலித்தன' – இப்பாவில் 'துத்தம்' என்ற ஏழிசையில் இரண்டாம் இசையின் பெயரையும், அதன் ஓசையையும் பற்றிக் குறிப்பளித்துள்ளார்.

> ''பீடிலார் என்பார்கள் தாளுர்கொல் வெங்கதிரால்
> கோடெலாம் பொன்னுப்க் கொழுங்கடுக்கைக் - காடெலாம்
> அத்தம் கதிரோன் மறைவதன் முன் வண்டொடு தேன்
> துத்தம் அறையுந் தொடர்ந்து'' (தி. நூ.:120)

பண்டைக் காலத்தில் ஒவ்வொரு யாழினையும் இசைக்கும் பாணனை, அவ்வியாழின் பெயரோடு சார்த்தி யழைப்பர் அதுபோல், எந்த இசையை (பண்ணை) மிகச் சிறப்பாக ஒரு பாணன் இசைக்கிறானோ, அவ்விசையின் பெயரொடு பாணனைக் குறிப்பர்.

செவ்வழிப்பண்ணை யாழிலிசைப்போன், ''செவ்வழியாழ்ப் பாண் மகன்' (தி. நூ: 124) எனப்படுவான்.

'விளரி'ப் பண்ணை யாழிலிசைப்போன், விளரியாழ்ப்பாண் மகன்'' (தி. நூ: 126) எனப் படுவான்.

'பாலை'ப் பண்ணை யாழிலிசைப்போன், ''பாலையாழ்ப்பாண் மகன்'' (153) எனப் படுவான்.

அழகிய கைக்கோலை அக்காலப் பாணர் கையில் வைத்திருப்பர். இவனை ''மாக்கோல் யாழ்ப் பாண்மகன்'' (125,151) என்பர்.

வெறும் யாழ் மட்டும் இசைப்போனை யாழ்ப்பாண் மகன்' (136) என்பர்.

பல பண்களையும் கலந்து பாடி யாழிசைக்கும் வல்லுநன் ''கலவை யாழ்ப்பாண் மகன்'' (தி. நூ: 150) எனப்படுவான். பல யாழ்களை இசைப்போரும் இப்பெயரால் அழைக்கப்படுவர். இன்று 'இராகமாளிகை' எனவழங்குவது பண்டைக் 'கலவை யாழ்ப்பண்' முறையை அடியொற்றி வந்த 'இசை முறை'யே என்பதை அறியவேண்டும்.

பண்டைப் பாணரிற்சிலர் ஒழுக்கக் கேட்டுக்குத் துணை புரிபவர்களாக இருந்தனர். அதனால் உயர்குடி மகளிர் தீய பாணரைப் 'பண்பிலாப் பாணர்' என்று பழிப்பர். மடக்கப் பெற்ற இருள் மீனைப் போன்ற உருவமுடைய யாழைக்

ஏந்திய பண்பற்ற பாணனே என்று ஒரு தலைவி கூறுவதைப் புலவர், "மடங்கு இறவு போலும் யாழ்ப் பண்பில்லாப்பாண" ! (தி. நூ: 131)என்ற பாட்டடியில் குறிக்கிறார்.

சிற்றூர்களில் இன்னிசைப்புட்கள் எப்பொழுதும் பாடும்ஓசை கேட்டுக்கொண்டே இருக்கும் சிரல் (சிச்சிலி) என்ற அழகிய பறவை இனிமையாகப் பாடும் ஊரில் ஒரு தலைவி காதலனிடம் ஊடல் கொண்டு, ஓராண்டுவரை தங்கி இருந்தாளாம்.

"அணிக் குரல் மேல் நல்லாரோடு ஆடினேன் என்ன
மணிக் குரல் மேல் மாதராள் ஊடி - மணிச் சிரல்
பாட்டை யிருந்து அயரும் பாய் நீர்க் சழனித்தே
யாட்டை யிருந்து உறையும் ஊர்" (தி. நூ: 141)

நல்ல வள மிக்க மருத நிலங்களுக்குரிய தலைவன் தன் மார்பில் நறுமணங்கமழும் ஆரக் குழம்பை அணிந்திருந்தான் அத்தகைய தலைவன் மார்பைத் தலைவி கூடியிருந்தாள். இரவு முழுதும் கூடியிருந்தவள் அவனை விட்டு விலகாத வேளையில், வீட்டினருகில் நெருங்கிப் பொருந்தியிருந்த நெற் கூடுகளின் உச்சியில் தங்கியிருக்கும் சேவற் கோழிகள் கூவின. அதனால் வண்டுகளும்,பாடும் பறவைகளும் உறக்கத்தினின்றும்விழித்தன விடியற்பொழுதில் அவை இசைப்பாடல்களை முரலத்துவங்கின.

"நல் வயல் ஊரன் நறுஞ் சாந்து அணியகலம்
புல்லிப் புடைபெயரா மாத்திரைக்கண் - புல்லியார்
கூட்டு முதல் உறையுங் கோழி துயில் எடுப்பப்
பாட்டு முரலுமாம் பண்" (தி. நூ. 143)

அக்காலத்தில் பிள்ளை பெற்ற மனைவியை மிக்க சிறப்போடு விழாச் செய்து பாராட்டும் மரபு தமிழ்நாட்டில் இருந்தது தலைவன் இன்னிசை முழங்க, மகனைக் கண்டு போற்றும் குடி விழா 145 ஆம் பாவால் தெளிவாக்கப் படுகிறது. பாட்டுகளின் ஒலியும், இன்னிசையின் ஒலியும், வளைவற்ற சுகாம்பு என்னும் குழலின் ஓசையும், இம்முறையான பல இசையொலிகளும் கூடியிசைக்கச் செய்யும் சிறப்பு விழாவே "மகன் காண்விழா". இவ்விழாவில் தலைவன் மகனைத் தன் கையில் ஏந்தி மார்புறத் தழுவிச் சிறப்போடு மகிழ்வான். தலைவன் மகனை ஏந்தியவாறு தலைவியின் இடப்பக்கத்தில் வந்து நிற்பான். இவ்வினிய நிகழ்ச்சியிலும் இசைக்கலையின் செல்வாக்கு மிக்கிருப்பதை,

"பாட்டரவம் பண் ணரவம் பணியாத
கோட்டரவம் இன்ன இவை தாம் குழுமக் - கோட்டவர
மந்திரங்கொண் டோங்க லென்ன மகச் சுமந்து
இந்திரன் போல் வந்தான் இடந்து" (தி. நூ: 145)

என்ற பாவால் அறியலாம். இயற்கையினின்றும் தோன்றியது இசை. அவ்வியற்கை இசையையும், செயற்கை இசைக்

கலையையும் ஒப்ப மதித்து ஓம்பி வளர்த்த தமிழர் கலை வளமும் பண்பு நலமும் உலகு உணரத் தக்கதாம்.

**நாடகக்கலை:** இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் பற்றிய அழகிய செய்தியை 111 – ஆம் பாவில் கணி மேதாவி யார் உணர்த்துவது நனிபயன் சான்றதாம்.

முல்லை நிலக் காடு நாடக அரங்காம்; வானத்து முகிற் கூட்டம் இடிக்குரலாகிய பாட்டாம்; வண்டுக் கூட்டங்கள் முரல்வது யாழிசையாம்; கொதிப்புள்ள வேனிற் காலத்தில் தோகை விரித்தாடாத மயில்கள், கார் முகில் கண்டு களிகொண்டு தோகை விரித்து எழில் நாடகம் ஆடுவது கூத்தாம்! இம்முத்தமிழ்க் கலையை வெண்காந்தள் மலர்கள் (கோடலார்) பார்ப்போராக இருந்து கண்டு, தம் கைகளை விரித்துத் தூக்கி அசைத்துப் பாராட்டினவாம்! – இயற்கை நிகழ்ச்சிகளையே முத்தமிழ்க்கலை வளமாண்பாகக் கண்டுணரும் பண்பு தமிழரியல்பு என்பதைக் கலைக் காதலர் கணிமேதாவியார் தெள்ளிதின் உணர்த்துகிறார்:

"கானம் கடியரங்காக் கைம் மறிப்பக் கோடலார்
வானம் விளிப்பவண் டியாழாக – வேனல்
வளரா மயிலாட வாட்கண்ணாய்! சொல்லாய்
உளராகி உய்யும் வகை" (தி. நூ: 111)

விறலியர் கூத்தாட அமைப்பது 'ஆடுர் அரங்கு' எனப்படும். இதுபோலன்றி நீர்நிலை (புனலாடுதுறை) 'ஆடா அரங்கு' எனப் புலவரால் குறிக்கப்படுகிறது. பண்டைக் கூத்தியர் ஒப்பனை பூண்டு மேடையில் ஆடுவர்; காதலரோடு ஒப்பனை களைந்து புனலில் நீராடிக் களிப்பர்.

"வாடாத தாமரைமேற் செங்கெற் கதிர்வணக்கம்
ஆடா வரங்கினுள் ஆடுவாள் ......" (தி. நூ: 129)

ஆடரங்கு, ஆடற்கலை, நாடகம் பற்றிய கணிமேதாவி யாரின் குறிப்புகளால் கலைநலச் சிறப்பையறிந்தோம்.

**ஓவியக்கலை:** தமிழர் வாழ்வில் ஓவியக்கலை ஒப்பற்ற சிறப்பிடம் பெற்றிருந்தது. அக்கலை பற்றிய நுண் கருத்துக்களைக் கணி மேதாவியார் இலக்கியச் சுவையோடு குழைத் தளித்துள்ளார். 'கரிய பெரிய முகில் ஐந்து நிறங்களையுடைய வானவில்லை ஓவியர்கள் வானத்தில் எழுதிவைத்தாற் போலத் தோற்றுவிக்கிறது எனக் கணிமேதாவியார் குறிக்கிறார்.

"ஐந்துருவின் வில்லெழுதி நாற்றிசைக்கு முந்நீரை
யீந்துருவின் மாரி யிருங்கொண்மூ – முந்துருவின்
ஒன்றுருப் உருமுடைத்தாய்ப் பெய்வான்போற் பூக்கொன்று
கொன்றாய்! கொன் றுயெற் குழைத்து"

வானவில்லில் ஐந்து நிறங்கள். உருவுடையன போற்றோற்றுகிறது என்ற அருங் குறிப்பு உள்ளது. இற்றை ஞான்று ஏழு நிறங்கள் வானவில்லில் உள்ளவென்பது இதனொடு மாறுபடுகிறதே யெனின் கலவை நிறங்களாகக் கத்தரிப்பூ நிறத்தையும், மென்னீலத்தையும் பண்டைத் தமிழர் கருதி யொதுக்கியுள்ளனர் என்பதை யுணரவேண்டும். கண் தோற்றத்தில் ஏழு வண்ணம் புலப்படினும், ஐ வண்ணத்திலேயே அவையடங்குவதை அறிய வேண்டும். பண்டைக் காலத்தில் குழந்தைகள் உள்ள வளர்ச்சிக்கும், உணர்வு மலர்ச்சிக்கும் வாய்ப்பளிக்கக் கூடிய வகையில பல விளையாட்டுச் கருவிகளைச் செய்தளித்தனர் பாவைக் கலைஞர்கள். மண்ணால் யானைப் பாவைசெய்து, அவற்றுக்கு வண்ணந் தீட்டிக் குழந்தைகள் விளையாடக் கொடுத்திருந்தனர்.

"மாக்கோல்யாழ்ப் பாண் மகனே! மண்யானைப் பாகனோர்
தூக்கோற் றுடியோடு தோன்றுமுன்- தூக்கோற்
றுடியுடையார் சேரிக்குத் தோன்றுமோ சொல்லாய்
கடியுடையேன் வாயிலே கடந்து."

'தூக்கோல்துடி' என்பது குழந்தைகள் விளையாடும்போது முழக்கும் ஒருவகை உடுக்கை யாகிய தோற் கருவியாம். பண்டு சிறு தேர்களைப் பல்வகைக் கோலத்தோடு மழலையர் ஆடுவதற்கென்றே ஓவியச் சிறப்போடு செய்வர். மக்கள் ஏறி ஊர்ந்து போகவியலாத விளையாட்டுத் தேரூர்ந்து மழலையர் ஆடியதை இருபாக்களில் கணிமேதாவியார் குறிக்கிறார்.

"செவ்வழியாழ்ப் பாண மகனே! சீரார்தேர் கையினால்
இவ்வகை யீர்த்துய்ப்பான் தோன்றுமுன் – இவ்வழியே
ஆடினான் ஆய்வயல் ஊரன்மற்று எங்கையர் தோள்
கூடினான் பின்பெரிது கூர்ந்து." (தி. நூ: 124)

"மருதோடு காஞ்சி யமர்ந்துயர்ந்த நீழல்
எருதோடு உழலின்றார் ஓதை – குருகோடு
தாராகோறு ஆயந்துஎடுப்புந் தண்ணங் கழனித்தே
ஊராத்தே ரான் தந்தை ஊர்" (தி. நூ: 139)

பண்பாட்டாலும், நாகரிகத்தாலும் உலக முதல் நாடாகத் திகழ்ந்த தமிழ்நாட்டின் உயர்தனிச் செம்மைசால் கலையொழுக்க நலனைக் கணிமேதாவியார் காட்டும் நோக்கிலாய்ந்து கண்டோம். வளமார் கலைப்பண்பு நாகரிகத் தாயான தமிழன் ஒண்மை நுண்மைகளை உணர்த்தும் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்குகளை உலகுணர முழங்குதலே காலத்தாற் செய்யும் கடனாகும். கலை மாண்பில் உலகிலேயே தாய்மைப்பண்போடு தமிழர் திகழ்ந்தமை இதனால் திண்ணிதின் உணரலாம்.

*

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

**யெல்லாம் தெளிவாக உய்த்துணர்ந்த பின்னும் இவர்கள் தூங்கிக் கிடப்பதில் பொருள் ஒன்றும் இருப்பதாக நமக்குப் படவில்லை. மக்கள் எல்லாரும் படு முட்டாள்கள் என்றும், தாங்கள் மட்டுமே மிகுந்த அறிவாளிகள் என்றும் கருதிக் கொண்டிருக்கின்ற பேராயக் கட்சிப் பெரும் போக்கினர், இந்தியாவின் ஒரு பகுதி மக்களின் உள்ளுணர்வுகளை இப்படிக் குழிதோண்டிப் புதைக்கத் திட்டமிடுவார்களானால், அந்தக்குழியில் இறுதியாகப் போடப்படுபவர் அவர்களே என்பதை உறுதியாக உணர்ந்து கொள்ளட்டும்! வெள்ளைக்காரனிடத்திலிருந்து நாட்டை வாங்கி ஆட்சியைக் கண் மண் தெரியாமல் தான்தோன்றித் தனமாக நடத்திக் கொண்டு போகும் வடநாட்டினர்க்கும், அவர்தம் கைப்பாவைகளாக இயங்கிக் கொண்டிருக்கும் தென்னாட்டு முண்டங்களுக்கும் இறுதி நாள் ஒன்று வரத்தான் போகின்றது. அந்த இறுதி நாளில்தான் தமிழர்களின் அரசியல் உணர்வும் வாழ்வியல் உணர்வும் எத்தகையன என்று உலகம் புரிந்து கொள்ளப் போகின்றது! அந்த நல்ல நாள் விரைவில் வருவதாகுக!**

— பெருஞ்சித்திரன்.

---

## நம் மொழிக் கொள்கை

1) இந்தியா பல்வேறு இனங்களும் மொழிகளும் பண்பாடும்கொண்ட நாடாகையால், இதனை மொழியடிப்படையில் ஒன்று படுந்த நினைப்பது அறியாமையாகும்.

2) இந்திய ஒற்றுமைக்கு மொழியடிப்படை பயன் தராதாகையால் ஆட்சி மொழி என்ற தேவையே இல்லை.

3) மாநில மொழிகளே அவ்வம் மாநிலங்களின் ஆட்சிமொழிகளாகும்.

4) மாநிலங்கட்கான இணைப்பு மொழியாக ஆங்கிலத்தையே பயன்படுத்தல் வேண்டும்.

5) இருமொழிக் கொள்கையே (தாய் மொழியும் ஆங்கிலமும்) எல்லா மாநிலங்கட்கும் ஏற்றது.

6) மொழிப் பாடங்கள் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் இருப்பதுடன் பிற பாடங்கள் அனைத்தும் தாய் மொழி வழியே கற்பிக்கப் பெறுதல் வேண்டும்.

7) இத்தகைய நிலைக்கு எல்லா இந்திய தேசியமொழிகளும் உயர்த்தப்பெறல் வேண்டும்.

8) இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக்கும் சட்டத்தை அடியோடு நீக்குதல் வேண்டும்.

9) இக்கொள்கைகள் நிறைவேற்றப் படாமற் போகுமிடத்துத் தமிழகம் தனியே பிரிக்கப்பெறுதல் வேண்டும்.

# வால்மீகியின் இராம காதை

மா. எழில் முதல்வன், எம். ஏ.

[இராமாயணம் ஒரு கட்டுக்கதை மட்டுமன்று; ஓர் ஒட்டுக் கதையும் ஆகும். அதில்தான் எத்தனை ஒட்டை உடைசல்கள்!]

**தோற்றுவாய்:** இதுகாறும் உலகில் தோன்றிய பாவிய இலக்கியங்கள் பலவாகும். அவற்றுள் ஒன்றே வால்மீகியின் இராமாயணம். ஒட்பமும், நுட்பமும் வாய்ந்த அவ்விராம காதையை ஒரு புதிய கோணத்தில் அணுகி அதன் பாவிய நலன்களைப் பகுத்துக் காட்டிச் சில செய்திகளைத் தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம் என்க.

இப்பாவியம் ஏழு பெரும் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டது. ஏழாவது பிரிவு பிற்காலத்தில் வாழ்ந்த யாரோ ஒரு புலவரால் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.[1] அடோல்ஃப் ஆல்ட்சுமன் (Adolf Holtzmen) என்பார் கதையில் காணப்படும் பல முரண்பாடுகளை எடுத்துக் காட்டி முதற் பிரிவும் கூடப் பின்னல் சேர்க்கப்பட்ட ஒன்றாகவே இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார். ஆகவே இரண்டாம் பிரிவு முதல் ஆறாவது பிரிவு வரை அடங்கிய பகுதியே வால்மீகியால் எழுதப்பட்டது என்பது தேற்றம். பேராசிரியர் சாகோபி (Professor Jacobi) இந்நூல் கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கூறுகிறார்.[2] பேராசிரியர் கீத் (Keith) கி.மு. 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று குறிப்பிடுகிறார்.[3] ஆனால் இந்நூல் தற்பொழுதைய வடிவத்தைப் பெற்ற காலம் கி.பி. 2-ஆம் நூற்றாண்டு என்பதே சரியான கூற்றாகும்.[4]

**பாவியத்தின் கதை:** அயோத்தியா நாட்டு அரசிளங் குமரன் இராமன் தன் சிற்றன்னையின் சூழ்ச்சியால் நாடு கடத்தப்படுகிறான். காட்டுக்குச் சென்ற அவன் தன் மனைவியைப் பறிகொடுக்கிறான். இறுதியில் அவன் சுக்ரீவனின் உதவியைப் பெற்றுத் தன் மனைவியைச் சிறைப்படுத்திச் சென்ற இலங்கையர் கோனை வெற்றி கொள்கிறான். கதையின் கரு இதுதான். இப்பாவியக் கதையை ஆழ்ந்து நோக்கினால் இதன்கண் இரு பிரிவுகள் இருப்பதைக் காணலாம். ஒன்று:

1. Winternitz, "Indian Literature" P. 493
2. "Das Ramayana"-P. 108-11
3. Journal of Royal Asiatic Society (1915), P. 322
4. Winternitz, "Indian Literature" P. 516-17

இராமன் நாடு கடத்தப்பட்ட கதை; இரண்டு, சீதை என்ற பெண்ணை இராவணன் கடத்திச் சென்ற கதை. மொத்தத்தில் இப் பாவியம் இரு கதைகளின் இணைப்பாகவே உள்ளது. இரு கதைகளும் கையிலே உள்ள விரல்களைப் போலத் தனித்து நிற்காமல் பாலோடளாய நீர் போலக் கலந்து தோன்றுகிறது. தொலைநோக்கி ஆடியின் மூலம் ஒரு பொருளைக் காணும் பொழுது அது தெளிவாகத் தெரிவது போல நாமும் திறனாய்வுக் கண்ணோடு நோக்கினால் இப்பாவியம் இரு கதைகளின் ஒட்டு மொத்தமே என்பது பெறப்படும். இராம காதையை ஆராய்ந்த அறிஞர் வெப்பர் (Webber) முதற் பகுதியாக அமைந்திருக்கும் 'நாடுகடத்தப்பட்ட கதை', இரண்டாவதாக உள்ள 'பெண் தூக்கிக் கதை'யோடு சற்றும் தொடர்பற்ற ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார்.[5] எண்ணிப் பார்த்தால் இஃது உண்மையாகவே தோன்றுகிறது. நாடு கடத்தப்பட்ட இராமனின் கதை தசரத—சாதகக் கதையிலும் கூறப்பட்டுள்ளது. அக் கதை பின்வருமாறு செல்கிறது :—

தசரதன் காசி நகரத்து மன்னன். அவனுக்கு இராம பண்டிதன், இலட்சுமணன், சீதை எனப் பெயரிய மூன்று மக்கள் இருக்கின்றனர். தசரதன் தன் மனைவி இறந்த பின் கைகேயி என்பாளைத் திருமணம் செய்துகொள்கிறான். அவளுக்குப் பரதன் என்றொரு மகன் பிறக்கிறான். பரதன் ஏழாம் அகவையை அடைந்தவுடன் கைகேயி தன் கணவனிடத்தில் அவன் அவளுக்கு முன்னொரு முறை கொடுத்திருந்த கொடையுறுதியை நினைவூட்டிப் பரதனுக்கு அரசுரிமை தருமாறு வேண்டுகிறாள். சிற்றன்னையின் சூழ்ச்சிக்கு இராமன் அஞ்சியதால் இராமனும், இலட்சுமணனும் காட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். சீதையும் தன் உடன் பிறந்தார்களைப் பிரிந்திருக்க விரும்பாமல் அவர்களை உடன் தொடர்ந்து காட்டுக்குச் செல்கிறாள். வருவதுரைக்கும் கணியர்கள் அவர்களைப் பன்னிரண்டாண்டுகள் கழித்துத் திரும்புமாறு அறிவுரை கூறுகின்றனர். ஆனால் இராமன் காட்டுக்குச் சென்ற ஒன்பதாவது ஆண்டிலேயே தசரதன் இறந்து விடுகிறான். பரதன் காட்டுக்குச் சென்று தன் தமையனைக் கண்டு நாட்டுக்குத் திரும்பி வந்து அரசுரிமையை ஏற்குமாறு வேண்டுகிறான். இராமனோ தனக்கு இடப்பட்ட கால வரையறை முடிவுறாமையால் நாட்டுக்குத் திரும்ப மறுத்துவிடுகிறான். இறுதியில் பரதன் இலட்சுமணனையும், சீதையையும் அழைத்துக் கொண்டு, இராமனது மிதியடியைப் பெற்றுக் கொண்டு திரும்புகிறான். இராமன் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்த

5. Indian Antiquary (1872), P. 172

பின் நாட்டிற்குத் திரும்பி வந்து பால்தர வந்த பழவிறல் தாயத்தை ஏற்றுக்கொண்டு, சீதையை மணந்து இனிது வாழ்கிறான். இதுதான் 'தசரத—சாதகம்' கூறும் கதை.[6] வால்மீகியின் இராம காதைக்கும், இக்கதைக்கும் மலையத் துணை மாறுபாடு இருப்பதைக் காணலாம். வால்மீகியின் கதையிலே சீதை இராமனின் மனைவி. சாதகம் கூறும் கதையிலோ அவள் இராமனின் தங்கை. (தங்கையையே மனைவியாக்கிக்கொள்கிறான் இராமன். என்ன நாகரிகமோ!) வால்மீகியின் கதையில் இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் உறைந்ததாகக் கூறப்படுகிறது. இந்தக் கதையிலோ பன்னிரண்டு ஆண்டுகள்.

பேராசிரியர் சாகோபி மேலே கூறப்பட்ட சாதகக் கதை வால்மீகி எழுதிய இராம காதையின் சிதைந்த வடிவமே என்று கூறுகிறார்.[7] இஃது உண்மையன்று. சாதகக் கதை வால்மீகியின் கதையைப் பார்த்து எழுதப்பட்டதே என்று கொண்டால் சாதக ஆசிரியர் இராமாயணத்தின் பிற்பகுதியை அடியோடு மறைத்திருப்பாரா? சீதையை இராவணன் தூக்கிச் சென்ற நிகழ்ச்சியையோ, இராமன் இராவணன் மேல் போர் தொடுத்ததையோ சாதக ஆசிரியர் கூறாமல் விட்டிருப்பாரா? ஆகவே மேற்கூறிய கூற்று வலியுறுமாறில்லை. வால்மீகியும், சாதக ஆசிரியரும் ஒருவர் நூலைப் பார்த்து ஒருவர் எழுதினர் என்று கூறாமல் இரண்டு பேருமே வேறு ஏதோ ஒரு கதையைத் தழுவி எழுதியிருக்கின்றனர் என்பதே சரி.[8] இருவருடைய கதைக்குமே மூலமாக இருந்த அந்த நூல் இப்பொழுது அழிந்து போயிருக்கக் கூடும். பாவிய இலக்கியங்களின் தோற்றத்தை ஆராய்ந்தால் இந்த உண்மை புலனாகும். பாவியங்கள் பெரும்பாலும் செவிவழிக் கதைகளிலிருந்தும், கதை பொதி இசைப்பாடல்களில் (Ballads) இருந்துமே கருக் கொண்டு உருவாகி இருக்கின்றன. வால்மீகியாரும் அது போன்ற ஏதோ ஒரு கதை பொதி இசைப் பாடலைத் தழுவித்தான் பாவியத்தை எழுதியிருக்கக் கூடும். சாதக ஆசிரியரும் அதே பாட்டைத் தழுவித் தாமும் ஒரு கதையைப் புனைந்திருக்கலாம். இதுவே உண்மை என்க.

வால்மீகியும், சாதக ஆசிரியரும் எந்தக் கதையைத் தங்களுக்கு மூலமாகக் கொண்டார்களோ அந்தக் கதையில்

6. "The Jotaka" vol iv. Translated by W. H. D. Rouse, P. 78-82
7. "Das Ramayana" P. 85-86
8. Keith in J. R. A. S., (1915) P. 323

சீதை இராவணனால் தூக்கிச் செல்லப்பட்டது போன்ற நிகழ்ச்சிகள் இருந்திருக்கா. அப்படி இருந்திருப்பின் சாதக ஆசிரியரும் அதைக் கூறி இருப்பார். அங்ஙனம் கூறாததால் இராமாயணத்தின் பிற்பகுதியாகிய "பெண்தூக்கிக் கதை" முற்றிலும் வால்மீகியின் கைச்சரக்கே என்பது புலனாதல் காண்க. பாவிய நலன் கருதி வால்மீகியால் பிணைக்கப் பட்டதே பிற்பகுதியாக அமைந்துள்ள "பெண்தூக்கிக் கதை" என்பது தெளிவு.

**இணைப்பும் பிணைப்பும்:** இராமாயணத்தின் பிற்பகுதி வேறொரு கதையின் பிணைப்பே என்று கூறினால் அக்கதை முற்றிலும் வால்மீகியின் கற்பனையா? அல்லது வேறு எங்கே னும் நடந்த கதையா? என்றும் காணல் வேண்டும். வெப்பர் என்ற ஆராய்ச்சியாளர் அக்கதை ஓமர் எழுதிய 'இலியட்' (Iliad) என்ற கதையைப் பார்த்து எழுதப்பட்டதே என்று கூறுகிறார்.[9] இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் முயற்சியைப் போன்றதாகும். 'இலியட்' கதையும், இராவணன் கதையும் போக்கில் ஒன்றாக இருந் தாலும்கூட அமைப்பில் வேறுபட்டவை. மேலும் ஒரு பெண் ணின் காரணமாகப் பேரரசுகள் போரிட்டுக்கொள்வது கிரேக்க நாட்டில் மட்டும் அன்று-பண்டைக் காலத்தில் உல கில் எல்லா நாடுகளிலுமே வழக்கமாக இருந்திருக்கிறது. இந்தியாவிலும் அத்தகு வழக்கம் உண்டு. இங்கே மற்றொரு செய்தியும் அறியத் தக்கது. தமிழில் உள்ள சிற்றிலக்கியங் களில் ஒன்றாகிய 'கலம்பக' நூல்களில் 'மறம்' என்றொரு துறை உண்டு. மறவன் ஒருவன், பெண்வேண்டி வாயில் (தூது) விடுத்த மன்னனை எள்ளி நகையாடி அப் பன்ன (தூத)னிடத்திலே வஞ்சினம் உரைப்பதாக அஃது அமைந் திருக்கும். ஆதலின் பண்டைக் காலத்தில் ஓர் அரசன் மற் றோர் அரசன்பால் மகட்கொடை கேட்டலும், அவ்வரசன் மறுத்தானாயின் அவன்மீது ஞாட்பு கொண்டு பொருதழித்த லும் உண்டு எனத் தெரிகிறது. இது கிரேக்க நாட்டுக்கு மட்டுமே உரியதாகக் கொள்ளல் புதுமையினும் புதுமையே என்க. எனவே வால்மீகியார் தன்னுடைய நாட்டில் நடந்த ஏதோ ஒரு கதையைத் தான் எடுத்திருப்பாரே ஒழிய ஓம ரைப் பார்த்து எழுதியிருக்க முடியாது. வால்மீகி ஓமருக்குக் கடன்பட்டிருக்கிறார் என்பது எவ்வாற்றானும் பொருந் தாது.[10]

---

9. Indian Antiquary (1872) P. 172-3
10. Telang: "Was the Ramayana copied from Homer?" P. 70-71

'சாதகம்' கூறும் இராம காதையில் குறிக்கப்படும் இடங்கள் காசி, பனி (இமய)மலை போன்ற வடநாட்டு இடங்களேயாம். ஆதலின் இராமாயணத்தின் முற்பகுதியாகிய நாடுகடத்தப்பட்ட கதை முற்றிலும் வடநாட்டுக்கே உரிய கதையாகும். பிற்பகுதியாகிய பெண் தூக்கிக் கதையோ இராவணனை அச்சாகக் கொண்டு இயங்குகிறது. எனவே அது முற்றிலும் தென்னாட்டுக் கதையாகும். இராவணன் என்ற பெயர் புத்த சாதகக் கதைகளில் குறிப்பிடப்படும் அரசவழிமுறையில் காணப்படுகிறது.[11] அம்மன்னர்கள் அனைவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களேயாவர். தமிழ் மன்னனாகிய இராவணன் தன் தாயகத்திலிருந்து தான் ஆண்டு வந்த இலங்கைக்கு யாது காரணத்தாலோ ஒரு பெண்ணை அழைத்துச் சென்றிருக்கலாம்; அதன் காரணமாக ஒரு மாபெரும் போரும் நிகழ்ந்திருக்கலாம். அச்செய்திகள் அக்கால மக்களிடையே கதைவடிவாக வழங்கியிருக்கும். அக்கதையை அறிந்த வால்மீகி மேலே கூறிய வடநாட்டுக் கதையோடு இதையும் பின்னிப் பிணைத்து ஒரு பெரும் பாவியத்தைச் சமைத்திருக்கின்றார். எனவே இராமாயணம் இருவேறு கதைகளின் இணைப்பு என்பதில் ஐயமே இல்லை.

முரண்பாடுகள்: வால்மீகியின் பாவியத்தில் பல முரண்பாடுகள் உண்டு. கதைப் போக்கில் மட்டுமன்றி உறுப்பினர் படைப்பிலும் அந்த முரண்பாடுகள் மிகுதியாக உள்ளன. பாவியத்தின் முற்பகுதியில் இராமன் எளியவனாகவும், அமைதியான போக்குடையவனாகவும் காட்டப்படுகிறான். பிற்பகுதியிலோ அவன் பெரிய மறவனாகவும், குறிக்கோள் நோக்கம் கொண்டவனாகவும் பேசப்படுகிறான். வால்மீகி இராமாயணத்தை அடிநிலை முதலா முடிநிலைகாறும் ஆழ்ந்து நோக்கினால் அங்கே இருவேறு இராமன்கள்-பண்பாலும் செய்கையாலும் வேறுபட்ட இராமன்கள்—இருப்பதை உய்த்துணர முடியும். எடுத்துக் காட்டாக ஒன்று காண்போம். ஒரு நாள் காட்டின் கண் விராதன் என்ற அரக்கன் எதிர்ப்படுகிறான். அவன் இராம இலட்சுமணர்களை நோக்கி, "நீங்கள் துறவியர் என்றால் அழகிய ஒரு பெண்ணையும் உடன் அழைத்துக் கொண்டு ஏன் அலைய வேண்டும்? இறப்ப இழிந்த மாக்களைப் போல இத்தகைய அறத்தொடு பொருந்தாத செயலைச் செய்து கொண்டு துறவியர் என்று கூறிக் கொள்ளும் நீங்கள் யார்?" என்று சினந்து கேட்டு அருகிலே நின்று கொண்டிருந்த சீதையை அன்போடு பற்றித் தூக்கி மார்போடு அணைத்துக்கொள்கிறான். அப்பொழுது இராமன், "பாராய் தம்பி! சீதை இப்பொழுது விராதனின் மடியிலல்

11. Hardy: "Legends of Buddhism", P. 6

லவா இருக்கிருள்! நலமுடன் வளர்ந்து புகழ்பெற்ற அரசிளங் குமரிக்கு வந்த அவலத்தைப் பார்த்தாயா? நம் பொருட்டுக் கைகேயி கேட்ட கொடையுறுதியின் பயன் இன்று அவளுக்குக் கைகூடிவிட்டது. தன் அருமை மகனுக்கு அரசாளும் பேறு கிட்டினல் போதும் என்ற அளவில் மகிழ்ச்சியடையாமல், பின் வரப்போவதை முன்னதாகவே அறிந்து, யாருக்கும் ஒரு கெடுதலும் செய்யாத என்னை எந்த எண்ணத்தைக் கொண்டு காட்டுக்கு அனுப்பினளோ அவ்வெண்ணத்தின் முடிவை என்னுடைய சிற்றன்னை இன்று அடைந்து விட்டாள். கொடுமலாளன் ஒருவன் என் இன்னுயிர்க் காதலியாம் சீதையைத் தொட்டது என் தந்தையை நான் பிரிந்ததும், அரசை இழந்ததும் ஆகிய இரண்டு துன்பங்களுக்கும் மேலான துயரத்தை என் உள்ளத்தில் உண்டாக்கி விட்டது" என்று கூறிப் புலம்புகிருன். விராதன் கையில் சிக்கிக் கொண்ட சீதையை விடுவிக்க வேண்டிய முயற்சிகளை உடனடியாகச் செய்ய வேண்டிய இராமன், அதை விட்டு விட்டுக் கைகேயியை இழித்துப் பேச முனைந்தது அவனுடைய ஆற்றலுக்கும் ஆண்மைக்கும் களங்கம் உண்டாக்கிவிடுகிறது. ஒரு மானமுள்ள ஆடவன் இத்தகைய நெருக்கடியான நிலையில் யாது செய்ய முற்படுவானே அதைச் செய்யாமல், வீணே புலம்பிக் கொண்டிருக்கும் கோழையாகிய இராமன் கதையின் பிற்பகுதியில் மறவனகக் காட்டப்படுவது முன்னுக்குப் பின் முரண் அல்லவா?[12] இத்தகைய நுட்பமான வேறுபாடுகளை யெல்லாம் கூர்ந்து நோக்கினல் பாவிய அமைப்பில் (Epic Construction) சற்று நெகிழ்ச்சி ஏற்பட்டிருப்பதை நாம் உய்த்துணரலாம். இரு வேறு கதைகளின் ஒட்டு என்பதற்கு இவையும் சான்றுகளே.

வேறுபட்ட இரண்டு கதைகளைத் தம் திறமையால் பொருத்துவாய் தெரியாமல் ஒட்டவைக்க முற்பட்ட வால்மீகி அத்துடன் நிற்காமல் வேறு ஒரு கதையையும் உள்ளே நுழைத்திருக்கிருர். அதுதான் வாலி—சுக்ரீவன் கதை. இதற்கும் ஒரு சிறப்பான காரணம் உண்டு. பண்டைக் காலத்தில் அனுமான் வழிபாடு ஆரிய சமயச் சடங்குகளில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது.[13] அதைக் கண்ட வால்மீகி தமக்கிருந்த பற்றின் காரணமாக அனுமானையும் பாவியத்துள் புகுத்த நினைத்திருக்கிருர். அந்தப் பற்றின் விளைவே சுக்ரீவன் கதை. வாலி—சுக்ரீவன் கதை பாவியத்திற்

12. வால்மீகி இராமாயணம்-பண்டித நடேச சாத்திரி மொழி பெயர்ப்புக் காண்க.

13. Dr. Radhakrishnan, "The Hindu view of life"-P. 39

குள்ளேயே மற்றொரு பாவியம் போல அமைந்துவிட்டது. (The Vali-Sugriva story plays a very important role in the epic. It is an epic within an epic).

ஒரு பாவியத்தில் இரண்டு 'கதைக் கரு' இருப்பதுண்டு. அவை முதற்கரு (Major Plot) என்றும், துணைக்கரு (Minor plot) என்றும் கூறப்படும். இராமாயணத்தின் முதற்கரு இராமன் கதை; துணைக்கரு சுக்ரீவன் கதை. சேக்சுபியர் (Shakespeare) எழுதிய 'இலியர் மன்னன்' (King Lear) என்ற நாடகத்தில் வரும் கிளசுடர் கதை போன்றதே இராமாயணத்தில் வரும் சுக்ரீவன் கதை. இலியர் மன்னனும் கிளசுடரும் எப்படி ஒரே நிலையினராகத் திகழ்கிறார்களோ அது போன்றே இராமனும் சுக்ரீவனும் திகழ்கின்றனர். இவ்விருவருக்கும் ஒருமைப்பாடு பல உள. இவ்விருவருமே அரசையும், மனைவியையும் இழந்த அவல நிலையினர்.

பாவியத்தின்கண் முதற்கருவும், துணைக்கருவும் (Major plot & Minor plot) ஒன்றுக்கொன்று துணையாகவே இருத்தல் வேண்டும். இன்னும் சரியாகச் சொல்லப் போனால் வாய்ப்பாட்டின் இனிமையை மிகுவிப்பதற்காக ஒத்திசைக்கும் பக்க வியங்களை (இசைக் கருவிகளை)ப் போலத் துணைக்கரு அமைதல் வேண்டும். பூமாலையின் மீது அழகுக்காகச் சுற்றப்படும் மினுக்கு (சரிகை) இழைகள் அளவோடு இல்லாமல் பூமாலையையே மறைத்துவிடுவது போலத் துணைக்கரு தன் ஆற்றல் மிகுதியால் முதற்கருவை அமிழ்த்திவிடுதல் கூடாது. சற்றுத் திறனாய்வு நோக்கோடு அணுகினால் வால்மீகி, சுக்ரீவன் கதையைப் புகுத்தியதன் மூலம் பாவிய நலத்தையே பாழடித்து விட்டார் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.[14]

**இயற்கை இகந்த நிகழ்ச்சிகள்:** இராமாயணம் மாந்தனைப் பற்றிய கதை. மாந்தர்களைப் பாடுகின்ற பாவியத்தில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் மிகுதியாக வருமாயின் அது பாவிய நலத்திற்குக் கேடாகும். வாலவூர்திகள் வருதல், கும்பகர்ணன் எருமைகளை விழுங்குதல், அனுமன் மலையைப் பெயர்த்தல், கடலைத் தாண்டுதல், தசரதன் கல்லறையிலிருந்து எழும்புதல்—அம்மம்ம!—இன்னும் இது போன்ற மாயச் செயல்கள் அளவிறந்து காணப்படுகின்றன. இவற்

14. "In Shakespear's "Lear" the Glousestor plot is duly subordinated to the Lear plot. But in the Ramayana the Vali-Sugriva story overshadows abduction story by its extravagant super naturalism".

-I. S. Peter., "Beowulf And the Ramayana" P. 18

றைப் படிக்கும் பொழுது அவை நம்பத்தக்கனவாயில்லை. மனிதனைப் பாடவந்த வால்மீகி பொருளற்ற கற்பனைகளைப் புகுத்தியதன் மூலம் தன் பாவியத்திற்கே களங்கம் உண்டாக்கிவிட்டார்.[15] பொருந்தாக் கற்பனைகளைப் புகுத்த வேண்டும் என்று நினைத்தால் அவர் கடவுளையும், தெய்வப் பன்னர்களையும், பேய் பிசாசுகளையும் வைத்துக் கொண்டு ஒரு பாவியம் பாடலாமே! ஏன் மாந்தனுடைய கதையைப் பாட வருதல் வேண்டும்? அம்மட்டோ? பாவியப் பண்பாவது (Epic philosophy or Epic Motif) ஒழுங்காக அமைந்துள்ளதா என்றால் அதுவும் இல்லை! இராமன் வாலியைக் கொல்வதற்கு அவர் கூறும் அமைதி பொருளற்றதாகவே உள்ளது.

கதையில் எத்தனையோ 'ஓட்டை உடைசல்'கள்! இருந்தாலும் வால்மீகியின் நூலை அழகு குறைந்த ஒரு பாவியம் என்று சொல்வதற்கில்லை. ஆற்றொழுக்கான நடை, அழகிய உவமைகள், நிறைந்த உணர்ச்சி, இனிய உரையாடல்கள், எல்லாம் அமைந்த சுவைகெழு பாவியமாகவே அஃது இலங்குகிறது. அவலத்தையும் மறத்தையும் வால்மீகி அழகுபடக் கையாண்டிருக்கிறார். உள்ளத்து உணர்ச்சிகளுக்குச் சொல் வடிவம் கொடுத்து வெளிப்படுத்துவதில் வால்மீகி தனக்குவமை இல்லாதவர் ஆவர். The story of the Ramayana has a tragic atmosphere. The banishment story gives plenty of opportunities for the shedding of tears and ,gnashing of teath...The story of Sita's abduction and recovery is also tragic in atmosphere" என்று பீட்டர் என்பார் கூறுவர்.[16]

உண்மைக் கதையா? இராமாயணத்தில் குறிக்கப்படும் நாடுகளின் பெயர்களை வரலாற்று நோக்கில் ஆராய்ந்தால் அவை உண்மையாகத் தோன்றவில்லை. அதன்கண் குறிக்கப்படும் இலங்கை எதுவென்றே புலனாகவில்லை. அல்பருனி என்பார் வால்மீகி கூறும் இலங்கை உச்சயினி நாடே என்று குறிப்பிடுகிறார். சாகோபி வால்மீகிக்கே தெரியாத ஒருகற்பனை நாடு என்று புகல்கிறார். எனவே இராம காதை கற்பனைத் திறனும், கட்டுரைக்கும் ஆற்றலும் மிக்க ஒரு மாபெரும் புலவனால் படைத்தளிக்கப்பட்ட சுவை நிறைந்த ஒரு புனைபாவியம் என்று கொள்வதே தகும்.

பாவியத்தின் உட்கிடை: இராமாயணத்தின் உட்கிடை யாது என்பது பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் பல்வேறு கருத்து

15. "These marvellous features impart to the second part of the epic an atmosphere of wild unreality and obscure the essentially human story of obduction. It is futile to explain them away. They are a blot upon the construction of the plot." -Ibid P. 20

16. I. S. Peter, Beowulf and the Ramayna P. 25

# குருதிக்கொடை (உடலியல்)

## (BLOOD DONATION) [வியாசை சரவணகுமார்]

### தோற்றுவாய் :

அறுவை மருத்துவத்தின் பொழுதும், போர் முதல் ஏதங்களினாலும் காயமடையும் பொழுதும மிகுந்த குருதி இழக்க நேரிடும். அவ்வாறு குருதி இழந்தோர்க்கு வேறொருவரது குருதியை யளித்துக் காப்பது, தற்பொழுது பல்லோராலும் கையாளப் பெறும் ஒரு மருத்துவ முறையாம். தாமாகவே முன் வந்து குருதிக் கொடையளிப்பாருமுளர். காசிற்காகக் குருதி விற்போரும் உளர். எவ்வாறாயினும் தங்குருதியளித்துப் பிறயினர் காத்தல் பேரறமன்றோ?

### குருதி வகைகள் : (BLOOD GROUPS)

குருதிக் கொடைபற்றி அறியப்புகுமுன் குருதிவகைகளைப் பற்றி அறிதல் வேண்டும். மாந்தர் அனைவரின் குருதியும் பொதுவான தன்மைகளில் ஒன்றே! ஆனல் குருதிக் கொடை யளிக்குங்கால் சில சிறப்புத்தன்மைகளைக் கவனிக்க வேண்டியுள்ளது. குருதியிலுள்ள சிவப்பணுக்களின் (R. B. C.) சில சிறப்புத் தன்மைகளாலும் 'சீரம்' (Serum) என்னும் ஒருவகை நீர்மத்தின் சிறப்புத் தன்மைகளாலும் பல்வேறுபட்ட மாந்தரின் குருதிகளைத்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

களை எடுத்துக் காட்டிச் சென்றுள்ளனர். தென்னகத்தில் ஆரியர்களின் குடியேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே இராமாயணம் என்பது வெப்பரின் கூற்று.[17] பிராம்மண இனத்தார் புத்த மதத்தினருக்கு இழைத்து வந்த கொடுமைகளை விளக்கிக் கூறுவதே என்பது வீலர் கருத்து.[18] 'இருக்கு' மறையின் நுட்பத்தை எடுத்து மொழிவதே இராமாயணம் என்பது சாகோபியின் கொள்கை.[19] மொத்தத்தில் வால்மீகியின் இராம காதை அறநெறியை வற்புறுத்த வந்த ஒரு பாவியம் என்று பொதுவாகக் கொள்வதே நலம்.

---

17. Webber : "Indian Literature"-P. 192
18. Talboys Wheeler : "History of India" II, IXXViii
19. "Das Ramayana" P. 130-3

தலையாய நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அக்குருதி வகைகளை ஆங்கிலத்தில்,

1. 'A' 2. 'B' 3. 'AB' 4. 'O' என்பர்.

அவற்றைத் தமிழில் முறையே

1. 'அ' 2. 'ஆ' 3. 'அஆ' 4. 'ஓ'

எனக் கொள்வோம்.

இந்நான்கு குருதிவகைகளையும் முதலில் (1900) கண்டவர் இலான்சுடெயினர் (Landsteiner) ஆவர். இவற்றைத் தவிர,

Rh+, Kh—, M, N, MN,

முதலான குருதி வகைகளும் இக்கால் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் முதலில் கண்ட நான்கு தலையாய வகைகளே பெருமளவில் காணப்படுவதால், அவற்றைப் பற்றியே ஈண்டுக் காண்போம். ஒருவரின் குருதி இன்ன வகையினது என்பதை எளிய மருத்துவ ஆய்வு மூலம் அறியலாம். அவ்வாறு அறிந்து கொள்ளல் பல வகையிலும் பயன்தரும். குருதிக் கொடையின் பொழுது தருவோர், பெறுவோர் ஆகியோரின் குருதிவகைகளைத் தெரிந்திருத்தல் வேண்டும். (இதுபற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்) கொலைக் குற்றங்களைக் காண்பதிலும் குருதிவகைகள் உதவும். கொலையுண்டவரின் குருதி வகையையும் கொலைக் குற்றம் சாட்டப் பெற்றவரின் கத்தியிலோ, உடையிலோ காணப்படும் குருதியின் வகையையும் ஒத்திட்டுப் புலனறிவர். மேலும் ஒவரின் குருதிவகை அவருடைய பெற்றோரின் குருதி வகையைப் பெற்றிருக்கும். அஃது ஒரு மரபுப் பண்பு. எனவே ஒரு குழவியின் பெற்றோர் யாவரென எழும் வழக்குகளில் உண்மையறியக் குருதி வகையறிதல் உதவும். குழவியின் குருதி வகையையும் ஐயுற்றப் பெற்றோரின் குருதிவகையையும் ஒத்திட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். சில நேரங்களில் குருதி வகைகள் மகப்பேற்றையும் தாக்குவதுண்டு. ஒரு கணவரின் குருதி Rh+ வகையினதாகவும், மனைவியின் குருதி Rh— வகையினதாகவும் இருப்பின், அவர்கட்குச் சில குழந்தைகட்குப் பிறகு பிறக்கும் குழந்தை, கருவிலேயோ, பிறந்த உடனேயோ இறக்க நேரிடும், இதற்குக் காரணம் பெற்றோரின் பொருந்தாக் குருதி வகையினால் ஏற்படும் குருதிச் சிதைவே (Erthroblastosis Foetalis). இதற்கேற்ற மாற்றும் உண்டு. அதன்படி குழந்தை பிறந்த பிறகு அதன் குருதியை மாற்றுவர். ஆனால் அண்மையில், குழந்தை பிறக்கு முன்பே அதன் குருதியை மாற்றும் முறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இம்முறையினால், இலண்டன் இலூயிசுகாம் மருத்துவ மனையில் (Lewisham Hospital), பொருந்தாக் குருதி வகையினால் இறந்துபட விருந்த மூன்று குழந்தைகள் காப்

பாற்றப்பட்டன. பிறப்பதற்குமுன் கருவிலிருந்த பொழுதே, ஒரு தனித்த ஊசியின் மூலம், குழந்தைகளின் குருதியை மருத்துவர் மாற்றினராம்.

## குருதிக் கொடை :

இலான்சுடெயினருக்கு முன்பே ஒருவரின் குருதியை மற்றவர்க்களிக்கும் முயற்சிகள் நடந்தன. ஆனால் பொருந்தாக் குருதிவகை மாறறத்தால், குருதி பெற்றோரில பெரும்பாலோர் மாண்டனர். இலான்சுடெயினருக்குப் பின்பே இன்ன குருதி வகையினரின் குருதி, இன்ன குருதி வகையினருக்குப் பொருந்தும் என்பது அறியப்பட்டது. அதைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்கும்.

| குருதி வகையினர் | —குருதிவகையினருக்குக் குருதி தரலாம். | —குருதி வகையினரிடமிருந்து குருதி பெறலாம். |
|---|---|---|
| 1. அ (A) | அ, அஆ (A, AB) | அ, ஓ (A, O) |
| 2. ஆ (B) | ஆ, அஆ (B, AB) | ஆ, ஓ (B, O) |
| 3. அஆ (AB) | அஆ, (AB) | ஓ, அ, ஆ, அஆ, (O, A, B, AB, |
| 4. ஓ (O) | ஓ, அ, ஆ, அஆ, (O, A, B, AB, | ஓ (O) |

எனவே உங்களின் குருதிவகை 'ஓ' எனின், நீவிர் ஒரு சிறந்த கொடையாளியாகலாம். ஏனெனில் உங்களின் குருதி எல்லா வகையினரும் ஏற்கலாம். ஆனால் உங்கட்கு 'ஓ' வகைக் குருதிதான் பொருந்தும். அல்லது உங்களின் குருதி 'அஆ' வகையினதாயின் எல்லா வகைக் குருதியும் உங்கட்குப் பொருந்தும். ஆனால் உங்களின் குருதி 'அஆ' வகையினருக்கு மட்டுமே பொருந்தும்.

# தென்னகத்தின் தோட்டவளத்தில் வெப்பதட்பம்.

(வேளாண்மையியல்) —எழிற்செல்வன்.

**தோற்றுவாய்:** தென்னகம் முப்பக்கம் நீர்ப்பரப்பாலும், வடக்கே நிலப்பரப்பாலும் சூழப்பட்டு, இந்தியப் பெருநிலத்தின் தெற்குப் பகுதியாக நிலவுகிறது. இத்திருவிடம் நடுக்கோட்டினின்றும் 8 பாகை (டிகிரி) வடக்கு முதல் ஏறத்தாழ 18 பாகை வடக்கு வரையில் பரவியுள்ளது. இங்கு நிலவும் வெப்பதட்பநிலை தோட்ட வளத்திற்குத் தென்னாட்டைச் சிறிய உலகாக்கி, உலகில் வளமுள்ள நாடாக்கியுள்ளது. இந்நாட்டின் உயர்ந்த மலைமுகட்டுப் பகுதிகள் குளிர்ப் பகுதிகள் (Temperature regions), சமவெளிப் பகுதிகள் வெப்பப்பகுதிகள் (Tropical regions) இவற்றிற்கு இடைப்பட்ட பகுதிகள் மட்டான வெப்பப் பகுதிகள் (Sub-tropical regions). இதனால் பல மலர் வகைகளும், பல கனிகளும், வளர வாய்ப்புகள் உள்ளன. தென்னாட்டில் எரிமலைகளோ, நில அதிர்ச்சியோ, நிலப்பிளப்புகளோ ஏற்படுவதில்லை. வடபுலத்தை ஆட்டிப்படைத்த நில நடுக்கங்கள் தென்னகத்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

குருதிக் கொடையளிப்பதால் உடலுக்கு எவ்வகைத் தீங்கும் நேராது. வலிவும் குன்றாது. உடலையும், குருதியையும் ஆய்ந்த பின்னரே குறித்த அளவு குருதியைப்பெற மருத்துவர் முன் வருவர். பெரிய நகர்களில் எல்லாம் 'குருதிக்காப்பு நிலையங்கள்' (Blood Banks) உள்ளன. அங்கு எவரும் சென்று குருதியளிக்கலாம். அல்லது உங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டு, வேணடுங்கால் குருதியளிப்பதாய் உறுதியாவது அளிக்கலாம்! உங்களது குருதிவகை வேண்டுங்கால், நிலையத்தாரே அழைத்துப் பெற்றுக் கொள்வர்.

## இறுவாய்:

முல்லைக்குத் தேரீந்த பாரியையும் மயிலுக்கு அணியீந்த பேகனையும் தலைக்கொடைதந்த குமணனையும் கண்ட தமிழ் நாட்டில், தாமாகவே முன்வந்து குருதிக் கொடையளிப்போரைக் காணல் அரிதாயுள்ளது வருந்தற்குரியதே!

**வாழ்வில் ஒருமுறையாவது குருதிக் கொடையளிப்பீர்!**

**ஒருவருக்காவது உயிர் கொடுப்பீர் !!**

டைதத் தீண்டவில்லை. தென்னகத்தில் கடினப் பாறைகள் படிந்துள்ளதால் இத்தகு கொடுமைகள் தோன்ற இயலாதென அறிவியலார் எண்ணுகின்றனர். தென்னகத்தில் வீசும் தென்றல் வெப்பதட்ப நிலையில் சிறப்பு நிலையாகும். தென்குமரி மாநிலம் (இலெமூரியாப் பெருநிலம்) கட லூழியால் அழிந்ததாக ஆய்வுகள் வாயிலாக அறிய முடிகின்றது. அக் குமரி நாட்டின் செல்வக் குமர்யாக நிலவும் தென்னாடு அமைதிபூண்டு, அழகு நாடாக நிலவுவது வியப்பிற் குரியதே. ஆயினும் வங்கக் கடலில் எழும் புயல் ஒரு குறையே யாகும். அழகுக் குமரி யொருத்தியின் முகத்திலுள்ள கரும்புள்ளி அழகுப் புள்ளியாகி அழகு கூட்டுகின்றதெனினும், தென்னகமெனும் செல்வக்குமரிக் குக் கரும்புள்ளியாகிவிட்ட கீழ்க்கடற் புயல் சிறப்பூட்டுவ தாக இல்லை. ஒரு நாட்டின் வெப்பதட்பம், அங்கு வாழும் மக்கள் வாழ்க்கையையும், பண்பாட்டு நிலையினையிலும் தீர் மானிக்கவல்லது. வேளாண்மையில் இதன் மேலாண்மை மிகுதியாகும். பயிர்களின் வளர்ச்சியும், வாழ்வும், விளைவும் வெப்பதட்பத்தால் மேலாளப்படுகின்றன. தோட்டப் பயிர் கள் வெப்பப் பகுதிகளுக்குரியவை, குறை வெப்பப்பகுதி களுக்குரியவை, குளிர்ப்பகுதிகளுக்குரியவை எனப்பாகுபடுத் தப்படுகின்றன. வெப்பதட்பம் (Climate) எனப்படும் நிலை யில் வெப்பம் (Temperature), மழைப் பொழிவு (Rainfall), வான் ஈரப்பசை (Humidity), காற்று (Wind), ஒளி (Light), பனிப்புயல் (Hail storm), ஆகிய காரணிகள் உள்ளடங்கு கின்றன. இக்காரணகளைப் பொறுத்துத் தோட்டங்களும், தோட்டப் பயிர்களும் அமைய வேண்டும்.

வெப்பம்: வெப்பதட்பத்தில் உள்ளடங்கியுள்ள காரணி களில் வெப்பம் தலையானது. தோட்டப் பயிர் ஒவ்வொன் றும் குறிப்பிட்ட வெப்ப அளவுகளிலே சிறப்பாக வளர்கின் றது. அந்த அளவில் குறைந்தாலோ, கூடினாலோ வளரும் பயிர்கள் பல தீங்குகளுக்கு ஆளாகின்றன. இயற்கையில், தனிகம் (Species) ஒவ்வொன்றும் அதற்குரிய வெப்ப நிலையி லேயே முறையாக வளர இயலும். வெப்பப் பகுதிகளில் வளரும் பயிர்கள் எப்பொழுதும் பசுமை வாழ்வு கொண் டவை. இவை பனிபெய்யும் குளிர்ப் பகுதிகளில் வளர்க்கப் படும்பொழுது சரியாக வளர்வதில்லை. வெப்பக் காடுகளில் வளரும் மா, மேலையுலகைச் சார்ந்த குளிர் நாடுகளில் வளர்க் கப்படும் பொழுது பூக்காமல் வெறும் தழைவு (Vegetative growth) கொண்டு வளர்ச்சி குன்றிய நிலையிலே இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆப்பிள் என்னும் கனிப்பயிர் குளிர்ப் பகுதிகளுக்கே உரியது. இப்பயிருக்குக் குறிப்பிட்ட காலம் ஓய்வு (Dormancy and rest period) தேவை. இப்பயிர்

கோடைக்கானல், நீலமலை, பெங்களூர்ப் பகுதிகள் ஆகியவற்றில் வளர்க்கப்படுகின்றது. அதே போல் இலைக் கோசு, பூக்கோசு போன்ற குளிர்ப் பகுதிக் காய்கறிப் பயிர்கள் சமவெளிப் பகுதிகளில் வளர இயலாதவை. ஆயினும் கோவைப் பகுதிகளில் குளிர்க்காலங்களில் இலைக்கோசும், சில குளிர்ப் பகுதிப் பயிர்களும் வளர்க்கப்படுகின்றன. குளிர்ப் பகுதிகளில் வளர்க்கப்படும் உருளைக் கிழங்கு மட்டான வெப்பப் பகுதிகளிலும் வளர்க்கப்படுகின்றது. தமிழகத்தில் கொல்லிமலைக் குன்றுகள், சேர்வராயன் மலைப் பகுதிகள் ஆகியவற்றில் சில உருளைக் கிழங்கு வகைகள் வளரத்தக்கவை. குளிர்ப் பகுதிகளில் வளரும் பயிர்களை வெப்பப் பகுதிகளுக்குப் பழக்கிப் (Acclimatise) பிறகு வெப்பப் பகுதிகளில் வளர்க்கலாம். ஆனால் எல்லாப் பயிர்களிலும் வெற்றி காண முடியாது. வாழைப் பயிரிலும் வெப்பதட்ப நிலைக்குத் தகுந்தவாறு அவற்றின் வகைகள் பயிரிடப்படுகின்றன. பூவன், மொந்தன், அரசதாளி, பச்சைநாடன் ஆகியவை சமவெளிப் பகுதிகளிலும், மலைவாழை, மலைச் சரிவுகளிலும் பயிரிடப்படுகின்றன. வெப்பம் கனிகளின் தரத்தையும் தீர்மானிக்கவல்லது. கனிகளிலும், காய்களிலும், மாவுப் பொருள்கள் (Starch), சர்க்கரை (Sugar), ஆகியவை பல்வேறுபட்ட வெப்பநிலையில் மாறுபடுகின்றன. மலரின் வண்ணமும் பல்வேறுபட்ட வெப்ப அளவில் வேறுபடுகின்றது. பொதுவாக வெப்பம் தென்னகத்தில் மிகுதியாகவோ, குறைவாகவோ இல்லாமல்—பெரிதும் வேறுபடாமல், வெப்பதட்பத்தை (Climate) இணையாக்கிக் கொண்டுள்ளது. (Equalile Climate)

மழைப் பொழிவு: (Raixfall) மழைப் பொழிவில் மொத்த அளவை நோக்காமல் அதன் பரந்த பொழிவை (Distribution) நோக்குதல்வேண்டும். அது, பெருமழையாகவோ பெருவெள்ளமாகவோ இல்லாமல் 'பெய்யெனப் பெய்யும் மழை'யாக இருத்தல் வேண்டும். ஆண்டில் முறையான அளவில் பல பருவங்களில் பெய்தல் வேண்டும். பெருமழை, பொங்கி வரும் வெள்ளமாகிப் பேரிழைப்பைத் தருகின்றது. அது பயிர்களுக்கு உகந்ததன்று. மழைக்காலங்களில் வான் ஈரப்பசை (Humidity) மிகுதியாகின்றது. இந்நிலை நெடுநாட்களுக்குத் தொடருமாகில் நோய்கள் எளிதாகப் பரவுகின்றன. நோய்க் குச்சில்களும் (Bacteria). பூசுணங்களும் (Fungi) சில நுண்ணில்களும் (Virus) மிகுதியான வான்ஈரப் பசையில் விரைவாகப் பெருகிப் பயிர்களைத் தாக்குகின்றன. நிலத்தில் நீர் தேங்கி, வேர்ப் பகுதிகளில் காற்றோட்டம் தடைப்படுகின்றது. வேர் வளர்ச்சியும், மண்ணில் நடைபெறும் பிற தன்மை இயைபுச் செயல்களும் (Physico Chemical function)

தாக்குறப்படுகின்றன. வேர்ப்பகுதிகளைத் தாக்கும் அழுகல் நோய்களும் நீர்த்தேங்கிய நிலையில் காணப்படுகின்றன. கொடிமுந்திரிப் பயிரின் இரண்டாம் பருவத்தில் (ஆகஃச்ட்-செப்டம்பர்) கனிகள் பறவைக் கண்நோயின் (Anthracnose-பழம் அழுகல் நோய்) தாக்குதலுக்கு ஆளாகின்றன. இதனல் குலைகள், அழுகி உதிர்கின்றன. பெரும் மழையால மலர், பிஞ்சு, காய் ஆகியவை உதிரவும் வாய்ப்புகள் உள்ளன. பெருமழையால் பூக்களில் பூந்துச் சேர்க்கை(Pollination)தடையுறுகின்றது. பூந்துச் சேர்க்கைக்கு உதவும் தேனீ போன்ற பூந்துச் சேர்க்கை முகவிகளின் (Pollinating agents) பணிகள் தடைப்படுகின்றன. பூந்துச்சேர்க்கை முகவிகளான, பூச்சிகள் தடைசெய்யப் படுவதோடு, வேறு வழியிலும் பூந்துச் சேர்க்கை இடர்ப்படுகின்றது. பூவின் சூல் முடியிலுள்ள (Stigma), சூல் முடிச்சுரப்புகள் (Stigmatic Fluid) பரக்கும் பூந்துகளையும் (Pollen grains),பூச்சிகள் தாங்கிவரும் பூந்துகளையும் கவர உதவுகின்றன. இச்சுரப்புகள் பெருமழையால் கழுவப் படுவதால் பூந்துச் சேர்க்கைக்கு வழியில்லாது போய்விடுகின்றது. தென்னாட்டில் பெருமழை பொழியும் பகுதிகளில் பெரும்பாலான தோட்டப் பயிர்களை வளர்க்க இயலாது. கேரள மாநிலத்தில் நரந்தம் பழங்களும் ("கமலா" ஆரஞ்சும்) நீலகிரி மலையில் உருளைக் கிழங்கும் (ஒரு பருவத்தில்) மழையை நம்பியே வளர்க்கப்படுகின்றன. பெருமழை காலப் போக்கில் செம்புறை மண்ணை உண்டாக்குகின்றது. கேரளத்தில், காணப்படும் வளமற்ற செம்புறை மண் (Laterite) செம்வுறை (Lateritic) மண் ஆகியவை பெருமழையாலும், மிகுதியான வெப்பத்தாலும் உருவானவையே. மிகுதியான மழையால் ஏற்படும் இன்னல்களைப் போலவே மழையின்மையாலும் வேளாண்மையில் தொல்லைகள் உண்டாகின்றன. குறைவான மழைப் பொழிவுள்ள இடங்களில் சிறப்பான வேளாண்மைக்கு வழியிருக்காது. மா, "சாத்துக்குடி" போன்ற கனிகள் தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் வானவாரிப் பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன. இப்பகுதிகளில் வானவாரிப் பண்ணை முறையே சிறந்தது. இப்பகுதிகளில் (Dry forming areas) நீர்த் தேக்கத் திட்டங்கள் வாயிலாக வேளாண்மையைச் சிறப்பிக்க முடியும். கீழ்மட்ட நீரைக் கிணறுகள், (Under ground water) குழாய்க்கிணறுகள் (Bore wells), அழுத்தக் கிணறுகள் (Artisian wells), ஆகியவற்றின் மூலம். மேல் கொணர்ந்து இறைவை நிலங்களாக்கலாம். (Garden Lands). தென்னாட்டில் வீசும் பருவக் காற்றுகளால், பெறப்படும் பருவ மழையே, நீர்நிலைகளின் மூலங்கள். தென்னகத்தில் மழைப் பொழிவு சில காலங்களில் முறையாக அமையாவிடினும், நல்ல திட்டங்களால் வேளாண்மையைச் சிறப்பிக்க முடியும். தென்னகத்தின் நீர்வளம், பொது நோக்கின்றி

அரசியல் குறுகிய நோக்கங்களால் பாழ்படுத்தப்படுகின்றது. இந்நிலையைப் போக்கி, விருப்பு வெறுப்பற்ற பொதுக்குழுவின் மேற்பார்வையில் இவற்றைக் கொணர்ந்து, அறிவியல் அடிப்படையில் திட்டங்கள் வகுத்து, தேக்கத் திட்டங்கள், கால்வாய்த் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் தென்னகத்தின் வேளாண்மையும், தோட்ட வளத்தையும் (Horticultural wealth) உயர்த்த முடியும். அதோடு மண்ணின் கீழ்மட்ட நீரைப் பயன்படுத்தும் வழியில் மின் இறைப்புகள் (Electric pumps), குழாய்க் கிணறுகள் (Bore wells'), அழுத்த நீர்க் கிணறுகள், வடிமுனைக் கிணறுகள் (Filter point wells), ஆகியவற்றைப் பெறவும் அமைக்கவும் உழவர்களுக்கு எளிதான சூழ்நிலைகள் அமைய வேண்டும்.

வான் ஈரப்பசை: (Atmospheric Humidity) கனிப்பயிர்களில் சில மிகையான வான்ஈரப்பசையிலேயே சிறப்பாக வளரத்தக்கவை. செந்தாழை (அன்னாசிப்பழம்) 'கமலா' ஆரஞ்சு, வாழை ஆகிய பயிர்களுக்கு மிகுதியான வான் ஈரப்பசை தேவையாகும். அளவுக்கு மிஞ்சிய வான்ஈரப்பசை இருப்பதால் மரங்களின் பட்டைகளில் பசை சுரக்கும் நிலை காணப்படுகின்றது. கனிகளின் சுவையும், வண்ணமும் வான் ஈரப்பசைக்குத் தக்கவாறு மாறுபடுகின்றன. அதோடு கனிகளை நெடுநாட்களுக்குச் சேமித்து வைக்க இயலாமல் எளிதில் அழுகிவிடுகின்றன. பூசண விதைகளும் (Spores) இக்காலங்களில் முளைத்துப் பெருகி வளர்கின்றன. எனவே நோய்த் தொல்லை மிகும். இதனால் பயிர்ப் பாதுகாப்புப் பணிகளைக் கண்ணும் கருத்துமாகச் செய்தல் வேண்டும். நோய்களைப் போலவே பூச்சிகளும் பெருகி வளர்ந்து பயிர்களைத் தாக்குகின்றன.

காற்று: (Wind) தென்னகத்தில் வீசும் தென்மேற்குப் பருவக்காற்றும், வடகிழக்குப்பருவக்காற்றும் பருவமழை தருகின்றன. ஆதலால் இந்நாட்டின் நீர்நிலைகள் இக்காற்றுகளையே நம்பியுள்ளன. கோடையில் வீசும் தென்மேற்குப் பருவக்காற்று, வடக்கு நிலப்பரப்பான மைய ஆசியாவில் ஏற்படும் அழுத்தக் குறைவால் (Depression in Pressure) ஏற்படுவதாகும். அதேபோல் இந்துமாகடலில் ஏற்படும் அழுத்தக் குறைவு வடகிழக்குப் பருவக்காற்றிற்குரிய காரணமாகும். தென்னகத்தில் உள்ள பெரும்பாலான ஆறுகள் தென்மேற்குப் பருவக்காற்றால் உருவாகின்றன.

வீசும் காற்று வறண்ட காற்றாகவோ, வாடைக்காற்றாகவோ, பெருவிரைவு கொண்ட புயற்காற்றாகவோ இருத்தல் கூடாது. கோடைக் காலத்தில் தமிழகத்திலும், பிற பகுதிகளிலும் வீசும் காற்று வறட்சி மிகுந்ததாகவும், விரைவு

கொண்டதாகவும் காணப்படுகின்றது. இதனால் தோட்டப் பயிர்கள் ஓரளவு தாக்கப்படுகின்றன. வரண்டகாற்று, மரங்களின் தழை மண்டல ஆவி (Transpiration) அளவை மிகுதியாக்குகின்றது. மற்றும், பட்டைகளும், கிளைகளும்காய்ந்துவிடுகின்றன. பூவும், பிஞ்சுகளும் காய்களும் சில வேளைகளில் உதிர்கின்றன. இக்காற்றினால் காய்கனிகளின் அமைப்பும், வடிவமும், கூட மாறுபடுகின்றன. நிலத்திலுள்ள நீரும் இக்காற்றின் வெம்மையால் ஆவியாகி (Evaporate) நிலத்தில் காய்வு ஏற்படுகின்றது. பெருமழைக் காலங்களில் தடைப்படும் பூந்துச் சேர்க்கையும் பெருங்காற்றுக் காலங்களிலும் தாக்கப்படுகின்றது. பூந்துச் சேர்க்கையை ஏற்படுத்தும், பூச்சிகளின் பணி இடர்ப்படுவதால் பூந்துச்சேர்க்கை இயலுவதில்லை. சூல்முடியில் சுரக்கும் சூல்சுரப்புகளும், வரண்ட காற்றால் காய்ந்துவிடுகின்றன. இக்காலங்களில் பயிர்ப் பாதுகாப்புப் பணிகளையும் முறையாகச் செய்தல் இயலாது. பூச்சிக் கொல்லிகளையும் (Insecticide), பூசனக் கொல்லிகளையும் தூவும் பொழுதும், (Dusting) தெளிப்புகளால் (Sprayer), தெளிக்கும் பொழுதும் பெருங்காற்று இருத்தல் கூடாது. பெருங்காற்று நிலத்திலுள்ள மேல்மட்ட மண்ணை நீக்குவதால் மண் அரிப்பும் (Soil errosion) ஏற்படுகின்றது.

தோட்டப்பயிர்களுக்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் உகந்ததாக இல்லா இக்காற்று வேறு வழியில் வேளாண்மைக்குத் துணைபுரிகின்றது. நெல் விளையும் நன்செய் நிலங்கள் இக்காற்றுக் காலங்களில் வெற்று நிலங்களாக (Fallow land—தரிசு நிலங்கள்) உள்ளன. இந்நிலங்களில் இக்காற்றால் நல்ல மண் அமைப்பு- (Soil Structure) உருவாகின்றது. மண்ணில் காற்றோட்டம் மிகுந்து, மண்ணிலுள்ள நீர் வெளியாகின்றது. இதனால் பெருங்கட்டிகளாகவும் கடினமான ஈரமண்ணாகவும் உள்ள நிலைமாறி வெப்பலோடுகின்றது (Fryable Condition). இந்நிலைக்குக் கோடை மழையும் (குறைந்த அளவில்) உதவுகின்றது. வெப்பலுள்ள நிலங்களில் எளிதாக உழவு செய்ய முடியும். எனவே இக்காற்றின் உதவியால் நிலப்பண்பு (Soil tillage) சிறப்பாக அமையும். வறண்ட காற்றுகளைப் போலவே ஈரமிகுந்த வாடைக்காற்றும் தீங்கு தருவதாகும். ஈரமிகுந்த வாடைக் காற்றால் வான்ஈரப்பசை (Atmospheric Humidity) மிகுதியாகின்றது. இதனால் நோய்த் தொல்லைகளும் பூச்சித் தொல்லைகளும் மிகும்.

தென்னகத்தில் வீசும் தென்றல் வெம்மையானதாகவோ, குளிர் மிகுந்த வாடைக் காற்றாகவோ இல்லாமல் இனிய தென்றலாய் வீசுகின்றது. இக்காற்றில் ஈரப்பசை மிகாமலும் வறட்சி கூடாமலும் உள்ளன. தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தாளடி நெல் அறுவடைக்குப்பிறகு வளர்க்கப்படு

உளுந்து, பச்சைப்பயிர் ஆகிய பருப்பு வகைப் பயிர்கள் தென்றல் வீசுவதால் செழித்து வளர்வதாக எண்ணப்படு கின்றது. இத்துறையில் தென்றல்பற்றிய ஆய்வுகள்(Research) இருப்பதாகத் தெரியவில்லை. 'பொதிகைமலைத் தென்றல்' 'தென்னாடு பெற்ற தென்றல்' 'கோடை இளங் குளிர்த் தென்றல்' 'காதலர் மன்றத்தில் அழையா விருந்தாளி தென்றல்' எனப் பாவலர், கதை புனையும் எழுத்தாளர் ஆகி யோரின் எழுத்தாற்றலுக்கு இலக்கான தென்றல் ஏனோ கால நிலை ஆய்வாளர்கள் (Meteorologist), வேளாண்மைக் காலநிலை ஆய்வாளர் (Agricultural Meteorologist) ஆகியோரின் ஆய்வுப் பொருளாக இடம் பெறவில்லை!

காற்றுகளால் விளையும் தீங்குகளை நல்ல காற்றரண்கள் அல்லது காற்றுத்தடுப்புகள் (Wind breaks) வாயிலாகத்தடுக் கலாம். காற்றடிக்கும் திக்குகளில் காற்றுத் தடுப்பிற்கு ஏற்ற மரங்களை வளர்க்க வேண்டும். வீட்டிற்குக் கதவுபோல், வயலுக்கு வரப்பு போல், தோட்டத்திற்கு வேலிபோல் காற்றுத்தடுப்புகளும் தோட்டங்களுக்கு இன்றியமையாதவை தோட்டங்கள் உருவாக்கப்படும் பொழுதே இக்காற்றரண் களும் வளர்க்கப்படவேண்டும். பிண்டி (அசோகமரம்) மூங்கில் வஞ்சி (சவுக்கு) ஆகியவற்றைக் காற்றரண் பயிர்களாக வளர்க்கலாம்.

வடகிழக்குப் பருவக்காற்றுக் காலத்தில் வங்கக்கடலில் எழும்புயல் தென்னகத்தின் சிறப்பான வெப்பதட்ப நிலையில் ஒரு கரும்புள்ளியாகும். இதனால் கிழக்குக் கடற்கரைப்பகுதி களின் தோட்டவளம் பெருமளவு தாக்கப்படுகின்றது. வாழைத் தோட்டங்களே இவ்வங்கக்கடல் புயல் தாக்கு தலுக்கு முதல் பலியாக விளங்குகின்றன. கரும்பும் நெல்லும் தென்னையும் பிற பழமரங்களும் வீசும் விரைவைப் பொறுத் துப் பாழ்படுகின்றன. இப்பகுதிகளில் குள்ளவாழை போன்ற வாழைவகைகளை வளர்ப்பதால் காற்றின்கொடுமையை ஓரளவு தவிர்க்கலாம். அரசதாளி வாழை வகையின் பட்டையிலுள்ள நார் வலுவானதாக இருப்பதால் இது பிறவகைகளைக் காட்டி லும் காற்றின் விரைவை ஓரளவு தாங்குகின்றது. எனினும் மிகையான விரைவில் அவையும் பாழ்படுகின்றன. அண்மை யில் பொங்கி யெழுந்த புயற்காற்று (1964 திசம்பரில்) தென் தமிழகத்தைச் சூறையாடிச் செல்வங்களைச் சீரழித்த துயர வரலாறு நெடுங்காலத்திற்கு நமது உள்ளங்களில் நிலைத்திருக் கும். கடல் அழிவிற்கு இலக்கானது தென்குமரி மாநிலத் தின் (இலெமூரியாக்கண்டம்) பெரும்பகுதி. "அக்குமரியின் செல்வக்குமரியே-தென்னாடே! அமைதிபூண்டு நிலவும் உன் னைச் சிலகாலங்களில் பொங்கியெழும் பேரலைகளுக்கும், புயல் தொல்லைகளுக்கும் ஏனோ இயற்கை ஆளாக்குகின்றது?"

என அரசும், அறிவியல் ஆய்வாளர்களும், காலநிலையாளர்களும் வியந்து, வருந்தி நிற்கின்றனர்.

ஒளி: (Light) ஒளி மழைப்பொழிவு, பனிப்பொழிவு, முகில்கள் ஆகியவற்றோடு தொடர்புடைய காரணியாகும். பயிர்களின் ஒளிச் சேர்க்கையில் (Photosynthesis,) ஒளி இன்றியமையாததாகும், காய், கனி ஆகியவற்றின் தரமும இயைபுக் கூட்டும் (Chemical Composition) கனிகளில் வண்ணமும் ஒளி நிலைப்படி மாறுபடுகின்றன. பயிர்களின் பயிர்வினைச் செயல்களும் (Physiological Functions) ஒளியால் மேலாளப்படுகின்றன.

பனிப்புயல்: (Hailstrom) பனிப்புயல் குளிர் நாடுகளில் நிலவும் தீயநிலையாகும். பனிப்புயல் மலர், பிஞ்சு. கனிகள் ஆகியவற்றை உதிரச்செய்வதோடு, கனிகள், கிளைகள், ஆகியவற்றையும் தாக்கிக் காயங்களை ஏற்படுத்தி அழிவு தருகின்றது. சற்றுக் கடுமையாக வீசும் பனிப்புயல் பெருந்தோட்டப்பரப்புகளை முழுவதுமாக அழித்துவிட வல்லதாகும. பனிப்புயல் வீசும் பகுதிகள் தோட்டங்களுக்கு ஏற்றவைகளல்ல. தென்னகம் இந்நிலைக்காளாக வாய்ப்பில்லை.

இறுவாய்: தென்னாட்டின் தோட்டவளத்திற்கு இங்கு நிலவும் வெப்பதட்பம் சிறப்புடையதாகும். பெரும் வேறுபாடுகள் இல்லாது ஏறத்தாழச் சீரான வெப்பதட்ப நிலையிலுள்ள தென்னாட்டின் இயற்கை யமைப்பு, இயற்கையின் அன்புப்பரிசு. வெப்பதட்ப நிலையில் தென்னகம் ஒரு சிறிய உலகம். இதனால் பலவகைக் கனிகளும். மலர்களும், காய்கறிகளும் விளைய வாய்ப்புகள் மிகுதி. தென்னகத்தின் தோட்டவளத்தை—கனிவளத்தைச் சுட்டும் திரு. நாயக் (1949) அவர்கள் அத்திருவ்டத்தின் சிறப்பு நிலையைத் தெளிவாக்குகின்றார் *"இயற்கை தென்னகத்தைப் பெரும்பாலும் ஈடு இணையற்ற நல்லதொரு பழவளத்தோடு படைத்திருக்கின்றது. மாவும் மங்குத்தானும் (Mangosteen); கொய்யாவும், கொடிமுந்திரியும்; ஆப்பிளும், நெல்லியும்; பலாவும், இலந்தையும்; வாழையும், கறிப்பலாவும், எலுமிச்சையும், இலிச்சியும் (Litchi); சீமை இலுப்பையும், இனிப்பாரஞ்சும்: கொழுமிச்சையும் (Lemon), இலங்குவும் (Longsat); தாடபூட்பழமும்,பனையும்; பெரிசியும்(Perrisimmon), பப்பாளியும்; சக்கரியும், கமலா ஆரஞ்சும், முந்திரியும், சீதாவும்; பிளமும் (Plum) மாதுளையுமாக, ஒன்றுக்கொன்று நெருங்கிய உறவில்லாத இத்தகைய பழங்களை விளைவிக்கும் இப்பகுதியைச் "சிறப்பு வாய்ந்தது" என்ற சொல்லால் அழைப்பினும் கூட அதன முழுச்சிறப்பை விளக்குவதற்கு அச்சொல் போதாது." இவ்வாறு தென்னகத்தின் வெப்பதட்பம் தென்னாட்டின்

# வெறியாமோ கூறீர் !

—ம. இலெ. தங்கப்பா.

“ விரிந்தவுளம் உமக்கில்லை. பொதுவுலக எண்ணம்
விளையவில்லை உம்நெஞ்சில் ; தமிழ் ; தமிழ்நா டென்றும்
இருந்தமிழர் நலமென்றும் இவை தாமே பேசி
எழுப்புகின்றீர் வேற்றுமையை ; உலகவொரு மைக்குப்
பொருந்திவராக் குறுமையுளம் கொண்டழிகின் றீரே !
புவியிதனில் ஒவ்வொருவர்க் கொவ்வொன்றில் பித்தம்.
அருந்தமிழ்க்கு வாய்த்ததுகொல் உம்முடைய பித்தம்
அஃதகற்றி நடுவுநிலை அடைவீரேல் நன்றும்.

“ யானுந்தான் தமிழ்மொழியே பேசுமொரு தமிழன்
என்னினமுந் தமிழினமே ; தமிழ்நாடும் நினைவேன்.
யானுந்தான் தமிழர்நல மாயிருக்க விழைவேன்
என்றாலும் இப்படியா தமிழ்வெறிகொண் டலைவேன் ?
தானியங்கு பேருலகில் சிறுபகுதி நாமே ;
தமிழொன்றே கருதுவதால் விளையுநலன் என்ன ?
ஏனிந்தத் தொழில் ?” என்றான் தமிழனெனும் ஒருவன்.
இதற்குவிடை யிறுக்கின்றேன் ; எல்லாரும் கேண்மின் !

தோற்றத்தால் ஒத்திருக்கும் இருபொருள்கள் தத்தம்
தொடக்கத்தால் தன்மையினால் வேறுபடல் உண்டே!
தோற்றமறு விண்மீனும் தெருவோர விளக்கும்
தெருவினின்று பார்க்கையிலே நிகராகத் தோன்றும்
மாற்றவொணாப் பழக்கமுறு கள்வெறியர் நின்றும்
மருந்தாயஃ துண்பாரைப் பிரித்துணர்தல் போலும்
வேற்றவர்க்குத் தீங்கெணணும் மொழிவெறியர் நின்றும்
விரிந்துயர்ந்த தமிழ்நெஞ்சைப் பிரித்துணர்தல் வேண்டும்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தோட்ட வளத்தில் நற்பங்கு தாங்கிச் சிறப்பிற்கு வழி வகுத்துள்ளது.

* “Nature has richly endowed South India with a fruit wealth of great and almost unrivalled interest, diversity and character. For a region that can produce good crop yields from such distantly related fruits as the Mango and Mangosteen, Guava and Grape Vine, Apples and Amla, Jack and Jujube, Banana and Bread fruit, Lime and Litchi, Sapota and Sweet orange, Lemon and Langsat, Passion fruit and Palmyra, Perisimmon and Papaya, Melons and Mandrins, Cashew and Custurd apple, Plum and Pomegranate, the word “remarkable” may perhaps be a weak expression (Naick, 1949)”

பிறமொழிக்குத் தீங்கிழையோம்; பிறமொழியார்க் கின்னல்
பேச்சாலும் புரிந்தறியோம்; பிறர்நலத்தைக் கொல்லோம்
பிறநாட்டை வவ்வுகிலோம்; எம்மொழியைப் பண்பைப்
பிறர்தம்மேல் திணித்தறியோம்; பிறர் பழிகள் தூற்றேம்.
அறமுணரும் மெய்நெறியால் தாய்மொழியே மக்கள்
அறிவுக்கும் உணர்வுக்கும் காப்பாதல் கண்டோம்.
திறமிகுமெம் தாய்மொழியாம் தமிழடிக்கீழ் நிற்போம்
தீங்குவரின் எதிர்த்திடுவோம். பிழையென்ன? சொல்வீர்!

தாய்மொழிசெந் தமிழாகும்; அதனாலோ, அன்றித்
தன்குஞ்சு பொன்குஞ்சே எனுமுணர்வால் தானோ
தூய்தமிழ்மேற் பற்றுடையேம்? முக்காலும் இல்லை!
தொல்சிறப்பால், நல்லுணர்வால், அறிவாலே, கலையால்
வாய்மையினால் உயர்மொழியே தமிழ்என்ப தாலும்
வாழ்வுயர்த்தத் தமிழதனைப் பற்றுகின்றேம் ஓர்மின்!
காய்போலும், பிஞ்செனவும், பிறமொழிக ளிருப்பக்
கனியான தமிழ்விழைதல் தவறாமோ கூறீர்?

பார்ப்பனர்கள் வடமொழியால் தமிழ்கெடுத்த தைப்போல்,
பாரதத்தார் இந்தியினால் கெடுக்கமுனை தல்போல்
ஆர்ப்புறயாம் போய்ப்பிறர்தம் மொழிசிதைக்கின் றேமா?
அயல்நாட்டில் எம்தமிழே ஆள நினைந் தோமா?
கார்ப்பற எம் தமிழகத்தில் தமிழ்கனிக என்றால்
கருத்துணரார், வயிறுபெரி தென்றெண்ணு மாக்கள்
வேர்ப்பதுவு முழுமடமை! அவர்பொதுமை எல்லாம்
வேரின்றி மரம்வளர்க்கும் வீண்கனவு தானே!

பொய்மைகளே கண்டார்க்கு மெய்யுரையு முதலில்
புதியவொரு பொய்போலும் தோன்றிநிற்றல் உண்டே
"ஐயிரண்டு நான்"கென்றும் "எட்"டென்றும் கேட்டார்
"ஐயிரண்டு பத்"தெனிலும் முதலிலது நம்பார்.
மெய்யுணர மனம்வைத்தால் விளங்குவதே யன்றி
மேலோட்ட நோக்கினர்தம் விழிஎதையும் காணா!
பொய்கையதன் கரையிருந்தால் ஆழங்காண் பாரோ!
புறத்திருந்தார் தமிழாழம் காண்பதுவும் எங்ஙன்?

தமிழ்முழங்கும் எம்முள்ளம் விடுதலைவேண் டுள்ளம்!
தரைமிசையே ஓரினத்தை வேறினத்தார் தாக்கி,
அமிழுமவர் உரிமைபறித் தாட்சிசெயும் தீமை
அனைத்துலகில் எங்குறினும் குமுறுவதெம் உள்ளம்!
குமுறிடுமிவ் வுணர்வில்தான், தமிழினத்தை மாற்றார்
குளிர்உரையால், வெம்நோக்கால், அடிமைசெயக் கண்டே
திமிருடையார் கெடத்தாக்கித் தமிழ்காக்கத் துடிப்போம்
திறம்புநிலை இதிலென்ன? வெறியாமோ கூறீர்!

தமிழ்மலரும் எம்முள்ளம் உண்மைமலர் உள்ளம்
தாழ்புவிக்கே உண்மை யெடுத் தோதுவதெம் நோக்கம்!
தமிழ்மொழியும், தமிழ்ப்பண்பும் தலைநிலைய; உண்மை!
தடுமாறும் உலகத்துக் கிதனையெடுத் தோதல்
எமதினிய கடனன்றோ! எங்கெனினும் மெய்ம்மை
இணரூழ்த்து நாறுதலை விழைவதுவும் தீதோ?
குமிழ்போலும் வாழ்க்கையினர், மெய்யுமுணராரேல்
கொள்ளுபயன் என்ன? இது கூறல்வெறி யாமோ?

தமிழ்கனியும் எம்முள்ளம் அருள்கனியும் உள்ளம்
தண்புவியில் இளைத்தவராய் எவரிருந்த போழ்தும்
அமைதியுறோம்; அவர்நலத்துக் குயிர்கிடந்து துடிக்கும்
அதனால்தான், தமிழரிந்நாள் இளைத்தவராய் ஏங்கித்
தமைமறந்து, பொருளிழந்து தகவழிதல் கண்டே
தலைநிமிர்த்தி அன்னவர்க்கோர் வகைசேர்த்து வாழ்வு
கமழ்விக்க முயல்கின்றோம் இரவுபகல் பாரோம்!
கறையுண்டோ? கரவுண்டோ? ஓர்மினிதை ஓர்மின்!

தமிழ்நிறுவும் எம்முள்ளம் பொய்மறுக்கும் உள்ளம்
தமக்குரிய புகழ்பிறர்க்கு விடுதல் பிழையன்றோ!
இமிழ்கடல்சூழ் வையகத்தே வடமொழிக்கு முன்னர்
இயன்றதுசெந் தமிழாகும், தமிழ் பழகிக் கண்டே
அமைந்ததுதான் வடமொழியும்; உண்மை யிதைமாற்றி
அருந்தமிழக்கு வடமொழியே தாயென்று பீற்றித்
தமையுயர்த்தும் பொய்யர்களின் பொய்கடிதல் தவறோ?
தமிழ்க்குரிய புகழ்நிறுவல் வெறியாமோ கூறீர்!

தமிழ்நாடும் எம்முள்ளம் உயர்வுநா டுள்ளம்!
தனிச்சிறப்பால் உயர்பொருள்கள் நாடுவதும் தீதோ?
கமழ்நறுந்தண் காழகமும், இப்பியிடை முத்தும்
கரிக்குவையுள் செம்மணியும், மலர்களுள்தா மரையும்
அமிழ்தும்நறு மலைத்தேனும் ஆற்றஇனி தாம்போல்
அருந்தமிழும் மொழிகளிடை உயர்ந்தமொழி யன்றோ!
சமைகின்ற கலையுளத்தால் தமிழ்நாடி நின்றோம்...
தமிழாலெம் உயிர்தளிர்க்கும்; வெறியிதுவோ கூறீர்!

தமிழ்முனையும் எம்முள்ளம் பொதுமை கெடல் இல்லை.
தமிழுள்ளம் குறுகலிலாப் பரந்தவுளம் அன்றோ!
தமிழகத்துப் புலவரினும் உலகுணர்ந்தார் யாவர்?
தமிழ்மறைசொல் பொதுமையினும் உயர்பொதுமை
உண்டோ?
கமழுமுளச் சீர்மையெலாம் தமிழ்தோய்ந்தார் கொள்வார்
கனிவன்பு, வாய்மை, அருள் தமிழ்ச்சான்றோர் விண்டார்
தமிழுள்ளம் எவர்மாட்டும் வெறுப்படைதல் இல்லை.
தவறிருப்பின் கடிந்திடுதல் வெறியாமோ சொல்வீர்!

பொய்யொருபால் மெய்யொருபால் கிடக்கின்ற போழ்தில்
 பொய்கடிந்து மெய்சாரின் ஒருசார்பஃ தாமோ?
மெய்யுணர்வால் தமிழ்சார்ந்து நிற்றலினைக் காணார்!
 வெற்றுணர்வென் றுரைக்கின்றார் உடலுணர்வால் வாழ்வார்
துய்யஉள உண்மைகளே அருகிவரும் நாளில்
 தென்றமிழின் அகநலங்கள் எடுத்துரைப்போ மாயின்
ஐயுறுவார் புறப்பயனே காணுகின்ற மாக்கள்!
 அவர் உளத்தை மலர்த்துவதும் எம்வேலையாகும்.

நிழல்கொடுக்கும் நெடுமரமே கனியளித்தல் செய்யும்
 நிமிர்ந்த தளிர் ஓங்குகொடி நறுமலராய்ப் பூக்கும்.
தழல்,உணவை அடுதலொடு சுடர் உமிழ்தல் தன்னைச்
 சாற்றுவதும் தேவையதோ? பண்டுமுதல் இன்றும்
அழல்வெயிற்கும் குளிருக்கும் காப்பான ஆடை
 அற்றமறைக் கின்றபயன் அறியாதோ உலகம்?
மொழி,தொடர்புக் கொருகருவி! வேறென்ன? என்பார்
 மொழிப்பயனே அறியாத முழுமூடர் என்போம்.

பெயருரைத்தால் போதாது தமிழனெனத்! தமிழைப்
 பேசிவிட்டாற் போதாது! தோய்ந்தூன்றி ஆழா(து)
அயர்வுளத்தால் பொதுமைநிலை பேசுபவன் பேதை!
 அடிமைநிலை பொதுமை எனும் அவன்தமிழன் ஆகான்.
துயருளத்தால் தமிழ்காக்கத் தனையீந்து, நாளும்
 தொண்டுளத்தால் தொடர்ந்துழைப்போன் அவன்தமிழன் ஆவான்!
உயருளத்தால் இங்கவனைக் கண்டுகொள்ள லாகும்
 உயிருவப்பால் அன்னோன்வாய் செந்தமிழைப் பாடும்.

சோற்றுக்குத் தமிழ்கற்பார் மெய்த்தமிழர் ஆகார்
 தூய்தமிழ்மேற் கருத்துரைக்க உரிமைஅவர்க் கில்லை.
சோற்றுக்குத் தமிழ்விற்பார் தமிழ்ப்புலவர் ஆகார்
 சுடர்தமிழின் நலம்பேணும் தகுதியவர்க் கில்லை
காற்றுக்குத் தலைவணங்கும் சிறுநாணல் போன்றார்
 கவின்தமிழைக் காப்பாரோ? தம்வயிறு காப்பார்!
தேற்றத்தால் தமிழ்தோய்ந்தார் தமிழுணர்வால் உயர்வார்
 தேயத்தால் பிறர்எனினும் அவர்தமிழர் என்போம்!

இன்றைக்கே அனைத்துலக நாடுகளும் தத்தம்
 எல்லைகளை இடித்தெறிந்து பொதுமை உலகாட்சி
நன்றென்று வகுப்பவெனில் நாம்தனித்தா நிற்போம்?
 நலஞ்செறியும் கூட்டுறவில் முதல்நிற்போம், உண்மை!
இன்றெந்தம் தமிழெல்லை இடித்துவிடச் சொல்வார்
 இந்தியமாம் எல்லையைஏன் கோடிட்டுக் கொண்டார்?
என்றென்றும் உண்மைநிலை நாட்டுதல்எம் வாழ்க்கை!
 எம்கொள்கை பிழையென்பார் வருவீர்சொற் போர்க்கே! ★

# தமிழிற்குப் பகைவர் தமிழாசிரியரே!

—இராச. உத்தமன். பி. எசி., பி. டி.

ஆம்! தமிழிற்குப் பகைவர்கள் தமிழாசிரியர்களே அன்றி வேறெவரும் இலர் என்பதைத் துணிந்துரைப்பேன். இஃது ஆய்ந்தறியாமையாலோ—அறிவுச் செறிவின்மையாலோ விரைவாகவோ கொண்ட முடிபன்று. அமைதியாக ஆய்ந்தறிந்து, பட்டறிவால் ஓர்ந்துணர்ந்து ஐயமற யான் கொண்ட முடிபே இஃதாகும். இக்கட்டுரைக்கண் என் மனம் கொண்ட காரணங்களை எடுத்துரைப்பேன்!

தமிழகத்தில் 'தமிழ்' எனும் பெயர்கூறியே தலைமுறை தலைமுறைக்குப் போதுமான பொருளீட்டியவர்கள் அரசியல் வாணர்களும், தமிழைக் கற்றதாய்க் கூறிக்கொள்ளும் தமிழ்ப்புலவர்களான தமிழாசிரியர்களும் அல்லாமல் வேறெவரோ? 'தமிழ் வாழ்க! வளர்க!' என்றுமட்டும் நீட்டி முழக்கித் தமிழைப் பேணாமலேயே தமிழால் தம்மெய் பேணித் 'தமிழாசிரியர்கள்' எனக் கூறித்திரியும் சதைப்பிண்டங்கள் எத்தனை? இஃதொத்த சதைப் பிண்டங்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நடமாடுதலாலும், நாடகம் ஆடுதலாலும் தமிழிற் கிழைக்கும் இடுக்கண்கள் எண்ணிலடங்கா! ஏட்டில் அடங்கா! முதற்கண் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் உயர்தனிச் செம்மொழிக் கிழைக்கும் இடுக்கண்களைப் பார்ப்போம்!

முத்தமிழை முறைப்படி கல்லாமல் 'தத்துப்பித்து' என்று தமிழைப் பற்றியே தரக்குறைவாய்த் தாறுமாருகப் பேசித் திரியும் தறுதலைத் தமிழாசிரியர்களையே பெரும்பாலான நம் பள்ளிகள் பெற்றுள்ளமையை வேல்பட்டு வெளிவரும் செங்குருதித் துயரைக் காட்டிலும் பன்மடங்கு புண்பட்ட உள்ளத்துடன் புகலுகின்றேன். அத்தகு தமிழாசிரியர்கள் தம்முடைய பாடப் பிரிவுக் காலத்தில், தமிழைப் பயிற்றுவிக்கச் செல்லுங்கால், 'டமில்' (Tamil) என்று ஆங்கிலத்தில் கரும்பலகையில் எழுதியிருக்க, வகுப்பறைக்குள் நுழையுங்கால் 'குட் மார்னிங்கு' (Good morning) எனும் குரல் கொடுத்துத், தம்முடைய தன்னேரில்லாத் தமிழ்ப்பற்றை மாணவர்கட்கு முதனிலை வெளிப்படுத்துவது போதாதென்று, அடிக்கடி ஆங்கில மொழியையும், அயலார் மொழியையும் பின்னிப் பேசி அவர்தம் திருவாயால் செந்தமிழ்ப் பாடம் பயிற்றுவிக்கத் தொடங்குவர். ஓரிரு சொற்றொடர்கள்கூட தூய தனித் தமிழ்ச் சொற்களால் பேசவியலா—பேச விரும்பா இப்படிப்பட்ட இழிவான மொழி ஆசிரியர்களிடம் இன்றமிழ் பயிலும் மாணவர் எந்தமிழ்ச் சீர்மையை எப்படி அறிகுவர்? மேற்கூறிய கூற்றினை மறுக்கும் தமிழாசிரியர்கள் எத்தனைப் பெயர்? அறிந்தோ அறியாமலோ அவர்கள் அருந்

தமிழின் அழிவிற்கு ஆக்கம் கொடுத்துவ்ளனர் என்பதை யான் பள்ளியில் ஆசிரியனாக இருந்து பெற்ற பட்டறிவின் மூலம் ஒன்றன் பின் ஒன்றாகத் தொகுத்துக் காட்டுவன்! அவற்றில் சில வருமாறு :

1. தமிழ்ப் பாடம் பயிற்றுவிக்குங்கால் எத்தனைத் தமிழாசிரியர்கள் கரும்பலகையில் 'தமிழ்' என்று எழுதுமாறு மாணவர்கட்கு எடுத்துச் சொல்லியுள்ளனர்?

2. தமிழைக் கற்பிக்குங்கால் பாடவிளக்கத்தூடே தமிழின் சீர்மையை விளக்கி, தமிழுணர்ச்சியை இளம் உள்ளங்களில் எழுமாறு செய்பவர்கள் எவரெவர்?

3. முழுமையும் தூய தமிழ்ச் சொற்களையே கையாண்டு தாமே எடுத்துக்காட்டாகி, மாணவர்களையும அத்தூய நெறியிலே அழைத்துச் செல்லத் தூண்டுகோலாய் அமைந்தவர்கள் எவரெவர்?

4. வழக்கொழிந்த வடமொழிச் சார்பை வாழவைக்க விளக்கி வரும் 'கல்கி'. 'தினமணி', 'ஆனநதவிகடன்' போன்ற தாளிகைகளை ஒதுக்கி, செந்தமிழ்ச் சீர்காக்கும் 'தென்மொழி', 'தமிழ்நாடு' போன்ற தாளிகைகளைப் பள்ளி நூலகத்திற்கு வரவழைப்பார் எவரெவர்?

5. தன்பால் பயிலும் மாணவர்தம் பெயர்கட்குமுன் நிற்கும் ஆங்கிலத் தலை எழுத்து(Initials)களை அகற்றி, அருந்தமிழில் எழுதுதற்கும், தூய தமிழ்ச் சொறகளால் தம்பெயர் அமைதற்குமுரிய ஆர்வத்தை இளமுள்ளங்களின்கண் எழுப்பியவர் எவரெவர்?

6. தமிழினால் தலைநிமிர்ந்து, தம் குடல் நிரப்பித், தம் வாழ்நாளைத் தள்ளும் தமிழாசிரியர்களில் எவ்வளவு பெயர் தமிழிலேயே கையெழுத்திடுகின்றனர்? தாம் கேட்கும் சிறுவிடுப்(C. L.)பிற்குக்கூட, அறைகுறை ஆங்கில அறிவுடன் பிழைமிக்குற ஆங்கிலத்தில் எழுதாமல் தமிழிலேயே எழுதி விடுக்கும் தமிழாசிரியர்கள் எவரெவர்?

7. அய்யன்மீர்! தமிழ்ப்புலவீர்! ஆசிரியர்காள்! பள்ளியில் தான் தமிழ் உணர்ச்சியைக் காட்டின அலுவல் போகுமென அஞ்சி அஞ்சி நாடோறும் நெஞ்சுரம் குலைந்து நலிய, வெறும் குடல் நிரப்பும் தமிழாசிரியர் இனம் சார்ந்தார், தம் இல்லங்களிலாவது பாலுணர்ச்சியைத் தூண்டித் தமிழ் உணர்வைக் கொல்லும் (இ)'ராணி', 'குமுதம்' போன்ற தாளிகைகளை வாங்காமல் விட்டவர்கள் எவ்வளவு பெயர்? தமிழ் மொழி போற்றும் தாளிகைகட்கு உறுப்பினரானர் எவரெவர்?

இங்ஙன் தன்மான உணர்வின்றிப் பள்ளித் தமிழாசிரியர்கள் எனும் பெயர் தாங்கி, தமிழால் தம் குடல் நிரப்பி உடல் வளர்க்கும் இச் சதைப் பிண்டங்கள்பால் பயிலும இளம மாணவர்களின் உள்ளங்களில் இன்றமிழ் உணர்ச்சி எழும்புதல் எங்ஙனமோ? இவ்விழிந்தாரில் சிலர் செத்துப் போன சமசுகிருதம் சொந்தமெனும் பார்ப்பனிய வழிவந்தவர்—செந்தமிழ்ப் பற்றுமிக்க மற்றேனைய பாட ஆசிரியர்களை நகைப்பதோடன்றி, அவர் கூறும் தமிழ்ச் சொற்களை வையாபுரிக்குப் பிறங்கடை (வாரிசு) போல வடமொழிச் சொற்களெனப் போராடி வருகின்றனர். என்னே கீழ்மை! இப்படிப்பட்ட தமிழாசிரியர்களால் வருங்கால வீறுமிக்க தமிழ்க்குமுகாயமே பாழ்பட்டு மாறுபட்டுப் போகும் என்பதை எவரால் மறுத்துரைக்க முடியும்?

பள்ளித் தமிழாசிரியர்களின் இழிநிலை இவ்வாறிருக்க, கல்லூரித் தமிழாசிரியர்களின் கயமைநிலைக் கல்வித்தரத்திற்கு ஏற்பகள்ள மனம் வளர, காசீட்டுதலே கண்ணாகக் கொண்டு, பாலுணர்ச்சியைத் தூண்டிவிடும் 'காதல்', (இ)ராணி, குமுதம் போன்ற இதழ்கட்கும், தமிழைத் தனித்தியங்கும் மொழியாக ஆகாவண்ணம் தடுத்து நிற்றலே தலைபாய பணியாய்க் கொண்டு வரும் சுதேசமித்திரன், தினமணி, ஆனந்தவிகடன், கலைமகள், ஆகிய தாளிகைகட்கும் 'தமிழ் வளர', தமிழ் வாழ', 'வெல்க தமிழ்' எனும் நல்லார் நகைப்பிற்குரிய தலைப்பிட்டுக் கட்டுரைகள் வழங்கி வரும் அப்பண்டாரகர்களின் பழந்தமிழ்ப் பற்றின்மையையும், சிறுமைத் தன்மையையும் ஈண்டு விரித்துரைக்கின் திங்கள் பல செல்லும் என்பதென் திண்ணமான எண்ணம்!

இத்தன்மைத்தாய் மாங்கனி உட்புகுந்த வண்டொத்துக் கொழுத்துக் கொண்டு, மாத்தமிழை வளர்ப்பதாகக் கூறித் 'தமிழ்' எனும் சொல்லையே வணிகப் பொருளாக்கிச் செல்வமீட்டலே தம் கருத்தாய்த் தலைமேற் கொண்டலையும் தமிழாசிரியர்களே தமிழிற்கு முதற் பகைவர் என்பது சாலப் பொருந்துமன்றோ? இவ்விழிநிலை எய்தியுள்ள தமிழாசிரியர்கட்கெலாம் இறுதியாக விடுப்பதொன்று! இற்றை நாளில் குமுகாயத்தில் விழிப்பேற்பட்டுள்ளது! நீங்கள் தொடர்ந்து நடத்திவரும் இழிவான பிழைப்பை இன்னும் நடத்திவரின் வீறு கொண்டெழும் தமிழ்க் குமுகாயம் வேருடன் வீழ்ந்திடும்! இன்றுதொட்டே இழிவுச் செய்கையை விட்டொழிந்து, போலித் தொண்டாற்றலைப் புறக்கணித்து, அஞ்சா நெஞ்சமொடு அருந்தமிழ் அன்னைக்கு அரும்பணி புரிக!—இல்லையேல் தமிழகத்துக் காக்கையும் கழுகும், நரியும் நாயும் நாடவொண்ணா நிலையை அடையும் இழிபிறவிகளாவீர்!

# "பெரியார் பேசுகிறார்"

புலவர் வி. பொ. பழனிவேலன், பி.ஓ.எல்.,

இத்தலைப்பைக் கண்ணுறும் சிலர்க்கு இதுகாறும் பெரியார் மூங்கையாகவா இருந்தார்? என வினவத் தோன்றுவது இயல்பே. ஆனால், அவ்வாறன்று. பெரியார் முன்பு பேசிய, செய்த செயல்களுக்கு முரண்பட, உண்மையை ஒதுக்கிப் பேசுகிறார் என்பதே உட்பொருள். 'ஆனந்த விகடன்' கிழமை இதழ் 25-ஆம் பக்கத்தில் 11-4-1965-ஆம் நாள் வெளியான தலைப்பே இஃது. திரு. "சாவி." என்பவர் பெரியாரை அவரது இல்லத்தில் கண்டு வினவிய வினாக்களும் அவற்றிற்கு அவர் அளித்த விடைகளுமே உள. அவற்றில் 'இந்தி' மொழி பற்றிய வினாக்கட்கு விடுத்த விடைகளும் எமது விளக்கங்களும் தரப்படுகின்றன. பொது அறிவுடையோர் ஆய்ந்து உண்மை ஓர்ந்து கொள்வாராக!

வினா:- அந்தக் காலத்தில் இந்தியை எதிர்த்துப் போராட்டமெல்லாம் நடத்தினீர்களே இப்பொழுது ஏன் சும்மா இருக்கிறீர்கள்?

விடை :- அப்படியா? மன்னிக்கவேண்டும். இப்பொழுது இந்தி எங்கே இருக்கிறது? தெரியாமல்தான் கேட்கிறேன்; சொல்லுங்கள்.

விளக்கம்: பெரியார்க்கு வியப்புகலந்த வினா எழுவது நமக்கும் வியப்பாகவே உளது. அவர்க்குக் காது கேட்க மறுக்கிறது; கண் பார்க்க மறுக்கிறது. இந்நிலையில் அவர் கேட்கும் கேள்வி பொருத்தமே. ஆனால், அவரை அண்டிப் பிழைக்கும் அடியார்கள் சொல்லாமலா இருப்பார்கள்? சொல்லியிருந்தால் இவ்வாறு கேட்டிருப்பார் என்று உறுதி கூறல் ஒல்லாது. யாம் கூறுகிறோம்.

உயர் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு முடியப் பயிலும் மாணவ மாணவியர் யாவரும் 'இந்தி'ப்பாடம் படித்தல் வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஒவ்வொரு பள்ளியிலும், குறைந்தது, ஓர் இந்தி ஆசிரியராவது இருக்கிறார். இந்திபயில விருப்பமில்லாதவர்களாயினும் வகுப்பறையுள் இருந்தேயாக வேண்டும். தேர்வும் எழுதல் வேண்டும். பதினோராம் வகுப்பு மாணவர் யாவரும் அரசு நடத்தும் பொதுத் தேர்வில் இந்தித் தேர்வும் தவறாது எழுதுதல் வேண்டும். இந்தித் தேர்வுக்குப் போகாதவர் ஏனைய பாடங்களில் நிரம்ப மதிப்பெண்கள் பெற்றிருப்பினும் தேர்வில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படமாட்டார். 1965-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 26-ஆம் நாள் தொட்டு இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி என்று நடுவணரசு ஆணை

யிட்டுள்ளது. அதுதான், மாணவர், மற்றையோர் எனப் பலரைப் பலிகொண்டது. நடுவணரசினிடமிருந்து வரும் அலுவலகச் செய்திகள் அனைத்தும் இந்தியில்தான் வருகின்றன. பணக்கட்டளைத்தாட்கள், சேமவைப்பில் பணம் பெறக் கொடுக்கும் விண்ணப்பத்தாள்கள் இந்தியில் மட்டிலுமே அச்சிடப்பட்டுள்ளன. இந்தி கற்றவர்கட்கே ஊழிய உயர்வும் ஊதிய உயர்வும் அளிப்பதாக அரசு கட்டளையிட்டுள்ளது. கல்லாதவர் விரைவில் கற்றுக் கொள்ளல் வேண்டுமென்றும் அக்கட்டளை அறைகிறது; அலுவலகத்தில் கற்றுக்கொள்ளவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு நூற்றுக் கணக்கில் இந்தித்தட்டச்சுப் பொறிகள் வந்துள்ளன. வானொலி மூலம் நாடோறும் இந்திப்பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது; இந்தியில் செய்திகள் சொல்லப்படுகின்றன. 'இந்தியா' பாரதம் எனப் பகரப்படுகிறது. கி.மு.; கி.பி., "சகசகாப்தம்" ஆகச் செப்பப்படுகிறது. தமிழ்நாட்டு அஞ்சலகப் பெயர்கள் இந்தியிலும் ஆங்கிலத்திலுமே எழுதப்பட்டுள. இருப்புப்பாதை நிலையங்களின் பெயர்கள் தமிழ், இந்தி, ஆங்கிலம் மூன்றிலும் எழுதப்படுகின்றன. பயணச் சீட்டுகள் இந்தியில் மட்டும் அச்சிடப்பட்டு வருவதாகத் தெரிகிறது, பாரதத்திலும், தமிழகத்திலும் இந்திப் பயிற்சிப்பள்ளிகளும், இந்தி உயர்பள்ளிகளும், இந்திக்கல்லூரிகளும் ஏற்படுத்தி வருகின்றனர். இந்திப்பல்கலைக்கழகம் தமிழ் நாட்டில் நிறுவவும் திட்டம் தீட்டப்பட்டுவருகிறது. தமிழகத் தெருக்களில் இந்தி பரப்பு மன்றங்கள் உண்டாக்கப்படுகின்றன. இந்தி படிக்கும் மாணவர்கட்கு உதவித் தொகை அளிக்கவும் ஏற்பாடாகிவருகிறது. தென்னகத்திலுள்ள நடுவணரசு அலுவலகங்களில் பெரும்பாலும் இந்திக்காரர்களும் இந்தி தெரிந்தவர்களுமே அமர்த்தப்படுகின்றனர். இன்னும் மறைமுகமாக எந்தெந்த வகையில் இந்தி ஆட்சிபுரிகிறதென்பது தெரியாமலும் நடைபெறுகிறது. எங்கே இந்தி இல்லை என்பது எமக்குத் தெரியவில்லை, தமிழ்நாடு முழுமையும் இந்திப் பேய் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. பெரியாரே, உமக்குத் தெரியாதா? இந்தி எங்கே இருக்கிறது? என்று கேட்கிறீரே!

வினா:- இந்திதான் ஆட்சிமொழியாக வந்துவிட்டதே?

விடை:- எங்கே வந்துவிட்டது? உனக்குத்தான் ஆங்கிலம் இருக்கிறதே? இந்தியா ஒன்றுயிருக்க வேண்டுமானால் பொதுவாக ஒரு ஆட்சிமொழி வேண்டியதுதானே? இந்திக்காரன் உங்களைப் போன்று ஆங்கிலத்தை நினைக்கவில்லையே! ஆங்கிலத்தை இழிவு என்று நினைக்கிறானே! தமிழ் நாட்டுக்காரன் சொல்லுகிறபடி இந்தியா நடக்குமா? அது மக்களாட்சியா?

விளக்கம்:- 26—1—'65 முதல் இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி என்று விளம்பரம் செய்துள்ளமை பெரியார்க்

குத் தெரியாதுபோலும்; அன்றித் தெரியாதுபோல் நடிக்கிறார் போலும். அதனால்தான் எங்கே வந்து விட்டதென்கிறாரோ? ஆங்கிலம் நமக்கு இருப்பது நிலையானதா? இப்பொழுதும் ஆங்கிலத்துணையின்றி இந்தியில் மட்டில் அறிக்கைகள் வருகின்றனவே! இன்னும் சின்னாளில் என்னவாகப்போகிறதோ? பெரியாரே, பொறுத்திருந்து பாரும்.

இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டுமானால் ஒரே ஆட்சி மொழி வேண்டுமென்பதே இல்லை. அமெரிக்கா, உருசியா, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் பல மொழிகள் தேசிய மொழிகளாக உள்ளனவே. அந்தந்த மாநில மொழி எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டால் தனியே ஒரு மொழி பொதுவாகத் தேவை இல்லை. அப்படி ஒன்று வேண்டுமானால் ஆங்கிலத்தையே வைத்துக் கொள்ளலாமே. "தாய்ப்பால் பைத்தியம்," என்று தமிழர்க்கு அறிவுரை கூறும் பெரியார் இந்திக்காரர்கட்கு அதனைக் கூறிச் சரிப்படுத்தலாமே. இந்திக்காரன் எங்களைப்போல் ஆங்கிலத்தை நினைக்கவில்லையெனின் நாங்கள் இந்திக்காரனைப்போல் இந்தியை நினைக்கவில்லையே. அவன் ஆங்கிலத்தை இழிவு என்று நினைத்தால் நாங்கள் இந்தியை இழிவாகக் கருதுகிறோம். தமிழ்நாட்டுக்காரன் சொல்லுகிறபடி இந்தியா நடக்கவேண்டியதில்லை. இந்தியாவினின்றும் எங்கள் நாட்டை விலக்கி விடட்டுமே? எங்கள் விருப்பம்போல் எப்படியாவது ஆண்டு கொள்கிறோம்.

மக்களாட்சி என்பது சிறுபான்மையோர்க்கும் கேடு பயக்காத வகையில் ஆட்சிபுரிவதேயாம். திரு. நேரு அவர்கள் இந்த நாட்டில் உள்ள எந்தக் குடிமகனுக்கும் தீங்கின்றி ஆட்சிபுரிவதே மக்களாட்சி என்றாரே, அதன் கருத்தென்னவோ? ஆனால், அவரும் இன்றில்லை; அவர் சொன்னவையும் இன்று நடைபெறவில்லை. பெரும்பகுதி மக்கள் சிறுபகுதி மக்களை அடக்கி ஆள்வது தனியரசென்றும், வல்லாட்சி என்றுமே கூறப்படுமேயன்றி, மக்களாட்சி எனக்கூறல் சாலுமா? இதனைப் பெரியார் அறிந்தும், அறியாதவர்போல் பேசுகிறார். அவர் எண்ணம் யாதோ?

**வினா:-** ஒரு நாளைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு இந்தி வரத்தானேபோகிறது?

**விடை:-** நன்றாயிருக்கிறதே! ஒரு நாளைக்கு இல்லாவிட்டாலும் ஒரு நாளைக்குச் சாவு வரத்தானே போகிறது என்று எவனாவது இப்பொழுதே கிணற்றில் விழுவானா? அப்படியே ஒருவேளை இந்தி வந்தகென்றால், உயிரோடு இருந்தால், அதை எதிர்க்கப் போகிறவன் நான்தானே?

**விளக்கம்:-** இந்தி இன்னும் வராதது போலவும், வந்தால் எதிர்க்கிறவர் போலவும், எதிர்ப்பதற்கு இவரைத்தவிர வேறு எவரும் இல்லாதது போலவும் பேசுவது வியப்பாகவும்

உளைப்பாகவும் இருக்கிறது. "நான் தமிழனல்லன்; எனக்குத் தமிழ்ப்பற்றுமில்லை" என்று கூறுபவர் இந்தி வந்தால், "நான்தான எதிர்ப்பேன்" என்பது வியப்பிலும் வியப்பே. இஃது முழுப் பூசணைக்காயைச் சோற்றுள் மறைப்பது போன்றதும், ஆடு மழையில் நனைகிறதென்று ஓநாய் ஊளையிட்டு அழுவது போன்றது மாயுளது. சென்ற இந்தி எதிர்ப்பு அறப்போரில் உயிரிழந்தார் பலர்; உறுப்பறை யானோர்பலர்; சிறைப்பட்டார்பலர். இவற்றையெல்லாம் தெரிந்தும் அமைதியாகக்கூட இராமல், "இந்தி வந்தால் என்ன கெட்டுவிடும்? படித்தால் என்ன பாழாய்விடும்?" என்கிறவர் "இந்தி வந்தால் எதிர்க்கிறவன் நான்தான்" என்று இயம்புதலில் ஏதாவது பொருளுண்டா? இவரைத்தவிர இப்பொழுது தமிழ்நாட்டில் வேறு எதிர்க்க ஆளே இல்லை என்ற தோரணையில் பேசுவது ஏமாற்றுப் பேச்சேயன்றி உண்மையன்று.

வினா:- இந்தி வந்துவிட்டதெனின், நாமெல்லாம் இரண்டாந்தரக் குடிமக்களாகிவிடப் போகிறோம். நாம் ஏன் இரண்டாந்தரம் ஆகல் வேண்டும்?

விடை:- நீ இரண்டாந்தரக் குடிமகனாகிவிடுவேனென்று சொன்னால், ஆங்கிலம் வந்தால் இந்திக்காரன் மூன்றாந்தரக் குடிமகனாகி விடுவேனென்று சொல்லுவான்.

விளக்கம்:- இந்தி இந்தியாவின் ஆட்சிப் பொதுமொழியாகி விட்டமையின், தமிழன், ஆங்கிலர் காலத்தில் இருந்தது போன்று, இரண்டாந்தரக் குடிமகனேதான். இந்திக்காரன் முதல்தரக் குடிமகனாவான். ஆங்கிலம் ஆட்சிமொழியாயின் இந்திக்காரனும் தமிழனும் ஒரே நிலையில் உள்ளவர்தாமே? எங்ஙனம் இந்திக்காரன் மூன்றாந்தரக் குடிமகனாவான்? என்பது விளக்கமன்று. ஏதோ பேச்சுக்காகப் பேசியிருப்பாரோ?

வினா:- "மும்மொழித்திட்டப்படி நாம் இந்தி கற்றுக்கொள்ள வேண்டி வரலாமல்லவா?

விடை:- மும்மொழித்திட்டம் என்றால் என்ன கொஞ்சம் நீங்கள்தான் சொல்லுங்கள்; விளங்கவில்லை." (விளக்கிச் சொன்ன பின்னை), "உம், சரியாய்ப் போயிற்று; ஏதாவதொரு அயன்மொழி படித்தல் வேண்டுமென்றால் அஃது இந்தியாகவே இருந்து விட்டுப் போகட்டுமே! படிக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்களா?'

விளக்கம்:- முன் இந்திவந்தால் எதிர்ப்பவன் நான்தான் என்றார்; இப்பொழுது இந்தியாகவே இருந்துவிட்டுப்போகட்டுமே என்கிறார். முன்னுக்குப்பின் முரணான, முறையற்ற பேச்சு. 'கட்டாயம்' என்றால் பெரியார் அகர முதலியில் என்ன பொருளோ? அறியோம். இன்று எல்லாரும் இந்தி படித்தல் வேண்டும்; தேர்வும் எழுதுதல் வேண்டும் என்று இருப்பது கட்டாயமில்லையா? படிக்காமலும் எழுதாமலும் இருக்கவிடவில்லையே. பள்ளியிறுதி வகுப்புத்தேர்வுக்குச்

செல்லும் மாணவர் அனைவரும் இந்தித் தேர்வும் எழுதல் வேண்டும்: எழுதாமல் எவரும் இருத்தல் கூடா. ஒன்பது பத்து வகுப்புகளில் எல்லாரும் இந்திவகுப்புக்குச் செல்லல் வேண்டும்; யாரும் இந்தி வகுப்புக்குப் போகாதிருத்தல் கூடாது; என்பன கட்டாயத்தின் பாற்பட்டதன்றி வேறென்ன வாம்? இந்தி ஆட்சிப் பொது மொழி என்பது அரசியல் சட்ட மாக்கியபின் அதனை எந்த மாநிலமேனும் ஏற்காமலிருத்தல் எங்ஙனம் ஒல்லும்? ஆகவே, அதுவும் கட்டாயந்தானே?

ஆனால், 'கட்டாயம்' என்ற சொல்லை அரசு திறமையாகத் தவிர்த்திருப்பதை வைத்துக் கூறுகிறார்போலும். எல்லாம் அவர்க்கே வெளிச்சம்!

வினா:- இப்பொழுது கட்டாயம் (கம்பல்சரி] இல்லை. இனி வந்தால்?

விடை:- வரும்பொழுது பார்த்துக்கொள்ளலாமே. அதற்கு இப்பொழுது என்ன?

விளக்கம்:- வினவுவாரும், விடையளிப்பாரும் ஒரே ஓடத்தில் செல்லுகின்றவர்களே! ஆதலின் அவரும் கட்டாயமல்லை என்று இயம்புகின்றார். தமிழர் யாவரும் இந்திபடிக்காவிட்டால் நாட்டரசு, நடுவணரசு இரண்டிலும பணிபுரிதல் இயலாதென்றோ, எல்லாரும் கட்டாயமாகப் படித்தல் வேண்டுமென்றோ கொடுங் கட்டளையிட்டால்தான் கட்டாயம போலும!

இப்பொழுதே தமிழ் நாட்டில் பலர் இந்தி படித்துவிட்டார்கள் என்று தமபட்ட மடித்தும், இங்கு எவரும் இந்தியை எதிர்க்கவில்லை என்று பொய் புகன்றும் மேலிடத்தார் நன்மதிப்பைப் பெற விழையும் பேராயக்கட்சியினர், இனியொருகால் பெரியார் இந்தியை எதிர்த்துப் போராடினால் அவர்க்குப் பைத்தியம்பிடித்துவிட்டது என்பார்களன்றோ? இன்று இந்தி புகுத்தும் செயலில் 'கட்டாயம்' என்ற சொல் இல்லையெனினும் கட்டாயம் படித்தல் வேண்டும் என்றற்குரிய சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பெரியாரால் மறுக்கவோ, மறைக்கவோ முடியாதே!

வினா:- நடுவரசில் அலுவல் கிடைப்பதற்கு இந்தி தேவையில்லையென்றாலும் அலுவலில் சேர்ந்த பிறகு படிக்கச் சொல்கிறார்களே!

விடை:- படித்துவிட்டுப் போயேன். வட்டாட்சித் தலைவர் (தாசில்தார்) அலுவலுக்குப் படிக்கப் போகிறவர்கள் அளத்தல் (Survey)முறைப் படிப்புப் படிக்கிறதில்லையா? அதுபோன்று இந்தியைப் படித்துக்கொள்கிறது. உனக்கு இதில் என்ன இடர்? அல்லது இழப்பு? அவன் நேரத்திலே அவன் கொடுக்கிற ஊதியத்திலே நீ இன்னொரு மொழியைப் படித்துத் தெரிந்துகொள்கிறாய்? இது மிச்சந்தானே!

**விளக்கம் :-** எந்தத் தொழிலை ஏற்பவனும் அதற்குரிய அறிவைப்பெறல் இன்றியமையாததே. பொறியாளன் கட்டிடக் கலையைக் கற்றுக் கொள்ளல் வேண்டும் என்பது நேர்மையானதே. கட்டிடக்கலையைக் கற்றாலன்றித் தொழில் செய்தல் இயலா. ஆனால், இந்தி கற்காமல் அரசியல் பணிபுரிதல் முடியாதா? அதிலும், தமிழ்நாட்டில் அலுவல்புரிய வடநாட்டானின் இந்தியைப் படிக்கத்தான் வேண்டும் என்பது ஏமாற்றுத்தானே! இந்தி படிக்காமல் இப்பொழுது மற்ற வேலைகளெல்லாம் நடக்காமலா கிடக்கின்றன. இந்தி கற்றால்தான் வேலையில் உயர்வு, ஊதியத்தில் உயர்வு என்றால் கட்டாயம் இந்தி படித்தல் வேண்டும் என்பதை மறைவாகச் சொல்வது என்றுதானே பொருள்? முன்னர் எதிர்ப்பேன் என்றவர், பின்னர் இந்தி படித்தால் ஊதியந்தானே என்கிறார். பணம் கிடைக்கின்றது என்பதற்காகத் தன்மானத்தைப் பெரியார் விட்டு விடுவாரா? இனி' அவர் அப்படி விட்டுவிட இசைந்தாலும் பிறரும் அவ்வாறு விடவேண்டும் என்பது எவ்வளவு பேதைத்தனம். மேலும் இந்திக்காரன் தன் மொழியைக் கற்பிக்க அவன் பாட்டன் சொத்தையா ஊதியம் கொடுக்கிறான்.

**வினா:-** அடுத்தாற் போல் ஏதேனும் இயக்கம் நடத்தப் போகிறீர்களா?

**விடை:-** நடத்த வேண்டும்; எது நடத்தினாலும் அது அரசாட்சிக்கு எதிராக நடத்த வேண்டியிருக்கிறது; அப்படி நடத்தினால் அஃது எதிர்க்கட்சிக்காரன்கட்கு உதவியாகிவிடும். அதனால் அதைப்பற்றி ஆராய்ந்துதான் முடிவு செய்தல் வேண்டும்.

**விளக்கம்:-** நடுவணரசுக்கும், தமிழக அரசுக்கும் பெரியார் அடிமையாகிவிட்டாரா? அதனாற்றான் அரசுக்கு எதிராக நடத்த அஞ்சுகிறார்? முன்பெல்லாம் அரசுக்கு எதிராகப் பல செயல்கள் புரிந்தவர், இப்பொழுது அஞ்சுவதன் உட்கருத்தியாதோ? அரசுக்கு எதிராக நடத்த நேரும் என்பது கொண்டு அரசு செய்யும் செயல்களும். போகும் போக்கும் தவறானவை என்றுதானே பொருள்? இன்றேல், இவர் செய்வது ஏன் அரசுக்கு எதிர்ப்பாகிறது? அவ்வாறாயின், "பெரியார் அன்று சொன்னார்; அரசு இன்று செய்கிறது" என விடுதலையில் விளம்பரப்படுத்துவதெல்லாம் போலிதாமோ? எதிர்க்கட்சிக்காரனுக்குத் துணையாகிவிடும் என்றும் அஞ்சுகின்றார். "மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கினால் போதும்" என்ற கொள்கைக்கு ஒப்பானதே பெரியார் கொள்கை. அரசுக்கு எதிராகவும் எதிர்க்கட்சிக்கு உதவியாகவும் செயலாற்றக் கூடாவென்றஞ்சி தமது நலத்தையும், கொள்கையையும் மாற்றிக்கொள்ளுமளவு அரசு இவருக்குச் செய்தது என்னவோ? சிறுபான்மையோர் மீதுள்ள பகைமை காரணமாகத் தமிழ் நாட்டையே வடவர்க்கு அடைவுவைக்க

(73-ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் உருவில் தமிழ்ப் பகைவர்.

தமிழ் உருவில் தமிழ்ப்பகைவர் இருக்கின்றார் – அவர்
தமிழர்களின் தாலிகளை அறுக்கின்றார்!

உமிழ்ந்ததெல்லாம் நக்கித்தின்னும் நாய்கள் – மேல்
உள்ளவர்க்குக் காட்டிக்கொடுக்கும் பேய்கள்! (தமிழ்)

கற்றவர்போல் நடிக்கும்;பழகும் ஒன்றி – ஒரு
காசுக்காக மலமும் தின்னும் பன்றி!
உற்றவர்போல் பேணிவரினும் பழுதை – நன்றி
உணர்விலாது கெடுக்கப் பார்க்கும் கழுதை! (தமிழ்)

கட்சிபேசும்; தலைமைதாங்கும் தமிழால் – பெருங்
கயவர்களின் கூட்டஞ் சேர்க்கும் தமிழால்!
எச்சிலைக்கு நாக்கைநீட்டிப் படுக்கும் – மேல்
இருப்பவர்க்கே இனத்தைக்காட்டிக் கொடுக்கும்! (தமிழ்)

அழைப்பிலாது நமதுவீட்டை நண்ணும் – மெய்
அன்பன்போலச் சுவைக்கச் சுவைக்கத் தின்னும்!
உழைப்பிலாது பிழைக்கப் பார்க்கும் ஓரி – தமிழ்க்(கு)
ஊறுசெய்யும் முன்னை யுள்ளம் மாறி! (தமிழ்)

'மக்கள்போல்வர் கயவர்'என்பர் குறளார்! – அவர்
மாண்பறியார்; கீழ்மை நெஞ்ச இருளார்!
குக்கல்போல வாழ்வர்; கொள்கைக் குள்ளர் – நாளும்
குறும்புபேசித் திரிவர்;பொய்மைக் கள்ளர்! (தமிழ்)


நீங்கள் சுவைத்தீர்களா ?

துரை-மாணிக்கம் எழுதிய

இனிய, எளிய தமிழ்ப் பாவியம்!

— கொய்யாக்கனி —

( விலை: 2-25. )

தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை ,1-50.

அஞ்சல் செலவு தனி.

# விக்கல்

அ. கி. மூர்த்தி, பி. எசி; பி. டி.

**இதுவே விக்கல்:** விக்கல் என்ன என்பதைப் பற்றி அறிவியல் நன்கு அறியும். ஆனால் இன்றைய அறிவியல் விக்கல் ஒருவரை வருத்துவதற்கும், வருத்தாமல் தடுப்பதற்கும் காரணங்கள் எவை என்பதற்கு விளக்கங் கூற இயலாதவாறு உள்ளது. விக்கலை உண்டாக்கும் முயற்சிகள் ஆராய்ச்சியாளர்களுக்குக் கடினமாக இருப்பது போலவே, அதை நிறுத்துவதும் அவர்களுக்குக் கடினமாகவே உள்ளது. விக்கல் என்பது வலிப்புள்ள உள் மூச்சு அசைவு அல்லது இயக்கமே ஆகும். இதில் வயிற்றுமேல் தசை (Diaphragm) சட்டென்று சுருங்குவதைத் தொடர்ந்து குரல்வளை மூடுவதால், உள்வரும் காற்று மூடிய குரல் வளையில் மோதி ஒரு வகைத் தனி ஒலியை உண்டாக்குகிறது.

**காரணங்கள் பல:** எரிச்சல் அல்லது வீக்கம் வயிற்று மேல் தசை நரம்பை (Phrenic nerve) அலைக்கழிக்கின்ற பொழுது விக்கல் உண்டாகிறது. இந்நரம்பு கழுத்துக்குப்பின் தண்டு வடத்தின் உச்சியிலிருந்து கீழ் நோக்கிச் செல்கிறது. வயிற்று மேல்தசை என்பது வயிற்றையும் மார்பையும் பிரிக்கும் நம் உடலிலுள்ள மிகப் பெரிய தசை. இதற்கு மேற்காணியாக இருப்பது மேற்கூறிய நரம்பே. தன்னுடைய ஒத்த அசைவினால் நுரையீரல்கள் சுருங்குவதையும் விரிவதையும் இத்தசை கட்டுப்படுத்துகிறது. இக் கட்டுப்பாட்டுச் செயலுக்குரிய செய்திகள் வயிற்று மேல் தசை நரம்பின் வழியாக மூளையிலிருந்து வருகின்றன. இந் நரம்பின் நிலையான குறிபாடுகளுக்கு ஏற்ப வயிற்றுமேல் தசை செயற்பட்டு, வெளிக் காற்று உள் வரவும், உள் காற்று வெளியேறவும் செய்கிறது. இது விரியும்பொழுது வெளிக் காற்று உள் வருகிறது; சுருங்கும்பொழுது உள் காற்று நுரையீரல்களிலிருந்து வெளியேறுகிறது. இயல்பாக, நாம் வெளிக்காற்றை உட்கொள்ளும்பொழுது, இத்தசை சுருங்குகிறது. இதற்குரிய கட்டளை மேல் தசை நரம்பின் வழியாக மூளையிலிருந்து வருகிறது.

எரிச்சலை ஊட்டவல்ல எப்பொருளும் இத் தசையைத் துடிக்கச்செய்யவல்லது. ஆகவே, மூச்சு மையமுள்ள மூளையின்

பகுதியை எரிச்சல் ஊட்டவல்ல எப்பொருளும் இத் தசையைத் துடிக்கச் செய்யும். இம்மையம் எரிச்சல் உண்டாகும் உடலின் பல பகுதிகளிலிருந்து வரும் துடிப்புகளைப் பெற்றவண்ணம் உள்ளது. நிலைத்த விக்கல்களுக்குரிய தொல்லை உடலில் பல இடங்களில் தோன்றலாம். பகுத்தறிந்த பின்பே இதை மருத்துவர் உறுதி செய்ய இயலும். மேல் தசையிலோ, மேல் தசை நரம்பின் வழியிலோ, தண்டு வட கழுத்துப் பகுதியிலோ, முகுளத்தின் கீழ்ப் பகுதியிலோ, மூளையுடன் இணைந்துள்ள உடலின் தொலை பகுதிகளிலோ விக்கலுக்குரிய தொல்லைகள் தோன்றலாம். எனவேதான், விக்கலுக்குரிய காரணத்தை உடன் அறிவது கடினமாகவே இருக்கும். இரைப்பை நீரில் அடர் அய்டிரோ குளோரிக்காடி உள்ளது. இஃது இரைப்பையின் சுவரில் அரிப்பை உண்டாக்கும்பொழுதும் விக்கல் ஏற்படுகிறது. சளிக் காய்ச்சல், உறங்கவைக்கும் நோய், சிறு நீரகத் தொல்லை, குடல்வால் அழற்சி, குருதிக் கழிவு அல்லது சிறு நீரகக் கோவை முதலிய நோய்களுக்குப்பின் விக்கல் வரும். அறுவைக்குப் பின்னும் அஃது ஏற்படலாம்.

தொற்றியும் பரவுதல்: சிலவகை விக்கல்கள் தொற்றியும் பரவக்கூடியவை. கொள்ளை நோய்போல் பரவும் விக்கல்களும் உண்டு. சில கடின வகை விக்கல்கள் உளவியல் சார்பாக உண்டாகின்றன. கருவலிப்பு விக்கல்கள் (Hysterical hiccups) உள எழுச்சித் தொல்லைகளால் உண்டாகின்றன. இவை வழக்கமாகக் குறைந்த கால அளவுக்கே இருக்கும். சில பொழுதுகளில் திங்கள் கணக்கிலும் இருக்கும்.

வரலாற்றுச் சான்று: கிரேக்க நாடக ஆசிரியர் அரிசுடேரி பேன்சு நாட்பட்ட விக்கலால் வருந்தியவர்களில் ஒருவர். இவர் (கி. மு. 400) மூச்சை அடக்கி, வாயில் நீரை ஊற்றிக் கொப்பளித்தும் விக்கல் நின்றபாடில்லை. தும்மும் அளவுக்கு நெடியேறச் செய்து, இவர் தம் விக்கலைப் போக்கினாராம்!

காதலியின் விக்கல்: இளம் பெண் ஒருத்திக்குக் காதல் தொல்லையால் விக்கல் ஏற்பட்டது. இளைஞருடன் பழகுவது பற்றி இப் பெண் தன் தந்தையுடன் கடுமையான கருத்து வேறுபாடு கொண்டாள். இதனால் கொடிய கருவலிப்பு விக்கல் உண்டாயிற்று. உயிருக்கு ஊறு விளைவிக்கக் கூடிய மருந்துகளும் அதை நிறுத்தியபாடில்லை. விக்கலுக்குரிய உடலியல் ஏதுவும் புலப்படவில்லை. கீழ்ப்படிதல், விளங்க வைத்தல் ஆகிய அடிப்படையில் எளிய கருத்தேற்றங்களை மருத்துவர் கூறவே, குறுகிய கால அளவில் நீங்கலாயிற்று. மருத்துவ வரலாற்றை உண்டாக்கிய விக்கல்களும் உண்டு. ஓர் இளம் நங்கை 47 நாட்கள் விக்கலால் துன்புற்றார். மற்றொரு நங்கையை மூன்றாண்டுகள் விக்கல் வருத்தி வாட்டியது.

போக்கும் முறைகள்: விக்கலைப் போக்க, பல முறைகள் வழக்கத்திலுள. அவற்றில் ஒன்று தாள்பை அல்லது முகமூடி முறை. இதில் நோயாளி தம்முடைய தலையைத் தாள் பையினால் மூடிக்கொண்டு வெளிவிட்ட கரிவளியையே உள்ளிழுப்பார். இதனால் குருதியோட்டத்திலுள்ள உயிர்வளி குறைந்து தசைகளும் நரம்புகளும் தளர்வுற்று விக்கல் நீங்கும். இதை ஒருவர் தாமாகவே மேற்கொள்வது ஏற்றதன்று. கரிவளி மிகுதியாக உட்கொள்ளப்பட்டால், அதனால் மயக்கமுண்டாகும். இதை மருத்துவரின் மேற்பார்வையிலேயே செய்துகொள்வது நல்லது. முகமூடியை அணிந்து கரிவளி, உயிர்வளி சேர்ந்த கலவையை உள்ளிழுக்க விக்கல் நீங்கும். மூச்சை அடக்கி 100 அல்லது 1000 வரை எண்ணலாம். காதுகளைக் குளிரச் செய்தல், அச்சுறுத்தல், குளிர்ந்த நாணயங்களைக் கழுத்தின் பின் புறத்தில் ஒத்துதல், பழுத்த கம்பியினால் தோலில் சூடு போடுதல், இரைப்பையில் தட்டுதல் ஆகிய முறைகளினாலும் விக்கலைப் போக்கலாம். பொதுவாக, உண்கின்றபொழுது விக்கல் ஏற்பட்டால் நீரைப் பருகி அதைப் போக்கலாம். மற்றபொழுதுகளில் ஏற்பட்டால் குளிர் நீரைப் பருக, அல்லது பனிக் கட்டித் துண்டுகளை வாயில் போட்டுச் சப்ப விக்கல் நீங்கும் விக்கல் கடுமையாக இருக்குமானால் மருத்துவர் உதவியை நாடுவதே நல்லது.

இயல்பு கடந்த மூச்சு வகைகள்: விக்கல் என்பது இயல்பு கடந்த மூச்சு வகையைச் சார்ந்ததே. மற்ற இயல்பு கடந்த மூச்சு வகைகள் இவையே.

இருமல்: இஃது ஆழ்ந்த உள்மூச்சாகும்; குரல்வளையைத் திறக்கும் வலிந்த வெளிமூச்சுக்குப்பின் இதுவரும். காற்று வழிகளில் ஏற்படும் அரிப்பினால் இஃது உண்டாகிறது. இந்த அரிப்பின் தலைவாயை நீக்கவே இது வருகிறது.

தும்முதல்: மூக்கிலுள்ள குளிர்மப்படல அரிப்பினால் இஃது உண்டாகிறது மூக்குத்தொளைகள் வழியாகக் காற்று இதில் வலிந்து செல்கிறது.

பெருமூச்சு: இஃது ஆழ்ந்த மூச்சு இல்லாத பொழுது, ஆழ்ந்த உன்னிப்புடன் ஒரு செயலில் நாம் ஈடுபட்டிருக்கும் பொழுது இஃது ஏற்படும். இஃது ஒரு நீண்ட உள்மூச்சே. நுரையீரல் அதிக உயிர்வளியைப் பெற இச்செயல் நடைபெறுகிறது.

கொட்டாவி: இதுவும் ஒரு நீண்ட உள்மூச்சே. இதில் முகத்தசைகள் செயலாற்றுகின்றன. உயிர்வளி குறையும் பொழுது நுரையீரலுக்கு வேண்டிய, இச்செயல் நடைபெறுகிறது. உறக்கத்திற்கும் அசதிக்கும் இஃது அறிகுறியாகும். *

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

# வள்ளுவர் அறிவுறுத்திய அரசியல்.

புலவர், வித்துவான்: **ஒண். கி. சந்திரசேகரன்.** எம்.ஏ;பி.டி;பி.ஓ.எல்.

(ஓ) வினையின்கண் முயல்வான்தெய்வத்தானாகை, பொருளின்மையானாகை, மெய்வருத்தத்தானாகத் தனக்கிடுக்கண் வந்துழி அதற்கு அழியாது வினை யினிது முடிந்துழி நிகழற்பாலதாய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வருவழிச் செய்யவே, அவன் அழிவின்றி மனவெழுச்சியால் அதனைத் தள்ளி அக்குறை முடிக்குமாற்றலுடையனாவன். தெய்வத்தான் இடுக்கணுயவழி, சகடமீர்க்கும் பகடு அளற்று நிலத்தில் புக்குழி மருங்கொற்றியும், மூக்கூன்றியும், தாள்தவழ்ந்தும் அரிதினுய்க்குமாறு போல அரசனும் வினையை எடுத்துக்கொண்டு இடையூறுகள் வந்துழி மனங் கலங்காமலுய்த்தல் வேண்டும். இடுக்கணொன்றே பலகால் வரினும், வேறுபட்டனவராய் வரினும் தன் உள்ளக் கோட்பாடு விடாமை வேண்டும். இவ்வாறு வினை செய்யுங்கால் மனத் திட்பமுடையராய் விடாது முயலவே வினை முற்றுப் பெற்றுப் பயன்படும்; படவே எல்லா விடும்பையுமிலவாம்.

> இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
> இடும்பை படாஅ தவர்.

மெய் வருத்தத்தால் இடுக்கண் வந்துழி, நால் நிலையினுமுள்ளவுடம்புகள் இடும்பையென்னும் வாளுக்கிலக்கென்று தெளிந்து தம்மேல் வந்த இடும்பையை யிடும்பையாகக் கொள்ளார். இன்பத்தை விழையினும் இடும்பையை யியல்பென்றுது காக்கக் கருதினும் துன்பம் விளைதலின் இவ்விரண்டுஞ் செய்யாதான் துன்பமுறான். துன்பந்தானும் உயிர்க் கியல்பன்றிக் கணிகமாய் மனத்திடை நிகழ்வதொரு கோட்பாகலின், அதனை மாறுபடக் கொள்ளவே, அதற்கழிவின்றித் தனக்கின்பமாகக் கற்பித்துக் கொள்வனாயின் அதனால் தொடங்கியவினை முடித்தே விடு மாற்றலுடையனாய்த் தன் பகைவர் மதித்தற் கேதுவாய வுயர்ச்சியுண்டாகப் பெறுவன்.

> "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
> துன்ப முறுத லிலன்"

பொருளைப் பெற்றுழி யதன்மேல் பற்றுவைத்து இவறுதலைச் செய்யாதொழியின் அப் பழக்கத்தான் அப் பொருளற்ற வழியும் மனத்தால் துயருழத்தல் நிகழாதாம். இதனான் பொருளிலதாக அதனால் அடுத்த எற்றுழியும் அல்லற்பாடில்லையாகும்.

> "அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்(று)
> ஓம்புதல் தேற்றா தவர்"

(ஓ) தன்கீழ் வாழ்வார் குற்றஞ்செய்தால் அக் குற்றத்தை நாடி, யாவர் மாட்டுங் கண்ணோடாது, நடுவு நிலைமையைப் பொருந்தி, அக் குற்றத்திற்குச் சொல்லிய தண்டத்தை நூலோரோடுமாராய்ந்து செய்வஃதே முறையாகும். அம் முறையினை, முட்டாது செய்யின் அவன்றன்னை யவனது செங்கோலே காக்கும். தன் குடிகளை யின்சொற் சொல்லுதலும் தளர்ந்துழி வேண்டுவன கொடுத்தலும் செய்தணைத்துக் கொண்டு, நூல்கள் சொல்லியவியல்பாற் செங்கோலைச்செலுத்துவானாயின், அவனது நாட்டின்கண் பருவமழையும் குன்றாத விளைவு மொருங்குகூடும். முறையும் அறனும் நிலைபெறும். இவைபற்றி யுயிரெல்லா மேமமுறும். இவ்வாறு முறை செய்யுழித் தீக் கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவார் முதலாயினாரைக் கொலையால் ஒறுத்துத் தக்கோரைக் காத்தல் வேண்டும். இப் பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ்போன்று நலிவுபல வெய்தி யுலகிடர்ப்படும். அரசற்குத் தன் கீழ்வாரைக் குற்றத்தினீக்கித் தூயராக்குதற் பொருட்டுத் துன்பஞ் செய்தலும் பொருள் கோடலும், அவ்வாறாக்குதற் காகாத கொடியாரைக் கொலையால் ஒறுத்தலும் தன் பணிக்குரிய முறையாகலின் வடுவாகா.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்"

இவ்வாறன்றி, முறை வேண்டினார்க்கு எளிய செவ்வியை உடையனல்லனாய், அவர் சொல்லியவற்றை நூலோர் பலரோடு மாராய்ந்து நின்ற வுண்மைக்கொப்ப முறை செய்யானாய், அல்லவை செய்தொழுகுமாயின் அவற்கு அறங் கூற்றமாய் நிற்கும். அதனான், அவன் பகைவரின்றியுங் கெடுவன்.

"எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தால் தானே கெடும்"

(ஔ) உலகத்தார் பழிப்பன வொழிப்பதற்கும் புகழ்வன செய்தற்கு மேதுவாகிய உலக நடையியல்புளராய்த், தன் குடியோடு தொடர்ந்த மரபினராய், தன்னோடு அவரிடை நின்ற அன்புபற்றித் தமக்கறிய வேண்டுவன வறிதலைத் தப்பாராய், கற்றற்கரிய நூல்களைக் கற்று, மடி, மறப்பு, பிழைப்பு என்றிவை முதலாய குற்றங்களை யற்றவராய் அவரிடத்து நலம் நவைகளை யாராய்ந்து நலம் மிக்கதாயின் வினைக்குரியராக்குதல் வேண்டும். வினை வைத்தபின் ஒரு தவறு காணாது வைத்து ஐயுறுமாயின், அதனை யவரறிந்து இனியீது நில்லாதென்னுங் கருத்தான் அவ் வினையை நெகிழ்த்து விடுவர். அதுவேயுமன்றிப் பகைவரா லெளிதிற் பிரிக்கவும் படுவர். ஆகலான்,

"தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்"

என்றதனைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும்.

ஆகவே, அரசன் முதற்கண் ஒரு வினையைத் தன்பால் வைத்தால் அதன்கண் ஆவனவுமாகாதனவுமாய செயல்களை ஆராய்ந்தறிந்து அவற்றுள் ஆவனவற்றையே விரும்பும் இயல்பும், பொருள்வரு வாயில்களை விரியச்செய்து, அப் பொருளாற் செல்வங்களை வளர்த்து, அவ் வாயில்கட்கும் பொருட்குஞ் செல்வங்கட்குமுற்ற விடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்கவல்ல திறனும், அரசன்மாட்டன்பும், அவனுக்காவன அறியுமறிவும், அவை செய்தற்கவன் கலங்காமையும், அவற்றாற் பொருள் கைபற்றவழி அதன்மேலவாவின்மையுமாகிய தன்மையும் உடையாரை வினையின் வைத்துப் பின் அவருள் வினையினியல்பானே வேறுபடுவாரை இடையாயதொரு வினையை வைத்தறிந் தொழித்து, சிறந்தாரை இவ்வினையை இக் கருவியாலிவர் முடிக்க வல்லாரெனக் கூறுபடுத்தாராய்ந்து, அவரை வினைக்கு விடுத்தல் வேண்டும். அத்தன்மையோர் தாம் பிறராய் நில்லாது தம்மரசற்குக் கேளிர் செய்யுமுரிமை யெல்லாஞ் செய்தொழுகுதலைப் பொருதார் கூறும் சொற்கேட்டு அவரை இழிவு படுத்தாராகக் கொண்டு செறக் கருதுவானாயின், பின்னொரு வரும் உட்பட்டு முயல்வாரிலராவர். ஆகவே அரசனது செல்வங் கெடும்.

"வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு"

அரசன்தான் நெறிகெட வொழுகல், வெறுப்பன செய்தல் என்றிவை பற்றிப் பிரிந்துபோய சுற்றத்தாருள் தீமை செய்யப் போய் அதனை யொழிய வருவாரும், அது செய்யாமற்போய்ப் பின் நன்மை செய்ய வருவாருமாகியோரைத் தழீஇக் கோடல் வேண்டும்.

"உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்"

(ஃ) இனிப் பகை நொதுமல் நட்பென்னும் மூன்று திறத்தார் மாட்டும் நிகழ்ந்தன அறிந்தன்றி நாடு காவல் சிறக்காதன்றே! ஆதலின் அவற்றை யறிதற்கு ஒற்றரை யாளுதல் வேண்டும். ஒற்றுத் தன்கண் செல்லமாட்டாத பரப்பெல்லாஞ் சென்று கண்டு ஆண்டு நிகழ்ந்தன வெல்லாமுணர்த்தும். புகழ் அமைந்த நூல் அந்நிகழ்ந்தவற்றிற்குத் தன்னுணர்வு செல்லமாட்டாத வினைகளையெல்லாஞ் சொல்லியுணர்த்தும். ஆகவே, இவற்றைத் தன் புறக் கண்ணும் அகக் கண்ணுமாக அரசன் தெளிதல் வேண்டும். மேலும், தம் வினை செய்வார், சுற்றத்தார் பகைவரென்று சொல்லப்பட்ட அனைவரையும் சொற்செயல்

களால் ஆராயவல்லராய், ஒற்றப்பட்டார் கண்டால் ஐயுருத வடிவோடு பொருந்தி, அவர் ஐயுறின் செயிர்த்து நோக்கிய அவர் கண்ணிற்கஞ்சாது நின்று, நான்கு விரகும் செய்தாலும் மனத்துக் கொண்டவற்றை உமிழாமை காக்கவல்லராய், முற்றத் துறந்தாராயும் நோன்பொழுக்கினராயும் உள்புகுதற்கரிய இடங் களெல்லா முட்புக்கு ஆராய வேண்டுவன ஆராய்ந்தறிந்து, ஆண்டையார் ஐயுற்றுப் பிடித்து எல்லாத் துன்பமுஞ் செய்து கேட்டாலும் தன்னை வெளிப்படுத்தாத வுறுதியின் வல்லவராய் மாற்றப்பட்டார் மறையச் செய்த செயல்களைச் சொல்லுவாரை யறிந்து அவரயிராமற் சென்றொட்டித் தாமே சொல்லும் வகை அதற்கேற்ற சொல்லாகச் செயலாக முன்னே விளைத்து, அத் தொடர்பாற் கேட்குங்காலும் உருதார் போன்று நின்று, கேட்டறிந்தவற்றைத் தாமே ஐயுற்று வந்து சொல்லின் அரச னலவற்றிற்கேற்ற வினை செய்யலாகாமையின் ஐயப்பாடிலாது சொல்ல வல்ல தெளிவின் வல்லராயுள்ளாரை ஒற்றராய்க் கோடல் வேண்டும். அவருள் ஒரொற்றன் ஒற்றிவந் தறிவித்த செயலையும் பிறனோரொற்றனாலும் ஒற்றுவித்து ஒப்புமை கண்டு கொள்ள வேண்டும். ஒருவனை யொருவனறியின் தம்முள் இயைந்தொப்பக் கூறுவராதலின் ஒருவனையொருவன் அறியாம லாளல் வேண்டும். அங்ஙனம் ஆண்ட வொற்றர் மூவரை ஒரு பொருண்மேல் வேறு வேறு விட்டால் அம் மூவர் சொல்லும் பயனால் ஒத்தனவாயின், அது மெய்யென்று தெளியப் படும். மறைந்தவை யறிந்து கூறிய வொற்றின்கண் செய்யுஞ் சிறப்பினை அரசன் பிறரறியச் செய்யின் சிறப்புப் பெற்ற இவன் யாவனென்றும், இது பெறுதற்குக் காரணம் யாதென்றும் வினவு வாரும் இறுப்பாரும் உளராக்கி யதனைப் புறப்படுத்தானாகும். ஆகவே,

"சிறப்பறிய வொற்றின்கண் செய்யற்க"

என்றதனைக் கடைப்பிடித் தொழுகல் வேண்டும்.

மேலும், ஒற்றினானே எல்லார் கண்ணும் நிகழ்ந்தவற்றை ஒற்றுவித்து, அவற்றானெய்தும் பயனுமறியாதான் பகைக் கெளியனாவன். அவ்வாறாதல் பிறிதொன்றால் தீராமையின், தான்கொளக் கிடந்ததொரு வென்றியை ஒற்றாலேயே எய்த வல்லனாவன்.

"ஒற்றினா னொற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்"

இவ்வாறரசனொருவன் வினை செய்வார் செயலை நாடோறு மாராயவே, அதன் வழித்தாய உலகமெல்லா மாராய்ந்தானும். அதனால் அவனுரிமை யழியாமல் தன்னுள்ளே யாராய்ந்து போந்தானுமாம். இத்திறத்தின்

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கு முலகு"

(முற்றும்)

# என்னய்யா சொல்வேன்?

காரை. கோ. பாரதி.

[பாவேந்தர் பாரதிதாசன் இறந்து மேழம் (சித்திரைத்) திங்களோடு ஓராண்டு முடிவுறுகிறது. அன்னாரின் நினைவாக எழுதப்பட்ட இரங்கற்பா.]

**(மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா).**

தீச்சுடராய், திருவிளக்காய், தென்னவரின் குலவிளக்காய்
மீச்சுடராய் மிளிர்ந்திருந்த மீன்கொடியோன் வழிவிளக்கே!
பூமழையோ, புதுமழையோ, பொற்றமிழின் தேன்மழையோ
நாமழையோ, நன்மழையோ நலமிகுமுன் பாமழையே!

நெடுந்திவலைப் பனிவிசும்பில் நிறைந்துலவும் இனிமையிலே
கொடும்பலவின் சுளைபிழிந்த குளிரமிழ்தப் பைந்தமிழை
இடும்புளரும் இளையவரும் இணைந்திருந்து சுவைத்தருந்தக்
கடுந்தவந்தான் முயன்றதெனக் கருத்தமிழ்தம் படைத்தனையே!

வளர்ந்துவரும் தமிழகத்தை வல்லெழுத்தின் உயர்கோலால்
அளந்துவந்த கலையரசே, அடர்ந்தொலித்த புதுமுரசே,
கிளர்ந்துவந்த தமிழறிவில் கிடைத்தபெருங் கனல்மூட்டித்
தளர்ந்துவருந் தனிக்குலத்தைத் தலைதூக்க வைத்தனையே!

எழில்மிகு தமிழினம் இடரிய பொழுதினில்
பழிமிகு இழிமனம் பதறிடும் முறைதனில்
வழிமிகு படைத்தனை, வலிமிகு நிறுவினை
பொழில்மண நறுமலர்ப் புதுப்பொருள் அளித்தனை.

யாரெடுத்துச் சொல்லியும் அன்பரெலாம் மிகுத்துரைத்தும்
பாரெடுத்த தெய்வத்தைப் படிக்கல்லென் றுரைத்தாயே!

காலத்தைக் குறைசொல்வான் கடைமகனென் றுரைத்துயர்ந்த
ஞாலத்தை விளங்கவைக்கும் ஞாயிறென நின்றுயே!

பேர்சிறுத்த, பெருங்குலத்தின் புகழ்சிறுத்த, புதுத்தமிழின்
சீர்சிறுத்தச் சிறிதேனும் செயல்படுவீர் என்றுயே!

தேன்பாடத் தொடங்கிற்று நீ வளர்த்த தமிழ்நாடு
ஊன்வாட முடங்கிற்று நீவெறுத்த பகைவீடு!

தமிழச்சிக் கத்தியும் நீ
தளிரழகுச் சிரிப்பும் நீ
தமிழியக்கத் தலைவன் நீ
தனிக்குடும்ப விளக்கும் நீ
பாண்டியனின் பரிசு நீ
பனிமலர்த்தேன் பாக்கள் நீ
ஈண்டியவான் சிறப்பு நீ
எதிர் பாரா முத்தமும் நீ

# ஊரெல்லாம் தீ!

மு. மகிழரசன். சென்னை.

உயிரெல்லாம் தமிழாகி உணர்வெல்லாம் கொதிப்பேறித்
துயரெல்லாம் வெடிப்பாகி உடம்பெல்லாம் துடிப்புற்றார்
செயலெல்லாம் தீதாகிச் செந்தமிழ்க்குப் பகையாகிச்
செயிரெல்லாம் செய்தாரைச் செருக்களத்தில் விடுவாரோ?

பதவிக்கு இரையாகிப் பைந்தமிழ்க்குப் பகையானார்
கதவுக்கு உரம்போட்டுக் கண்மறைவாய் இருந்தொடுங்கி
உதவிக்குக் காவலரை உயிர்க்காப்பு வைத்தாலும்
கொதிப்புற்ற தமிழர்களின் குறி தவறிப் பிழைப்பாரோ?

கேடெல்லாம் தீவினையாய்க் கெட்டவர்க்குப் பகையாகி
வீடெல்லாம் தீயானால் விறுவிறுப்பாய் வந்தணைப்பார்
ஏடெல்லாம் பகையாகி எழுத்தெல்லாம் நெருப்பாகி
நாடெல்லாம் தீயானால் நாடாள்வார் அணைப்பாரா?

சீர்கெடுத்த தீயவர்மேல் சீற்றத்தின் விளைவாகி
ஓரிடத்தில் தீயானால் உடனடியாய்த் தடுத்தணைப்பார்
தீராத போராகித் திக்கெல்லாம் நெருப்பாகி
ஊரெல்லாம் தீயானால் உலகாள்வார் அணைப்பாரா? *

---

( முன்பக்கத்தொடர்ச்சி )

புரட்சி நீ; புதுமை நீ;
புகழும் நீ; பொருளும் நீ;
திரட்சி நீ; தெளிவும் நீ;
குயிலும் நீ; குழலும் நீ.

மறைந்தாயே!

மலரும் வண்டும் மரஞ்சார் கொடியும்
குலவும் யாழும் கூவிடும் குயிலும்
நிலவும் வானும் நெடுமலை அடுக்கும்
நிலஞ்சேர் பனியும், நிழல்சேர் தணிவும்
வடிக்குது கண்ணீர்; வெடிக்குது நெஞ்சம்
நொடிக்குளே பிரிந்த மணிக்குலத் தலைவா!
உன்றன் பிரிவால் உருக்குலைந் தலையும்
தென்றல் நின்னைத் தேடிய பின்னால்
என்றன் இடத்தில் எங்கே தமிழ்மகன்
என்று கேட்டால் அய்யோ
என்னய்யா சொல்வேன் இயம்புவீர் எனக்கே. ○

தமிழில்: ஆங்கிலத்தில்:

கழராம்பன். W. L. WHITELEY.

**காந்தவயல்:-** ஒரு காந்தத்திற்கு அணுக்கமாக மற்ற காந்தங்களின் முனைகளைக் கொண்டு வரும்பொழுது, இயக்க விசை தோன்றுகிறது. காந்தத்தைச் சுற்றி இவ்வியக்கவிசை நிலவும் பரப்பைக் காந்தவயல் என்று குறிப்பர். காந்த வயலில், ஒரு காந்த முனையைச் சிறிது சிறிதாக நகர்த்திக்கொண்டே சென்றால் அதனால் தோன்றும் காந்தவிசை, அம்முனை செல்லும் திசையிலேயே எல்லாப் புள்ளிகளிலும் சீராகப் ( Uniformly ) பரவுகின்றது. இயற்கைக் காந்த வயல்கள் சீராக இரா. ஒரு காந்தத்தினின்றும் தோன்றும் விசை, அளவாலும் திசையாலும் வேறுபட்டு, ஏனைப் பேராற்றலுடைய காந்தவயல்களிலுங் கலப்பதால், ஒழுங்குநிலை செப்பமாக வாயாது.

**விசைக்கோடுகள்:-** காந்தவிசை ஒருவயலில் குறிப்பிட்ட கோடுகள் வழியாகவே இயங்குகின்றன. இதைப் படம் 1-இல் காட்டியபடி விளக்கலாம் ஒரு கலத்தில் நீரை நிரப்பி, அதன் மேற்பரப்பில் காந்தத்தடியைக் கிடைமட்டமாக மிதக்கவிடு. காந்தவியல்புள்ள ஊசி ஒன்றைத் தக்கையிற் ( Cork ) செருகித் தண்ணீரில் செங்குத்தாக மிதக்கவிடு. அதனால் அவ்வூசியின் வடமுனை நீரின் மேல் செங்குத்தாக நிற்கும் இவ்வடமுனை ஊசியைக் காந்த வடமுனையின்பால் சேர்த்தால், அவ்வூசி உடனே வீசியெறியப்



படம். 1.

படும் இவ்வாறு வீசப்படும் அவ்வூசி வளைவான பாதையை மேற்கொண்டு, அக் காந்தத் தென்முனையை அடைகிறது. இவ் வினையை எத்தனை முறைகள் செய்தாலும் அவ்வினைவுதான் கிடைக்கும் வேறொரு புள்ளியில் ஊசியை வைத்தால், அது வேறொரு வளைவான பாதையில் செல்லும். படத்தில், சிறு சிறு புள்ளிகளால் வளைவான பாதை குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் வூசியின் தென் முனையை மேலே மிதக்குமாறு செய்தால். அது வடமுனையை நாடி அதே வளைபாதையில் செல்கிறது. இக் கோடுகளே காந்த விசைக் கோடுகளாகும். காந்த வயலில், காந்த முனைகள் இயங்கும் கோடுகளே காந்த விசைக் கோடுகளாகும் வட, தென்முனைகள் ஒன்றினுக்கொன்று எதிர்த்திசை

யில் இயங்குவதைக் காந்தவிசைக் கோடுகளால் அறியலாம். காந்த வட முனை இயங்கும் திசையே, ஒரு காந்த விசைக்கோடு செல்லும் திசையாகும். ஆதலால் படம் வரையுங்கால், வட முனை இயங்கும் இத்திசையையே அம்புக்கோட்டாற் குறிப்பர். ஒரு நீள் காந்தத் துண்டைக் கட்டித் தொங்கவிட்டால், அது வட, தென்திசையாய் இருப்பதன் காரணம் என்னவென்றால், அதன் காந்தவயல், உலகத்தின் காந்தத்தோடு தொடர்புடையதாய் இருப்பதேயாகும்.

காந்தவயலின் வகைகள்:- செய்ம்முறை: (Experiment) காந்தவயலில், காந்த விசைக்கோட்டை வரைதல்:- ஒரு நீண்ட காந்தத் துண்டின் ஒரு முனையில் திசையறி கருவியை (Compass) வை. தோன்றும் விசையைக் குறிக்க, அக்கருவியினுள் காட்டும் அம்புக் குறிக்கு நேரே ஒரு புள்ளியைப் படம் 2-இல் காட்டியபடி வை. திசையறி கருவியைப் பின்னும் நகர்த்தி, முன் குறித்த புள்ளியோடு பொருத்தி முன்போல் அம்புக்குறியை அடுத்து அடுத்து புள்ளிகளை வை. இவ்வாறு தொடர்ந்து செய்து கொண்டே வந்தால், காந்தத்துண்டின் மறுமுனையிற் சென்று அப்புள்ளி சேர்கிறது. புள்ளிகளைக் கோடாக இணைத்தால், காந்த விசைக் கோட்டை நாம் அறியலாம். வேறு புள்ளியிலிருந்து வேறு விசைக் கோடுகளை இங்ஙனம் செய்ம்முறையால் பெறலாம்.



படம். 2.

இவ்விசைக் கோடுகளின் பொது அமைப்பை விரைந்து அறிய, நாம் வேறுமுறைகளையுங் கையாளலாம். ஒரு தடித்த தாளில் காந்தத்துண்டை வைத்துக், கொஞ்சம் இரும்புத்தூளை அதைச்சுற்றிலும் தெளி. தனித்து நிற்கும் தூள்களைத் தட்டி உதிர்த்துவிடு. இரும்புத்தூள்கள், விசைக்கோடுகள் இயங்குகின்றவழி அமைந்து காணப்படும். இதன் காரணம் என்னவென்றால் ஒவ்வொருதூளும் தூண்டுதல் (Induction) முறையில் காந்தமாக மாறி, மற்றத் தூள்களோடு இணைந்து! விசைக் கோட்டின்வழி நிற்கிறது. திசையறி கருவியின் அம்புக்குறி போலவே இத்தூள்களும் இயங்குகின்றன. கீழேயுள்ள படங்கள், எத்தனை வகைகளில் விசைக்கோடுகள் அமையும் என்பதை விளக்கும். அணுக்க ஆய்வாலும், செய்யும் முறையாலும் இப்படங்கள் வரையப்பட்டன. ஒவ்வொரு கோடும் வட முனையில் தொடங்கித் தென்முனையில் முடியும். காந்த முனைகளில் கோடுகள் நெருங்கி யிருப்பதன் காரணம் என்ன? விசையாற்றல் முனைகளில் மிக்கிருப்பதால் அங்கே கோடுகள்

நெருக்கமாக இருக்கின்றன. கோடுகள் பரவலாக விலகி நிற்கும் இடங்களில் ஆற்றல் குறைவாக இருக்கும். ஒரு முனையிலிருந்து புறப்படும் கோடுகள் அவற்றுள்ளே குறுக்கும் மறுக்குஞ் செல்லாது ஒன்றிலிருந்து ஒன்று விலகிச் செல்லும்.




படம். 3.




படம். 4.




படம். 5.




படம். 6.




படம். 7.




படம். 8.

3-ஆம் படம் ஒரு காந்த முனையில் விசைக்கோடுகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை விளக்குகிறது. கதிரிய

( Radiation ) அமைப்பில் கோடுகள் அமைந்துள்ளன. எதிர்வகை முனைகள் ( Unlike poles ) ஈர்க்கும் தன்மையன. 5-ஆம் படத்திலும், 7-ஆம் படத்திலும், எதிர்வகை முனைகளில் அமைந்துள்ள கோடுகள் ஒரு முனையிலிருந்து மறு முனைக்குச் செல்வதைக் காணலாம். 4-ஆம் படத்திலும், 9-ஆம் படத்திலும் ஒரேவகை முனைகள் எதிர்ப்படுவதால் தோன்றும் கோட்டின் அமைப்பைக் காணலாம். ஒரே வகை முனைகள் ( Like poles ) தம்முடைய ஒரே தன்மையால் ஒன்றையொன்று விலக்கும் தன்மையைப் பெற்று விளங்குகின்றன. இவை யிரண்டு முனைகளும் எதிர்ப்படும்பொழுது, அம்முனைகளிலிருந்து விரியுங் கோடுகள் அண்டைக் கோடுகளை விலக்கிக்கொண்டு செல்கின்றன. மேலேயுள்ள படங்களெல்லாம் விசைக் கோடுகளின் வகைகளை நன்கு விளக்குவனவாகும்.



படம். 9.

தூண்டல் முறை ( INDUCTION ) :- ஒரு காந்தத் துண்டிற்கு அண்டையில் ஓரிரும்புத் துண்டை வைத்தால், தோன்றும் விசைக்கோடுகளின் அமைப்பைப் படம் 10-இல் காணலாம். இதை 6 – ஆம் படத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். பல விசைக்கோடுகள் கும்பலாக இரும்புத் துண்டை நெருங்குகின்றன. 7 – ஆம் படத்தோடும் ஓரளவு ஒப்புமை பெற்றுளது. 10-ஆம் படத்தில் காட்டியபடி, அவ்விரும்புத் துண்டு காந்தத் தன்மையையும், வட, தென் முனை யாற்றலையும் பெற்று முழுக்காந்தமாக விளங்குகிறது.



படம். 10.

செய்ம்முறை:- இரும்பு காந்தமாதலை யறிதல்: செங்குத்தாக நிறுத்தப்பட்ட ஒரு காந்தத்தின் வடமுனையிலிருந்து ஓராணியை ( Nail ) த் தொங்கவிடு. தொங்குகின்ற முதல் ஆணியோடு இரண்டாம் ஆணியையும் தொங்கவிடு.

படம் 11(அ)-இல் காட்டியபடி இன்னுஞ்சில ஆணிகளையுந் தொங்கவிடலாம். முதன் முதலாக இணைக்கப்பட்ட ஆணியைக் காந்தத்திலிருந்து பிரித்துவிட்டால், சில நொடிகள் வரையிலும் அவை தொடர்ந்து தொங்கும். இதனால் அவ்வாணிகளும் காந்தத் தன்மை பெற்றுள்ளதை அறியலாம். முதல் ஆணியைத் தொங்கவிட்டபின், ஒரு காந்த வடமுனையை அதனருகில் கொண்டு சென்றால், அவ்வாணி எதிர்ப்பாற்றலால் ( Repulsive force ) விலகும். இதனால் நாம் அறிவது என்ன? அந்த ஆணியின் கூரும் வடமுனையியல்பிற்று; ஆதலால் அதன் தலைப்பாகம் தென்முனையியல்பிற்று என்பதுமேயன்றோ? இதைப் படம் 11 (ஆ)-இல் காணலாம். ஒரு காந்தம் அதனோடு ஒட்டிய இரும்புகளுக்கு முனைத்தன்மையை அளிக்கின்றது என்ற உண்மையைப் படம் 11-(அ)-இல் காணலாம். ஒரு காந்தத்திற்கு அடுத்தாற்போல இரும்புத்துண்டுகளை வைத்தால், அவையும் காந்தமாகி எதிர்வகை முனைகள் ( Unlike poles ) சேர்வதுபோல் அமைகின்றன. இவ்வாறு இரும்புத் துண்டுகள் காந்தமாகும் முறையைத் தூண்டல் ( Induction ) முறை என்று குறிப்பர். காந்தம் தூண்டுவதால் இரும்பு காந்தத் தன்மையைப் பெறுகிறது. ஆதலால் இரும்பு, தூண்டுதலாற்றலால் ( Inductive Influence ), காந்தமாக்கப்பட்டது என்றுங் கூறலாம்.



படம். 11.


படம். 12.

**தூண்டலும், ஈர்த்தலும்:-** (INDUCTION and ATTRACTION) மேற்கண்ட விளக்கங்களால், காந்தம் இரும்பை ஈர்க்கிறது என்று கூறுவது முற்றும் சரியன்று. 'தூண்டுதல் காரணமாக ஈர்ப்பாற்றல் தோன்றுகிறது' என்பதே சரியான விளக்கம். எதிர்வகை முனைகள் ( Unlike poles ) எதிர்ப்படுவதாலே ஈர்ப்பாற்றல் தோன்றுகிறது. இவ்வடிப்படை உண்மையால்தான், ஓரிரும்புத்துண்டில் காந்தம் இருக்கிறதாவென அறிய, அவ்விரும்புத்துண்டின் முனையை மெல்லத் திசையறி கருவியிடம் நெருக்கி, அக் கருவியின் அம்புக்குறியியக்கத்தை ஆராய்கின்றனர். வடமுனையும் வடமுனையும் நெருங்கும் போது, விலக்காற்றல் ஏற்படுகிறது. ஆதலால் ஒருதிறன் மிகுந்த காந்தத்தின் வடமுனையைச் சடுதியில் திசையறி கருவியிடம் எடுத்துச்

சென்றால், தூண்டலாற்றலால் கருவிமுள் தென்முனையாகத் தூண்டப் பட்டு ஈர்க்கும் ஆற்றல் நிலவினாலும் நிலவும். எனவே அத்தகைய ஆய்வில் விரைவு பயன் தராது.

**அணுத்திரளைக் காந்தக் கொள்கை:-**

( Moleculer theory of Magnetism )




படம். 13.
சிறு காந்தங்களின் அமைப்பு.

'எல்லா இரும்புத் துண்டுகளிலும் முழுமையான சிறு காந்தத்தூள்கள் நிறைந்துள்ளன' என்ற இக்கொள்கையால், பல காந்தவினைச் செயல்களை மெய்ப்பித்து விளக்கலாம். அவ்வகைத் தூள்களை காந்தத் தூள் திரளை என்பர். இயல்பாயுள்ள ஓரிரும்புத்துண்டில் இச் சிறு காந்தங்கள் சிதறித் தாறுமாறாய்க் கிடக்கின்றன. படம் 13-இல் மேலுள்ள படத்தை நோக்குக. அம்புக்குறிகள் காந்தத்தூள்களின் வடமுனைகளைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒழுங்கற்று இருப்பதால் காந்த முனையாற்றல் சமன் செய்யப் பட்டுள்ளன. காந்தமாக ஓரிரும்புத் துண்டை ஆக்கவேண்டுமானால், அச்சிறுதூள்களின் வட முனைகள் ஒரே திசையில் அமையுமாறு செய்தல்வேண்டும். படம் 13-இல் கீழ்ப் படத்தைக் காண்க.

இக்கொள்கை தூண்டல் முறையொடு முழுதும் பொருந்துகிறது. ஓரிரும்புத் துண்டு காந்த வயலில் வைக்கப் படின், இச் சிறு காந்தங்கள் விசைக்கோடு இயங்கும் வழித் தங்கள் வட முனைகளைத் திருப்பி வைக்கின்றன. இக்காரணத்தினாலே நாம் முன்கண்டபடி இரும்புத்தூள்கள் விசைக்கோடுகளை அமைக்கின்றன. இக்கொள்கையின் மூலம், காந்த முனைகளில் ஆற்றல் மிக்கிருப்பதின் காரணமும் புலப்படுகின்றது. ஆறும் படத்தொடு ஒப்பிடும்பொழுது, விசைக்கோடுகளில் ஒவ்வொரு சிறு காந்தத்தின் இருமுனைகளும் இணைக்கப்பட்டுள்ளன என்ற உண்மை விளங்குகிறது. ஆதலால் விசைக்கோடும் சிறு காந்தங்களின் முனைகளுஞ் சேர்ந்து ஒரு சிறு வளைவைத் தோற்றுகின்றன. எனவே, ஓரிரும்புத்துண்டு காந்தவயலில் வைக்கப்படும்பொழுது, விசைக்கோடுகள் திருப்பப்படுவதின் காரணமும் புரிகிறது. 13-ஆம் படம் இருமுனைகளின் சம ஆற்றலைக் குறிக்கிறது. ஒருமுனையிலுள்ள சிறு தென்முனைகளின் எண்ணிக்கை, மறுமுனையிலுள்ள சிறு வடமுனைகளின் எண்ணிக்கைக்குச் சமம். காந்தத்தைப் பற்றிய மற்ற உண்மைகளைக் கீழே காண்போம்:

1. **காந்தத்தை முறித்தல்:-** ஒரு தையல் ஊசியைக் காந்தத்தன்மை யுடையதாகச் செய்த பின்னர், இரண்டாக முறித்துப் பார்த்தாலும், ஒவ்வொரு துண்டும் ஒரு தனிக் காந்தமாகவே தோன்றும். இன்னுஞ் சிறுசிறு துண்டுகளாகவே வெட்டிப் பார்த்தாலும் மேற்சொன்ன நிலையே புலப்படும். ஒவ்வோர் ஊசித் துண்டும் ஒரு முழுக்காந்தமாகவே விளங்கும். இப்படம் எவ்வாறு முனைகள் ( Poles ) தோன்றுகின்றன என்பதை விளக்குகிறது.



படம். 14.
முறிக்கப்பட்ட காந்த ஊசி.

2. **காந்த நீக்கம்.** ( Removing Magnetism )

ஓரிரும்புத் துண்டைக் காந்தமாக்கு. சில நிமையங்கள் கழிந்தபின்றைக் காந்தமுளதா வென்று ஆய்ந்து பார்த்தால் இல்லாமை தெரியும். காந்தமாக்கிய ஓரிரும்புத் துண்டை நெருப்பில் பழுக்கக் காய்ச்சினாலும் அதே விளைவுதான் ( காந்தமின்மை ) கிடைக்கும். தீயில் பழுக்கக் காய்ந்த ஓர் ஆணியைக் காந்தவயலில் வைத்தால், தூண்டுதலினால் ஏற்படும் ஈர்ப்பாற்றல் அங்கு நிகழாது. அவ்வாணி குளிர்ந்த பின்றைதான், அவ்வாற்றலால் ஈர்க்கப்படும். காந்தத் தன்மையை நீக்க வேண்டுமென்றால், ஒழுங்கு நிலையிலமைந்த அக் காந்தச் சிறுதாள்கள் சிதைக்கப்பட்டுச் சிதறிச் சீர்கெட்டு அமையவேண்டும். உயர்ந்த வெப்ப நிலையில், அச் சிறு காந்தங்கள் சீர்நிலையினின்றும் பிறழ்ந்து மாறிமாறி அமைகின்றன. எனவே, அவ்வுயர் வெப்ப நிலையில், அவை காந்த ஆற்றலுக்குட்பட்டு இயங்குவதில்லை.

3. **காந்தத் தேக்கம்:-** ( Storing Magnets )

இரும்புக்காந்தங்கள் எப்போதும் கீழுள்ள 15-ம் படத்தில் காட்டியபடி இணை, இணையாகவே அடுக்கப்படும். இரு மெல்லிய இரும்புத்துண்டுகள் ஓரிணையை இரண்டு முனைகளிலும் இணைத்திருக்கும். தனித் தனியாக வைத்திருப்பதினும் இவ்வாறு வைத்திருப்பதில் மிகுபயனுண்டு. இம்முறையில் காந்தத்தைத் தேக்குவதால் காந்த ஆற்றல் வீணாகாமல் சரியான முறையில் தேக்கப்படுகிறது.


படம். 15. காந்தத் தேக்கம்

4. எஃகிற்கும் இரும்பிற்குமுள்ள வேறுபாடுகள்:

எஃகில் செய்த ஒலியெழுப்பி முட்களை ( Gramophone needles ) எடுத்துவந்து 11-ஆம் படத்தில் காட்டியபடி காந்தத்தில் தொங்கவிடு. அவ்வாறே இருப்பாணிகளை வேறொரு காந்தத்தில் தொங்கவிடு. காந்தத்தை நீக்கியவுடன் இருப்பாணிகள் கீழே விழுந்து பிரிந்துபோம். எஃகினால் செய்த முட்கள் சில தொங்கினாலும், சாந்தம் நீக்கப்பட்ட பின்பும், அவை அவ்வாறே தொங்கிக் கொண்டு நெடுநேரம் இருக்கும். இச் செய்ம்முறையிலிருந்து நாம் பெறும் முடிவு பின்வருமாறு:-

இரும்பு எளிதாகக் காந்தமாக்கப்பட்டாலும், எஃகினும் விரைவாக அதன் காந்த ஆற்றலை யிழந்துவிடுகிறது எஃகினுள் அமைந்து கிடக்கும் சிறு காந்தங்களை ஒழுங்கு நிலைக்குக் கொண்டுவருதலும், அவ்வாறு ஒழுங்குநிலைக்கு வந்தவற்றை மீட்டுஞ் சிதறச் செய்தலும் அரிது. இவ்வேறுபாடுகளால், நிலைத்த காந்தங்கள் வேண்டுமென்றால் எஃகிலும், குறைந்த காலத்தில் மிகுந்த ஆற்றலுடைய காந்தம் வேண்டுமென்றால் இரும்பிலும் செய்யப்படும்.

5. காந்தப் பொந்திகை:- ( Magnetic Saturation )

மின்சார முறையில் ஒரெஃகுத் துண்டைக் காந்தமாக்குங்கால், மின்னோட்டம் படிப்படியாக மிக மிக. காந்த ஆக்கமும் படிப்படியாக மிகுகின்றது. ஒரு குறிப்பிட்ட புள்ளிக்கு மேல், எவ்வளவுதான் மின்னோட்டத்தைச் செலுத்தினாலும், காந்த ஆக்கமானது குறைந்த அளவிற்கே கூடுகின்றது. இறுதியில் இக் குறைந்த காந்த ஆக்கமும் நின்றுவிடுகின்றது அஃதாவது, ஓரிரும்புத்துண்டை அல்லது எஃகுத் துண்டைத் தொடர்ந்து காந்தமாக்கிக்கொண்டே யிருந்தால், ஒரு நிலையில் அக் காந்தத் தன்மை நின்றுவிடும்; அந்நிலைக்குக் காந்தப் பொந்திகை நிலை என்று பெயர். இவ்வுண்மையையும் அணுத்திரளைக் காந்தக்கொள்கை விளக்குகிறது அச்சிறு காந்தங்கள் சீர்நிலையடைந்து முழுயாற்றலைப் பெற்றபின், வேறெந்த நிலையையும் அவை அடைய வேண்டுவதில்லை. ஆதலால், காந்தம் பொந்திகை யடைந்தபின் ( Saturated ) இன்னும் காந்தமாக்குதல் முடியாததாயிற்று.

காந்தப் பொருள்களும், காந்தம் இல்பொருள்களும்:-

மின்னோட்டம் நிகழுங்கால், காந்த விளைவுகளுந் தோன்றுகின்றன. அணுக்களில் எதிர் மின்னிகள் உள்ளன. அவ்வெதிர் மின்னிகள் ( Electrons ) மின்னேற்ற முடையன; வளைந்த பாதைகளில் சுழல்கின்றன. அவை அவ்வாறு

சுழலுங்காலத் தற்சுழற்சியும் ( Self Rotation ) நிகழ்கிறது. அத் தற்சுழற்சியால் அங்கும் காந்தவிளைவுகள் ஏற்படுகின்றன. இவ்வடிப்படை உண்மையால் எல்லாப் பொருள்களும் காந்தத் தன்மையுடையன என்று அறியலாம். திறன்மிகுந்த மின் காந்தக் கருவிகளைக்கொண்டு ஆயும்பொழுதும் இவ் வுண்மையே புலப்படுகிறது. காந்த விசையை இரும்பிலும் எஃகிலும் நாம் எளிதில் அறியலாம். ஏனைய பொருள்கள் இத்தன்மையைக் குறைந்த அளவில் பெற்றுள்ளன. இவ்வாறு மிகக் குறைந்த காந்த ஆற்றலுடைய பொருளைக் காந்தம் இல் பொருள் என்று குறிப்பதே வழக்கம்.

இரும்புக் காந்தங்கள் ஏனைய பொருள்களினும் மிகுதியான காந்த ஆற்றலைப் பெற்றிருப்பதின் காரணத்தை ஆயுங்கால், அவற்றில் திட்டுத் திட்டாக அணுத்திரளைக் காந்தங்கள் செறிந் திருப்பன புலப்பட்டன. ஒரு திட்டில் உள்ள காந்தத்தூள்கள் எல்லாம் தங்கள் வடமுனைகளை ஒரே போக்கில் கொண்டனவாக இருந்தன. 16-ஆம் படத்தில் இவற்றினமைப்பை அறியலாம். அண்மைக் கால ஆராய்ச்சி யின் விளைவாக, இரும்பைக் காட்டிலும் ஆற்றல் வாய்ந்த மாழைக் கலவைகளைக் கண்டுள்ளனர். இவை வெப்பம், தக்க வேலையில் ஈடுபடுத்தாமை, காந்தவயல் ஆகியவற்றால் ஓரளவு காந்த ஆற்றலை யிழக்கின்றன. *


படம். 16.


## தென்மொழி, கடலூர் - 1.

தனித்தமிழில் வெளி வரும் உயர்ந்த இலக்கிய விதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7-25 உருபா | 9 உருபா |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்

| | | |
|---|---|---|
| அட்டை நான்காம் பக்கம் | ( இரு வண்ணம் ) | 100 உருபா |
| ,, ,, ,, | ( ஒரு வண்ணம் ) | 75 உருபா |
| உள்ளே முழுப் பக்கம் | | 50 உருபா |
| ,, அரைப் பக்கம் | | 25 உருபா |

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க.

# பெண்ணே! வழிவிடு!

இரா. இளவரசு. எம். ஏ.

கருங்குழலைக் கரும்பாம்புப் பிணையல் என்ன
காற்குதியைத் தொடுமளவுப் பின்னல் போட்டு,
மருப்புநுதல் கவின்பொலிய மாலை நேரம்
மறிகடலில் விழுங்கதிர்போல் பொட்டு வைத்துப்
புருவவில்லில் மைதீட்டி இந்திப் போர்க்குப்
போகின்ற எனைத்தடுக்கப் பார்க்கின் றாயா?
செருப்பின்கீழ் பகைபொடியாய்ப் போன பின்தான்
திரும்பியுனைப் பார்ப்பேன்யான் போடி பெண்ணே!

வடுவிழியால் விடுகின்றாய் கணைகள்; என்னை
வாவாவென் றழைக்கின்றாய் இமையால்; நாணம்
படர்கின்ற தக்காளிப் பழக்கன் னத்தைப்
பார்த்தபின்னே உனைப்பிரியேன் எனும்நி னைப்போ?
அடிபோடி! தொன்றுமுதிர் தமிழர் நாட்டில்
அடிபோட வருமிந்தி தொலைத்தால் தான்உன்
மடிபோட்டுத் தலைபடுப்பேன், மறந்தி டாதே!
மயக்கிட நீ முயன்றாயோ முடியா திங்கே!

எள்ளுப்பூச் சிறுமூக்கில் ஆவல் மேவ
ஏக்கமொடு மூச்சுவிடு கின்றாய்; தேனை
அள்ளும்பூ இதழ்களிலே மொட்டு முல்லை
அழகுப்பல் வரிசையுற அழகு காட்டிக்
கொள்ளையிட்ட நெஞ்சத்தை வீட்டுக் குள்ளே
குந்திவிடச் செயும் நினைப்போ? இந்தி என்னும்
வெள்ளமடி வருகிறது; துயின்றால் செத்தோம்!
விரைவிலணை போடுதற்கே போக வேண்டும்!

வெட்டுகின்றாய் கழுத்தை உன் பெற்றோர் போட்ட
விலையுயர்ந்த முத்துவடம் ஐயோ என்னும்!
'கட்டுகின்றாய் இலையே நீ தாலி' என்றே
கழுத்தழகைக் காட்டுகின்றாய்! விரல்க ளாலே
சுட்டுகின்றாய், அகப்பொருளை அறியேனா நான்?
சுடர்தமிழாம் செங்கரும்பை ஆள்வோன் அந்தோ,
வெட்டுகின்றான், உணராயோ? மணம்முடித்து
விளையாட நேரமிதா? விலகு வாயே!

மான்போலப் பார்க்கின்றாய் மயங்கு வேனோ?
மயில்போல அசைகின்றாய், மாறு வேனோ?
கான்குயில்போல் பேசுகிறாய் நானா வீழ்வேன்?
கட்டுமலர்ச் சிரிப்பென்னை என்ன செய்யும்?
தேன்தமிழைத் தென்னாட்டைக் காக்க இந்தித்
திணிப்பெதிர்த்துக் களம்காணும் நோக்கம் ஒன்றே
தான்மனதில் கொண்டுள்ளேன், அறிவாயா? நான்
தயங்காமல் போகவிடை கொடுப்பாய் பெண்ணே!

# மறைந்து வரும் தமிழ்ச் சொற்கள்.

(உயர்தனிச் செம்மொழியான நம் தமிழில் நுண்ணிய பொருள் உணர்த்தும் உலகவழக்குச் சொற்கள் இன்று புதுமை நாகரிகத்தின் பரபரப்பும் ஆழமின்மையும் மிகுதியும் பரவாத நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கையிற் பயிலப் பெறுவனவேயல்லாமல், பிற விடங்களில் மறைந்து விட்டன என்றே கூறலாம் அச்சொற்களை மக்கள் மறந்து போகாமல் செய்தலும், அவற்றின் நுணுக்கமும் சிறப்புமறிந்து அவற்றை இலக்கிய நடைமுறை வழக்கில் பயன்படுத்தலும் நம் கடனாகும். எனவே தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களினும் உள்ள மாணவரும், ஆசிரியரும், தமிழன்பரும் தங்கள் தங்கள் வட்டாரங்களிலும் அண்டை அயற் சிற்றூர்ப் பகுதிகளிலும் வழங்கி வரும் அவ்வரிய, அருகிய சொற்களைத் தொகுத்துத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றேம்.)

**கீழுள்ள சொற்களைத் தொகுத்தனுப்பியவர் )**

**திரு. சே. கோச்சடை, 45. பாரதிதெரு, கல்லல்.**

நவியாமல் - பிறர் அறியாமல் - அமைதியாக. (in a silent way)

ஒச்சம் – குறைபாடு, கோளாறு.

கொளுகுதல் – திரட்டுதல், ஆயத்த மாக்குதல்.

தளுக்கு – நெல் மணிகளைப் பிரித்தபின் பிணையல் (கடா) விடாமல் உள்ள தாள்.

செண்டு - தூள்; குப்பை (நெற்றாள்களின் கழிவு)

ஆலாட்டுப்பதம் - அவித்த நெல்லைக் காய வைக்க வேண்டிய பதம்.

நோண்டுதல் - சீண்டுதல்.

ஏத்தனம் - ஏனம், பண்டம்.

ஏலுதல் - இயலுதல் (ஈழ வழக்கு)

முண்டை – தாலியறுத்தவள்; போக்கிலி; அறிவிலி.

பேமாளம் - கிறுக்கு.

மினுங்குதல் - வளர்ச்சியுறல்; தெளிவுறல்; மிளிர்தல்.

பல்லயம் – தெய்வத்திற்குப் படைக்கப்படும் உணவு; தேவுணு படையல்.

கட்டாயம் – சுவர் கட்டும் பொழுது இடையிடையே தடுப்பாகச் சிறு தூண் போல், சுவரளவை விடக் கனமாகக் கட்டுதல்

கொன்றை - சுவரெழுப்பும் பொழுது முன் கூட்டியே கட்டி வைக்கப்படும் சுவரின் மூலைக்கட்டு.

தொளி உழவு – நீர் பாய்ச்சி நீருடன் உழுதல்.

புழுதி ( உழவு ) - காய்ந்த மண்ணை உழுதல்.

பார் - பெரிய பாத்தி

மிதியடி - செருப்பு; காலணி.

இம்மி - மிகச்சிறிய.

வெள்ளென - விரைவாக; அதிகாலையில்.

நிமிண்டுதல் - தூண்டிவிடுதல்; சீண்டுதல்.

நீரக்க - நீர்நிறையுமாறு; ( Liqufying )

எலியோடி - ( கூரை ) வீடுகளில் தூண்களின் மேல் கை மரங்களைத் தாங்கிக் கொண்டு நிற்கும் மரம்

இலிங்காவிட்டம் - கைமரங்கள் இணைக்கப்பெற்ற முகட்டுவளை

மக்கிட்டுக்கட்டாக - இறுக, பறித்துக் கொள்ள இயலாதவாறு மார்புறக் கைகளால் கட்டிக்கொள்ளுதல்.

சொச்சம் - மிச்சம்; மீதி:

வாணம் - வீட்டின் அடித்தளத்திற்காக வெட்டப்படும் பள்ளம் - கடைக்கால்.

ஊமச்சி - நத்தை இனத்தைச் சார்ந்த சிறிய நீர்வாழ் உயிரி.

தூரி : மீன்பிடிக்கும் வலை. வாய் அகன்று அடி சிறுத்தும் அடிப்பாகம் திறக்க இயல்வதாகவும் உள்ளது. நீரோடும் பொழுது மீன்பிடிக்க உதவும்.

மூட்டுதல் - பொறுத்துதல் - தைத்தல்.

பரி - மீன்பிடிக்கும் கருவி. ஈர்க்குகளால் கட்டப்பெறுவது; வாய் அகன்றும் அடிமூட்டப்பெற்றும் உள்ளது தூரி போன்று மீன்பிடிப்பது.

ஊந்தா : தூரிபோன்ற அமைப்புடையது. பின்புறம் திறவையா யுள்ளது.

பாச்ச வலை - மீன் பாய்ந்து சென்று வலையில் மாட்டிக் கொள்வதால் பாய்ச்சல் வலை என்று பெயர்பெற்றுப் பின் பாச்ச வலை என மருவி யிருக்கிறது.

சன்னக் கெண்டைவலை - சன்னமான சிறு மீன்கள் பிடிக்கும் வலை; இரண்டும் ஒரே அமைப்பின.

பிசினாறி - கஞ்சன்; விடாக் கண்டன்.

சின்னாங்கு, சல்லிசு - சவுகரியம்.

மணிக்கூடு - நாழிகை வட்டில் (ஈழ வழக்கு).

மணிக்கட்டை - வலை மிதப்பதற்காக மேலே கட்டப்படும் மரக் கட்டைத் துண்டுகள்; பெரும்பாலும் எருக்கிலைத் தண்டு கோக்கப்படும்.

மணிக்கால் - வலையின் அடிப்பகுதி நீரில் அமுங்குவதற்காகக் கோக்கப்படும் சுடப்பட்ட மண் உருண்டைகள்.

சரடு – கொடி, நூல் (தாலிச்சரடு)

கருகமணி – கரிசமணி – மணமாகாப் பெண்டிர் கழுத்தில் அணியும் மணிக் கோவை.

ஒண்ணைப்பூ – காதின் மேற்பகுதியில் (S வடிவத்தில்) அணியப் பெறும் அணி. ( ஒள் நற்பூ )

பூடி – காதின் மேற்புறத்தில் (குச்சிபோன்ற வடிவம்) அணியப் பெறும் அணி.

தோடு, தருப்பு – காதின் அடிப்புறம் அணியப்பெறும் வட்டமான அணி. கடுக்கன் – ஆண்களது காதணி.

மாராயம் – பெண் பூப்பெய்தியதை அறிவிக்கும் மங்கலச்செய்தி.

பாக்கு மாற்றுதல் – பெண்வீட்டாரும் மணமகன் வீட்டாரும் திருமண ஒப்புதலுக்கு அறிகுறியாக வெற்றிலை பாக்கு மாற்றிக் கொள்ளும் சடங்கு, [ நிச்சய தாம்பூலம் ] (நாள்வைத்தல்)

கெட்டி மேளம் – இடைவிடாமல் தட்டப்பெறும் மேளம்.

வீடு அறிதல் – மணமானபின் மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்தவர்கள் பெண்வீட்டிற்கும், பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்கும் வந்து வீட்டை அறிந்து கொள்ளல்.

கேதம் – இழவுச் செய்தி.

சடலை, சல்லை – துன்பம்; தொல்லை.

ஆக்கினை – சின்னு பின்னம் செய்தல்; தண்டனை.

முண்டு – மரக்கட்டை.

சிணுக்குதல் – புலைதல்;

சீப்பட – சீரழிய.

உடையடித்தல், காயடித்தல் – ஆடுமாடுகளுக்குள்ள விந்துப் பையைச் சிதைத்தல்.

பிளுத்துதல் – பிதற்றுதல்.

கடுப்பு – கவை போன்றது. உடையடித்தலுக்குப் பயன் படும்; பானையை நசுக்கிப் பதநீர் இறக்க உதவும்.

கடுப்பு – எரிச்சல். *

---

## உறுப்பினர்கள் கவனிக்க.

பணம் விடுக்கும் பொழுதும், மடல்கள் எழுதும் பொழுதும் உறுப்பினர்கள் தங்கள் உறுப்பினர் எண்ணைத் தவறாது குறிப்பிட வேண்டுகிறேம். முகவரி மாற்றங் கோரும் உறுப்பினர்கள் தங்களின் பழைய முகவரியையும், புது முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடுக.

ஆமைச்சர் 'தென் மொழி'

# நூல் நிறை

## இந்தி எதிர்ப்புப் பாடல்கள்

விலை 'உரு' காசுகள்

ஆசிரியர். அறந்தை-திருமாறன்

கல்யாணி பதிப்பகம்
திருச்சிராப்பள்ளி - க

உள்ளத்தின் அடித்தளத்தில் மூங்கிக் கிடக்கும் பேருணர்வின் வெளிப்பாடே பாட்டு என்கின்ருர் இந்நூலின் பதிப்பாசிரியர். அவ்வெளிப்பாடு பாட்டுமட்டுமன்று, கதையாகவும், மெய்ப்பாடாகவும் இருக்கலாம். அதிலும் அவ்வுணர்வின் தாறுமாருன வெளிப்பாடு மட்டுமே பாட்டும் கதையுமாகி விடுவதில்லை. பாட்டைப் பொறுத்த மட்டில், உணர்வை ஒழுங்கு படுத்தி நுணுகிய சொல், அணி நயங்களான் வெளிப்படுத்தும் பாங்கில்தான் அதன் சிறப்பு அடங்கியுள்ளது. அச்சிறப்பு நோக்கியே பாட்டுகளுக்கு இலக்கண வரம்புகள் வகுக்கப் பெற்றுள்ளன. இக்கால், புதுமை( ! )நோக்கினர் அவ்வரம்புகளைப் பேணுமையால்தான் பாட்டுகளும் சிறப்பதில்லை.

இனி, ''பாட்டு என்பது புதுமையும், புரட்சியும் நிறைந்ததாய் இருக்கவேண்டும்; ஆக்கப் பணிக்கு ஊக்க மூட்டுவதாயும், குமுகாய மலர்ச்சிக்குத் துணை செய்வதாயும்'' இருக்கவேண்டும் என்று முன்னுரையில் கூறும் ஆசிரியர், பாட்டு, செறிவும், நுட்பமும் சொல்லாழமும் நிறைந்ததாய் இருக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டிருந்தால் தாம் எண்ணி முனைந்த பணியை இன்னும் செப்பமாய்ச் செய்திருக்கலாம். ஆசிரியர் கூறிய வாறே இவர்தம் பாடலில் புதுமையும், புரட்சியும் இருக்கின்றவோ எனின் அவற்றையுங் காண்கிலோம். செப்பமான அணி ஒழுங்குகளால்தான் புதுமை அமையப் பெறுமே யல்லாது, முரண்பட்ட சொற்ருெடர்களைப் பின்னித் தருவதில் அமையப் பெருது. அவ்வாறே புரட்சி என்பதும் பரபரப்பான சொல்லடுக்குகளால் ஏற்படுவ தொன்றன்று. உள்ளத்தில் ஊடுருவி உணர்வுகளைக் கீண்டும் பெற்றிமையே புரட்சியின் வித்தாக முடியும். அவ்வுணர்வுக் கீறலின் வழி ஆக்கமும், ஆக்கப் பணிகளான் மலர்ச்சியும் ஏற்படுதல்இயல்பே. இனி, இந்நூலில் சிறப்பதுதான் என்னெனில் நோக்கம் ஒன்றே! அந்நோக்கத்தை முறையாக வெளிப்படுத்தும் ஆர்வத்தையும் பாடும் ஆர்வமே விஞ்சி விட்டதால், அயன்மொழி விரவலும், பொருள் பொதுளாச் சொற் கோப்பும், பாட்டின் அழகைக் குன்றச் செய்கின்றன.

இனி, இவ்வாசிரியர் செய்யவேண்டுவது என்னெனின், தம் உணர்வையும் வினையாண்மையையும் முறைப் படுத்துவதில் கவனம் செலுத்துவதே. தமிழுக்கு நலம் பயப்பதும் அஃதே.

'கனல்'

# கட்டுரையாளர் கவனிக்க !

நூல் ஆராய்ச்சித் துறை ஒன்றே கட்டுரைகள் எழுதுதற்குரியதாகப் பெரும்பாலார் கருதுவதாகத் தெரிகின்றது. பண்டைத் தமிழ் இலக்கிய நயம் பாராட்டி எழுதுதலே புலமைக்கு அடையாளம் என்றும், கம்பஇராமாயணத்தையும், பழங்கதைகளையும் கடிந்து எழுதுதலே புதுமை, சீர்திருத்த மனப்பான்மைக்கு அடையாளம் என்றும் அவர்கள் கருதுகின்றனர் போலும்.

தாமாக எண்ணித் தம் உள்ளார்ந்த அறிவால் வாழ்க்கையின் பல சிக்கல்கட்கு விடை காணுவதாக எழுதப்பெறும் கட்டுரைகள் வருவதே இல்லை எனலாம். கட்டுரை எழுதுவதை ஒரு நாகரிகமாகக் (fashion) கருதி எழுதப்பெறும் சார்புநிலைக் கட்டுரைகளே மிகுதியும் வருகின்றன.

சிலப்பதிகார ஆராய்ச்சி, மணிமேகலை விளக்கம், கம்பனின் நிறையும் குறையும், வான்மீகியின் பாவிய அமைப்பு, நற்றிணை நயம், குறுந்தொகைச் செல்வம் இவைபோன்ற கட்டுரைகளே எவ்வகைப் புதுநோக்குடனும் அணுகப் பெறுமல் திரும்பத் திரும்ப வந்துகொண்டிருப்பதால் எப்பயனும் விளைவதில்லை என்பதோடு அதற்குமேல் நாம் எட்டிப் பிடிக்க வேண்டுவன, நம் அறிவு, உணர்வு வளர்ச்சிக்கு வேண்டுவன எவையுமே இல்லை என்று நாமே ஒரு வட்டம் போட்டுககொள்வதாகவும் ஆகின்றது.

வளர்ந்துவரும் அறிவியலுக்கேற்பப் பல பதிய துறைகளில் மக்கட்கு எத்துணையோ செய்திகள் தெரிவிக்கப்பட வேண்டியுள்ளன. மக்களின் வாழ்வியல் துறைகள பலவற்றையும் அணுகி அறிவு கொளுத்த வேண்டியுள்ளது. தமிழ்ப் பேராசிரியன்மார் தாம் இவற்றை அணுகுவதில்லை. இளங்கோவின் காலத்தைப் பற்றி, சாத்தனரின் பாநயம பற்றி, வள்ளுவரின் 'சமயம்' பற்றி இன்ன பேராசிரியர் இன்ன கருத்து உடையார் என்று மக்கள் தங்களைப் பற்றிக் கூறிக் கொள்வதனை அவர்கள் விரும்பிக் கொண்டிருக்கலாம்; இருக்கட்டும். கல்லூரிகளில் பல்துறை அறிவு புகட்டும் அறிவியல் பேராசிரியர்களும, புதுநோக்கு

---

(48-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருப்படலமா? இது பெரியாரின் இன்றைய கோட்பாடாயின் அவரை அடியொற்றிப் பின்பற்றும் தமிழர்களின் நிலை என்னவது? இத்துணை வெளிப்படையாகப் பெரியார் தனது கொள்கையைக் கூறிய பின்னரும் அவரடி வருடி வாழும் தமிழர்க்குத் தன்மானம் எங்கு ஒளித்ததோ?

முடிபு:- தமிழ் நாட்டிற்கும் தமிழுக்கும் கேடுபயக்கும் இந்தியை அன்று எதிர்த்தவர், இன்று வரவேற்கிருர் எனின் அது நுண்மதியுடையோர் நோக்க வேண்டிய ஒன்றே! இதற்குக் காரணியம் யாதாயினும் அவர் பேச்சு தமிழர்க்கு ஊறு விளைவிக்கும் திறத்ததாய் அமைந்திருப்பது மிக்கத் துயர் தருவதொன்ரும். தமிழ் வளமும் தமிழர் நல்வாழ்வும் நாடும் எவர்க்கும் பெரியாரின் இன்றைய போக்கு கவலையே தரும் என்பது ஒருதலை. இனியும் அவர் பேச்சை நம்பி அலமரல் வேண்டா வென்று தமிழர் அனைவரையும் வேண்டுகின்ரும். எண்ணித்துணிக கருமம். ⁜

## சில் என்னுஞ் சொல் சிறுமையைக் குறிக்கும் !

சில்-சிறுமை, அற்பம். சில்-சிள்-சிறு.
சிலர்-சிறு எண்ணிக்கை உடையவர்.
சிலாம்பு-சிறிய துகள்; செதில். சிருய்த்தல்-சிறிய காயம்.
சில்லறை-சிறு காசுகள். சில்லி-சிறு கீரை.
சிலுவணி-சிறு காதணி. சிலுநீர்-சிறு சிறு துளியாக விழும் நீர்.
சிலுக்கு-பெரிய துண்டிலிருந்து வெட்டிய சிறு துண்டு.
சிலுவட்டை-சிறியவன். சில் காற்று-மென்காற்று.
சில்குதல்—சுருங்குதல். சில்லரி—சிலம்பினுள்ளிருக்கும் சிறுபரல்.
சில்லாங்குச்சி-சிறு குச்சி விளையாட்டு; கிட்டிப்புள்.
சில்லாடை-பனைமரச் செதில்.
சில்லிக்காது - காதின் ஒரு பகுதியான சிறு காது.
சில்லி மூக்கு-மூக்கினுள்ளிருக்கும் சிறு மூக்கு.
சில்லிக்கோல்—ஒருவகைச் சிறுகோல்; சில்லி அகப்பை-சிறு அகப்பை.
சில்லி அடை-சிறு சிறு கண் உள்ள சல்லடை.
சில்லிறை-சிறுவரி.
சில்லுக் கருப்பட்டி-சிறு துண்டுகளாக வார்த்த பனை வெல்லம்.
சில்லுணு—சிற்றுண்டி; சிறுதீனி. சில்லை-சிறுமை; இழிவு.
சில்வாய்-கடைவாய். சில்வானம்—சிறு தூறல்; மீத்து வைக்குஞ் சிறு பொருள்.
சில்லான்-குட்டி ஓணன். சின்னீர்-சில் நீர்-சிறு நீர்-கொஞ்சம் நீர்.

---

உடைய அவர்தம் மாணவர்களும் இத்தகைய துறைகளில் தேவையான, பயனுள்ள கட்டுரைகள் எழுத வேண்டுகின்ரேம். அறிவியல் பட்டங்கள் பெற்றவர்தாமும் மொழி, இலக்கியத்துறைகளில் எழுதுவதே பெருமை என்று கருதித் தாம் தெளிவுபெருத அத்துறைகளிற் புகுந்து அவற்றிலும் செப்பமின்மையைப் பெருக்கித் தாமும் மதிப்பிழந்து போவதை விட்டு தத்தம் துறைகளில் தமக்கு நன்கு கைவரும் புதிய செய்திகளை எழுதுதல் எத்துணைச் சிறப்பாகும்! பல்லவர் வரலாற்றையும் பாண்டியர் வரலாற்றையுமே பேசிக்கொண்டிராமல், உலக அறிவியல் பெரியார்கள், அருட்பெருஞ் சான்ரேர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தமிழில் எழுதிக் குவியுங்கள்!

குமுகாயவியல், (Sociology) மாந்தவியல், மனவியல் போன்ற துறைகள் எத்தனை எத்தனை!...... அவற்றின் அறிவுச் செல்வங்களை எல்லாம் தமிழுக்கு அள்ளி வழங்குங்கள்! மொழியாக்கத் திறனுடையோர், மொழியாக்கக் கட்டுரைகளை எழுதுங்கள். சொந்தமாக எண்ணும் திறனுடையோர், சொந்தக் கருத்துகளைக் கட்டுரையாக்குங்கள்! எல்லாவற்ருலும் தமிழன்னைக்குப் புத்தணி பூணுமாறு கட்டுரையாளர்களை வேண்டிக்கொள்ளுகின்ரேம்.